# சோசலிசமும் முதலாளிய மீட்சியும்

*

கோ. கேசவன்

# சோசலிசமும் முதலாளிய மீட்சியும்

கோ. கேசவன்

புதுமைப் பதிப்பகம்
20, மேல சாராயபட்டறை தெரு,
உறையூர், திருச்சி-3.

சோசலிசமும்
முதலாளிய மீட்சியும்
(SOCIALISM AND
CAPITALIST RESTORATION)

கோ. கேசவன்

© ஆசிரியர்

முதல் பதிப்பு ஜூலை 1990

வெளியீடு
புதுமைப் பதிப்பகம்
திருச்சி

விற்பனை உரிமை
சரவணபாலு பதிப்பகம்
33-சி, கீழ் செட்டித்தெரு,
விழுப்புரம் - 605 602.

அச்சும் அமைப்பும்
மீரா அச்சகம்
புதுக்கோட்டை

பக்கம் 2+132

விலை : ரூ. 12-00

# சோசலிசமும் முதலாளிய மீட்சியும்

1848 இல் ஐரோப்பாவைப் பொதுவுடைமைப் பூதம் பிடித்தாட்டுவதாகக் காரல்மார்க்சும் ஏங்கெல்சும் குறிப்பிட்டனர். 140 ஆண்டுகளுக்குப் பின்னர் பொது வுடைமையை ஐரோப்பியப் பூதம் பிடித்தாட்டிக் கொண்டிருப்பதாக முதலாளிய விமரிசகர்கள் இன்று கேலிச்சித்திரம் வரைகின்றனர். இதுபோன்ற விமரி சனங்கள், மார்க்சின் காலத்திலும் எழுந்ததுண்டு. சோசலிசக் கருத்தமைப்பே ஒரு வரலாற்றுப் பிழை என்றும் அது சித்தப்பிரமையாளனின் அதீதக் கற்பனை என்றும் குறிப்பிட்டனர். இவற்றுக்கெல்லாம் பதில் கொடுத்து மார்க்சும் ஏங்கெல்சும் **விஞ்ஞான சோசலிசம் பொதுவுடைமையின் முதல் கட்டம்** என நிறுவினர். இவை சோசலிச அமைப்பு ஏற்படுதலுக்கு முந்தைய கருத்துப் போராட்டங்களாகும்.

முதல் உலகப் போரில் ரசியாவிலும் இரண்டாம் உலகப் போருக்குப் பின் சீனாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் அதன்பின் இந்தோசீன நாடுகளிலும் சோசலிசக் கட்டமைப்பு உருவாயிற்று. எனினும் இன்று உலகில் எங்கும் சோசலிச நாடுகள் இல்லை என்பது

கசப்பான அரசியல் யதார்த்தம். அதாவது நிறுவப்பட்ட **சோசலிசத் தளங்கள் அனைத்தும் தகர்ந்து விட்டன.** உலகில் இப்பொழுது பொதுவுடைமைப் புரட்சிகர இயக்கங்களும் புரட்சிகர சிந்தனையாளர்களும் மட்டுமே உள்ளனர். சோசலிசத் தளத்தைப் பொறுத்து **உலகம் 1917 நவம்பருக்கு முந்தைய கட்டத்தில்** உள்ளது-பல புதிய அனுபவங்களோடும் படிப்பினைகளோடும்.

எந்தவொரு நாடும் சோசலிசத் தளத்தை நிரந்தரப் படுத்திக் கொள்ளவில்லையென்றால் — இயலவில்லை யென்றால்—சோசலிசக் கருத்தமைப்பே ஒரு வரலாற்றுப் பிழையா? அவ்வாறு இல்லையென்றும் சோசலிசத் தளங்கள் **வரலாற்றில் பின்னடைவுக்கு** உள்ளாயின என்றும் சிலர் குறிப்பிடுவர். அப்படியென்றால் வரலாற்றில் பின்னடைவுக்கு உரிய புறவய—அகவயக் காரணங்கள் யாவை? இத்தகைய பின்னடைவு எல்லா சோசலிச நாடுகளிலும் தவிர்க்க இயலாத நிகழ்வாக இருந்திருக்கத்தான் வேண்டுமா? அதாவது உலகில் சோசலிசத் தளங்கள் உருவாகி, பின்னடைவுக்கு உள்ளாகியே தீரும் என்பது பொதுவான கோட் பாடாகவே உருக்கொண்டுள்ளதா? சோசலிசத் தளங்கள் தகர்ந்தபின் இனி உலகில் சமுதாயப் புரட்சிக்கான இலக்கும் திசைவழியும் யாவை? என்பன போன்று பல கேள்விகள் எழுகின்றன. இவை **முற்றிலும் புதியவை அன்று.**

இவை ஏன் புதியவையாக இல்லை? அண்மையில் ரசியா, சீனா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு இப்பொழுதுதான் அந்நாடுகளில் சோசலிசத் தளங்கள் தகர்ந்து போயுள்ளன என சர்வதேச முதலாளியப் பத்திரிகைகள் குதூகலிக்கின்றன. ஆனால் இத்தகைய மாற்றங்களுக்கான சூழ்நிலைகள் பத்தாண்டுகளுக்கும் முன்னரே தோன்றி, அந்நாடுகளின் சோசலிசத்

தன்மையில் ஒரு பண்பியல் மாற்றமே நிகழ்ந்துவிட்டது என உலகம் முழுவதும் உள்ள புரட்சியாளர்கள் கருதினர். ஆகவே மேற்குறித்த கேள்விகள் முற்றிலும் புதியவை அன்று.

எனினும், அண்மை மாற்றங்கள் மேலும் சில கேள்விகளை எழுப்பியுள்ளன. பத்தாண்டுகளுக்கு முன்னர் உலகப் புரட்சிகர சக்திகள் கணித்த மாற்றங்களுக்கும் இன்றைய மாற்றங்களுக்கும் என்ன வேறுபாடு? என்ன தொடர்பு? வேறுபாடு எனில், பண்பியலா? அளவியலா? அண்மை மாற்றங்களில் முதலாளிய சக்திகள் ஏன் குதூகலித்து லயித்து நிற்கின்றன? இந்தக் கேள்விகள், புதியவை. புதியவையாயினும் பழையவையாயினும் இன்றைய சகாப்தத்தில் சோசலிச நிர்மாணத்தில் எழும் தத்துவப் பிரச்சனைகள் ஆகும். விரிவாக எழுதப்பட வேண்டிய இவை குறித்து ரசிய மற்றும் சீன அனுபவங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஓர் அறிமுக வுரையாகச் சிலவற்றைக் காண்போம்.

# 1

விஞ்ஞான சோசலிச சமூகத்தின் அரசியல், பொருளாதாரம் ஆகியவை பற்றிய கோட்பாட்டு உருவாக்கத்தையும் சோசலிசப் புரட்சி நடைபெற விருக்கும் சாத்தியமுள்ள நாடுகள் பற்றிய கருதுகோள் களையும் **மார்க்சும் ஏங்கெல்சும்** விளக்கினர். பல்வேறு வகைப்பட்ட சோசலிசங்கள் பற்றிய கருத்துகள் நிலவிய சூழலில், பாட்டாளி வர்க்க சோசலிசம் பற்றிய கருத்தை நிறுவி, சோசலிசம் என்பது பொதுவுடைமைக்கு மாறிச் செல்லும் இடைக்கட்டம் என்றும் பொதுவுடைமையின் முதல் கட்டம் என்றும் விளக்கியதே மார்க்சின் பங்களிப்பில் முதன்மை வாய்ந்ததாகும். 1845 முதற் கொண்டு வெளிவந்த மார்க்சியப் படைப்புகளில் காணக் கிடைக்கும் குறிப்புகளை வைத்து பின்வருமாறு தொகுக்கலாம்.

## A) சோசலிசக் கோட்பாட்டு உருவாக்கம்

### *1.* **பொருளாதாரம்**

அ) உற்பத்தி சாதனங்களின் சமூகவுடைமை, இவற்றின் மீதான தனியுடைமையை ஒழித்தல். மூலதன இயல்பிலிருந்து இவற்றை விடுவித்தல்.

ஆ) முதலாளிய சமூகத்தின் பொருளாதார விதிகள் சில தொடர்ந்து செயல்படும் (எ-டு. பண்டப் பரிவர்த்தனை)

இ) திறமைக்கு ஏற்ப உழைப்பு; உழைப்புக்கு ஏற்ற ஊதியம். இதனால் சமத்துவமற்றநிலை தொடரும்.

ஈ) பெருந்தொழில்களும் பெருநிலவுடைமையும் பறித்தெடுக்கப்படும்.

உ) சிறு விவசாயிகள் தனியுடைமை உற்பத்தியிலிருந்து கூட்டுடைமை உற்பத்திக்கு மாறுதல். இதில் பலவந்தம் கூடாது. எனினும் அரசதிகாரம் கைப்பற்றப்படும் சூழலைப் பொறுத்து இது அமையும்.

2. *அரசியல்*

அ) வர்க்கங்கள் நீடிப்பதால் அரசு தேவைப் படுகிறது. இதன் வடிவம் **பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்.**

ஆ) புரட்சிக்குப்பின் **அரசை** ஒழிக்க வேண்டும் என்பது **அராஜக அபத்தம்.** முதலாளி வர்க்க எதிரிகளை அமுக்கி வைக்க பாட்டாளி வர்க்க அரசு இல்லையெனில் மொத்த வெற்றியுமே தோல்வியில் போய் முடியும்.

## B) கருதுகோள்

இத்தகைய சோசலிசப்புரட்சி, மிகவும் முன்னேறிய நாடுகளில்—குறிப்பாக இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு ஆகியவற்றில்—ஏற்படும். முன்னேறிய நாடுகள் அனைத்தும் ஒரே நேரத்தில் தாக்கப்படலாம். ஒரு தனி நாட்டில் சோசலிசப்புரட்சி சாத்தியமில்லை.

மார்க்சியக் கோட்பாடு உருவாக்கமும் கருதுகோளும் உதித்த சூழல் முக்கியமானது. முதலாளிகட்கு இடையில் சுதந்திரமான போட்டி இருந்த காலம்;

முதலாளியம் தம்மை ஏகபோகமாக வளர்த்தெடுக்காத காலம். இக்காலத்தில் முதலாளிய நாடுகளில் உள் முரண்பாடுகள் முற்றி சோசலிசப் பேரலைகள் எழும்பும் என மார்க்சு கருதினார்.

முதலாளியம் வளர்ந்தது. சுதந்திரமான போட்டி முறையில் இருந்து வளர்ச்சியுற்று 19ம் நூற்றாண்டின் இறுதியில் தம்மை ஏகபோக முதலாளியாக உரு வெடுத்துக்கொண்டது. ஏகாதிபத்தியங்கள், குடியேற்ற நாடுகள் ஆகியவை உருவாயின். ஏகபோக டிரஸ்டுகள் குறித்தும் அவற்றின் பொருளாதார அராஜகவாதம் குறித்தும் ஏங்கெல்சு எழுதியுள்ளார். (காவுட்ஸ்கிக்குக் கடிதம் 29—6—1881) இந்தப் பொருளாதார வளர்ச்சியை ஆராய்ந்து,முதலாளியம் தன் உள் முரண்பாடுகள் முற்றி சோசலிசமாக உருவெடுக்கும் என்ற மார்க்சின் கருதுகோள் தவறானது என முதலாளிய விமரிசகர்கள் கருதினர். 19ஆம் நூற்றாண்டு இறுதி முதல் உள்ள இந்த நிலைகளை ஆராய்ந்து இந்த சகாப்தத்திலும் சோசலிசப்புரட்சி சாத்தியம் என லெனின் கருதுகோளை உருவாக்கினார். போட்டி என்பது இப்போது முதலாளிகட்கு இடையில் இல்லாமல் ஏகபோகங்களுக்கு இடையிலானதாக மாறிவிட்டது என்றும் உலகநாடுகள் உலகப்பொருளாதாரச் சங்கிலியின் கண்ணிகளாக மாறி, சமனற்ற வளர்ச்சி நிலையில் உள்ளன என்றும் லெனின் முடிவுகண்டார். இந்தப் பொதுவான அரசியல் பொருளாதார சூழலில் சோசலிசப் புரட்சியின் சாத்தியம் குறித்து லெனின் தம் கருதுகோள்களை முன் வைத்தார்.

அவை:

1. முன்னேறிய முதலாளிய நாடுகளில்தான் சோசலிசப் புரட்சி ஏற்படும் என்பதில்லை. பின்னடைந்த நாடுகளிலும்-பலவீனமான கண்ணியைப் பொறுத்து —ஏற்படலாம். உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடை

யாமல் முதலாளி, தொழிலாளி என்று சமூகசக்திகள் துல்லியமாக அமையாமல் இருப்பினும் புதிய வகைப்பட்ட முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் ஊடே சோசலிசப் புரட்சி சாத்தியமாகும்.

2. வெவ்வேறு நாட்டிலும் வெவ்வேறு காலங்களிலும் சோசலிசப்புரட்சி சாத்தியம். உலகில் முழுமையும்—அல்லது ஒரு சில நாடுகளில் முழுமையும்—ஒரே நேரத்தில் சோசலிசப் புரட்சி நடந்தாக வேண்டிய தில்லை. தனி ஒரு நாட்டிலும் சோசலிசப் புரட்சி சாத்தியம்.

இந்த மார்க்சிய—லெனினியக் கருதுகோள்கள், இதற்கு முந்தைய மார்க்சியக் கருதுகோள்களை **நிராகரித்தன** இந்த நிராகரிப்பு, முன்னேறிய தன்மை யுடையது. இந்த **நிராகரிப்பின்றி வளர்ச்சி இல்லை.** சோசலிசம் குறித்த மார்க்சியக் கோட்பாடுகளை நிராகரிக்க முயன்ற முதலாளிய அறிவாளிகள் முன்னிலையில், மார்க்சியக் கருதுகோள் ஒன்றை நிராகரித்து விஞ்ஞான சோசலிசக் கோட்பாட்டை லெனின் உயர்த்திப்பிடித்தார். இவை ஏகாதிபத்தியமும் உலக சோசலிசப் புரட்சிகளும் கொண்ட லெனினிய சகாப்தத்தின் கருதுகோள்களாகும்.

இந்த மார்க்சிய லெனினியக் கருதுகோள்கள் இருபதாம் நூற்றாண்டில் நிரூபிக்கப்பட்டு, அரசியல் யதார்த்தமாயின. சோசலிசத்தை வரலாற்றுப்பிழை என நிரூபிக்க முயன்ற முதலாளிய அறிவாளிகள் மீண்டும் ஒருமுறை தோற்றுப் போயினர். ரசியா, சீனா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இந்த வரையறையின்படி சோசலிச நாடுகளாயின. **இன்றைக்கும்** உலகம் லெனின் வரையறையில் ஏகாதிபத்திய சகாப்தத்தில் இயங்கு வதால் **உலகில் சோசலிசப் புரட்சிகள் சாத்தியம் என்பதைக் கோட்பாட்டு அளவில் மறுக்க இயலாது.**

எனினும் இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய அரசியல் பொருளாதார நிகழ்வுகள் லெனினிய வரையறையில் பல **அளவுச் சேர்க்கைகளைச்** (quantitative additions) சேர்த்துள்ளன.

அவையாவன :

1. இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலகளாவிய போர் இல்லையெனினும் மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏகாதிபத்தியங்கள் ஏற்றுமதி செய்யும் **வட்டாரப் போர்கள்** (Regional wars).

2. முதலாளிகளிடமிருந்து ஏகபோகங்கள் உருவானது போல, ஏகாதிபத்தியங்களிடமிருந்து **பெருவல்லரசு நாடுகள்** என்ற தனியினம் உருவாதல்.

3. மூன்றாம் உலக நாடுகளைத் தடையற்ற விதத்தில் ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்த இயலாதபடி மூன்றாம் உலக நாடுகட்குக் கிடைத்த **அரசியல் பேர ஆற்றல்**.

4. 1960கள் முதற்கொண்டு உலக சோசலிசத் தளங்கள் தகர்ந்து போதலும் அதனால் ஏற்பட்ட கருத்தியல் விளைவுகளும்.

இத்தகைய அளவுச் சேர்க்கைகள் லெனினிய வரையறையில் பண்பியல் மாற்றங்களைக் கொணர்ந்து விடவில்லை. ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான மோதல், சமனற்ற பொருளாதார வளர்ச்சி, உலகப் பொருளாதார அமைப்பில் பலவீனமான இணைப்பு ஆகியவை தொடர்ந்து தம் கோர விளைவுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இன்றைய காலத்திலும் உலக சோசலிசப் புரட்சிகள் சாத்தியமே. எனவே சோசலிசத்தை ஒரு வரலாற்றுப்பிழை என்பது பிழையான வரலாறாகும்.

எனினும் இந்த அளவுச் சேர்க்கைகள் புரட்சிகர உணர்வின் பெருக்கத்தை கூடுதலாக வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. சோசலிசப்புரட்சிகளைத் தள்ளிப் போடுவதும் உருவான புரட்சியின் விளைவுகளைச் சீர் திருத்தவாதத்துக்கு ஆட்படுத்துவதும் (Reforming the Revolutions) உலக முதலாளியத்தின் தந்திரங்களாக இருக்கும் இன்றைய காலத்தில் புரட்சிகர உணர்வின்/ செயல்பாட்டின் பெருக்கம்—லெனின் காலத்தைவிட பன்மடங்கு கூடுதலாகத் தேவைப்படுவதையே இந்த அளவுச் சேர்க்கைகள் வலியுறுத்தி நிற்கின்றன. இனி உலக சோசலிசத்தளங்களின் தகர்வையும் அவற்றின் படிப்பினைகளையும் பற்றிய கோட்பாடுகளைத் தொகுத்துக்கொள்வோம்.

## 2

முதலாளியப் புரட்சிக்கும் சோசலிசப் புரட்சிக்கும் இடையில் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. முதலாளியப் புரட்சி நடைபெறுவதற்கு முன்னரே அந்த நாட்டில் முதலாளியப் பொருளாதாரக் கூறுகள் காணக்கிடைக் கும். அவற்றைத் தொகுத்து, விரிவாக்கம் செய்தலும் அதற்குரிய அதிகார அமைப்பை நிறுவுதலும் முதலாளிய புரட்சியின் பணிகளாகும். ஆனால் சோசலிசப் புரட்சியில் அரசதிகாரமே முதலில் புரட்சியாளர்களின் கைக்கு வருகிறது. பின்னரே பொருளாதார நிர்மாணப் பிரச்சினை எழுகிறது. லெனின் சொல்வதுபோல முதல் வெற்றி அரசியல், இராணுவ ரீதியிலாகும்; இரண்டாவ தாகவே பொருளாதாரப் பணி தொடங்குகிறது. இரண்டாவது பணி முழுமையடைவதைத் தொடர்ந்தே அந்த சமூகம் பொதுவுடைமைக்குச் செல்லும்.

இதில் கூட லெனினியத்தின் நுட்பாமன பங்களிப்பைக் காண இயலும். சோசலிசப் புரட்சிக்குரிய முன்னிபந்தனையாக முன்னேறிய நாடுகளின் தொழில் வளர்ச்சியை மார்க்சு கண்டறிந்தார். ஆனால் ஏகாதிபத்திய சகாப்தத்தில் பின்னடைந்த நாடுகளில் கூட சோசலிச அரசியல் புரட்சி சாத்தியம் என்பதைக் கண்டறிந்து அந்நாடுகள் புதிய வகைப்பட்ட ஜனநாயகப் புரட்சியின் ஊடாக சோசலிசப் பொருளாதார நிர்மாண காலத்துக்கு சென்றடைய முடியும் என லெனின் கூறினார். 1905இல் லெனினியக் கண்டுபிடிப்பு, 1940களில் மாசேதுங்கின் புதிய ஜனநாயகக் கோட்பாட்டுக்கான அடிப்படையாகும். இங்கு லெனின், மார்க்சிய நிலைபாட்டை வளர்த்தெடுக்கிறார். பொதுவுடைமைக்கு மாறிச் செல்வதற்கு உரிய இடைக் கட்டம் சோசலிசம் என்ற மார்க்சிய நிலைபாட்டை, **சோசலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய ஓர் இடைக்கட்டமும் தேவை** என்று லெனின் வளர்க்கிறார். சோசலிசம் குறித்த கோட்பாட்டுப் பங்களிப்புகளில் முதன்மையான இதைத் தொடர்ந்து, இன்னமும் இரண்டு அம்சங்களில் லெனினிய நிலைபாட்டைக் காண்பது பொருத்தமாகும்.

1. ஒரு தனி நாட்டில் சோசலிசப் புரட்சி சாத்தியமெனில், அந்த நாட்டில் சோசலிசப் பொருளாதாரப் புனர்நிர்மாணம் முழுமையடைவது சாத்தியமா?

2. ஒரு சோசலிச சமுகம், சமூக வரலாற்று விதிகளின்படி முன்னோக்கித்தான் செல்லுமா? இல்லை, பின்னடைவுக்கு உள்ளாகும் சாத்தியம் ஏற்பட்டுவிடுமா? அதாவது சோசலிசத்துக்கு அடுத்து பொதுவுடைமைக்குச் செல்லாமல், முதலாளிய மீட்சி நடைபெறுவது சாத்தியமா? அல்லது சோசலிசமும் அல்லாமலும் முதலாளியமும் அல்லாமலும் ஒரு நிலையை உருவாக்குதல் சாத்தியமா?

இவை குறித்து லெனின், மாவோ ஆகியோர் கருத்துரைத்துள்ளனர். ரசிய போல்சிவிக் கட்சிக்குள் எழுந்த கருத்து மோதல்களின் பொழுது **ஸ்டாலின், டிராட்ஸ்கி** ஆகியோர் இது குறித்துப் பங்காற்றியுள்ளனர். இது குறித்த ஆய்வுகள் பல நாடுகளில் பல அறிஞர்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. புரட்சிக்குப் பிந்தைய சமூகங்கள் குறித்து ஆய்வு செய்த ஜார்ஜ் தாம்சன், பால் எம். சுவீசி, சார்லஸ் பெத்தல்ஹீம், சு சரவோ ஷி ஆகியோர் இது குறித்துத் தம் ஆய்வுகளை வெளியிட்டுப் பங்களித்துள்ளனர். இவற்றைக் காண்போம்.

ஒரு தனி நாட்டில் சோசலிசப் புரட்சி சாத்தியம் என்றும் அங்கு சோசலிசத்தைத் தொகுத்துக்கொள்வதும் பராமரிப்பதும் சாத்தியம் என்றும் லெனின் குறிப்பிட்டார். ஆயின் உலக முதலாளிய அரசியல் பொருளாதார இராணுவச் சூழலில் பெரும்பாலான நாடுகள் சோசலிசக் கட்டமைப்புக்குள் வராதவரையில் ஒரு தனி நாட்டில் சோசலிசத்தின் இறுதி வெற்றி சாத்தியமில்லை என்றும் குறிப்பிட்டார். லெனினுக்குப் பிறகு முதன்மை பெற்ற விவாதங்கள் இன்றளவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. டிராட்ஸ்கி, பின்னடைந்த ஐரோப்பாவை வைத்துக் கொண்டு ரசியாவில் சோசலிசத்தைப் பராமரிக்க எண்ணுதல், நம்பிக்கை அற்றதாகும் என்றார். லெனினுக்குப் பிறகு அதிகாரத்துக்கு வந்த ஸ்டாலின், ஏனைய நாடுகளின் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் பூர்வாங்க வெற்றி எதுவுமின்றியும் கூட, ஒரு நாட்டில் சோசலிசம் வெற்றி பெறக் கூடிய சாத்தியத்தைக் காண்பதாகக் குறிப்பிட்டார் (Problems of Leninism, p. 212). சோசலிச நாட்டின் உள் முரண்பாடுகளையும் சோசலிச நாட்டுக்கும் உலக முதலாளியத்துக்கும் உள்ள முரண்பாடுகளையும் பகுக்கவியலாத ஒன்றின் இரட்டை நிலைகளாக ஒருங்கிணைத்து

லெனின் கண்டறிந்தார். ஸ்டாலின் ஒரு சோசலிச நாட்டின் இறுதி வெற்றிக்கு, அதன் உள் முரண்பாடு களை மட்டுமே கண்டார். டிராட்ஸ்கி வெளி முரண்பாடு களை மட்டுமே கண்டார். ஆகவே பெரும்பாலான நாடு களில் புரட்சிகளின்றிக் கூட ஒரு நாட்டில் சோசலிசம் இறுதி வெற்றி பெற இயலும் என ஸ்டாலின் முடிவுக்கு வந்தார். டிராட்ஸ்கி அவையின்றி, புரட்சியின் பயன் களைப் பராமரிக்க இயலாது என்றார். இவை இரண்டும் முரண்பாடுகளின் அனைத்துந் தழுவிய தன்மையைக் (universality of contradictions) கணக்கிலெடுக்க வில்லை. ரசிய சோசலிச அமைப்புக்கு ஸ்டாலினியத்தின் மகத்தான பங்களிப்புகளுக்கு ஊடே இதையும் கணக்கி லெடுத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது அம்சம் — ஒரு சோசலிச நாட்டில் முதலாளிய மீட்சியின் சாத்தியம். இது முதல் அம்சத் தோடு தொடர்புடையதாகும். பாட்டாளி வர்க்கம் தான் **வென்றெடுத்த அதிகாரத்தைக் கொண்டு முதலாளி வர்க்க எதிரிகளை அமுக்கி வைக்கவில்லையெனில் மொத்த வெற்றியுமே தோல்வியில் முடியும்** என ஏங்கெல்சு(12—5—1883)கருதினார். ரசியப் புரட்சிக்கு முன்னரே இத்தகைய முதலாளிய மீட்சி குறித்து லெனின் குறிப்பிட்டுள்ளார் (10 : 280; 26 : 172). **சிறு முதலாளிய முறை, குலாக்குகளின் எழுச்சி, அதிகாரி களாக உருவெடுத்த கம்யூனிஸ்டுகள்,உலக முதலாளிய இராணுவ அபாயம்** ஆகியவற்றால் பின்னடைவு — முதலாளிய மீட்சி (இது லெனினின் சொல்) சாத்தியம் என்பதை லெனின் இறுதிவரை வலியுறுத்திக்கொண்டே யிருந்தார் (27 : 337—338; 28 : 172; 31 : 493—95). இதைத் தடுத்து நிறுத்தக் கூடிய சாத்தியமான அம்சங் களெனக் கீழ்க்கண்டவற்றைத் தொகுத்தார்.

1. வர்க்க உணர்வுபெற்ற தொழிலாளர்-விவசாயிகள் இணைவு. குலாக்குகளுக்கு எதிராக ஏழை

விவசாயிகள் ஒருங்கிணைதல். அதிகார வர்க்கத் தவறுகளைச் சரிசெய்தல். தொழிலாளர்—விவசாயிகள் பண்பாட்டு அளவை உயர்த்தல்.

2. நேர்மையான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் (a jenceine—27 : 394)

சுருக்கமாகச் சொன்னால் ஒரு பட்டாளிவர்க்க சர்வாதிகார அரசின்கீழ் வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளர்—விவசாயிகள் தொடர்ந்து நடத்தும் வர்க்கப் போராட்டமே முதலாளிய மீட்பைத் தடுக்கும்; உருவான சோசலிச அமைப்பைப் பராமரிக்கும். இது **தற்காப்புநிலை ஆகும்** (Defensive). உலக முதலாளிய அமைப்புக்குள் சோசலிச அமைப்பு நடத்தும் ஊடுருவலையும் விரிவாக்கத்தையும் பொறுத்து இதுமாறிச் செல்லும். எனவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வர்க்கப் போராட்டம் என்ற இரண்டு ஆயுதங்கள் இல்லையெனில்—அல்லது அவற்றை அலட்சியப்படுத்தினால்—லெனின் குறிப்பிட்டது போல முதலாளிய மீட்சிக்குரிய நம்பிக்கை, முதலாளிய மீட்சிக்குரிய முயற்சிகளில் போய்முடியும்; முயற்சி, உறுதியாகவும் (surely) தவிர்க்கவியலாத வகையிலும் (inevitably) தொழிலாளர் அதிகாரத்தைத் தூக்கி எறிந்துவிடும் (27:337; 28:254) **இந்த நிபந்தனைகளின்றி, வரலாற்றில் பின்னடைவு தவிர்க்க இயலாதது**. சோசலிசம் குறித்த இத்தகைய லெனினியப் புரிதல்களோடு, சீனப் புரட்சிக்குப் பிந்தைய மாவோவின் அனுபவத்தைக் காண்போம்.

மாவோ இதில் லெனினியத்தைப் பின்பற்றி ரசியா மற்றும் யூகோஸ்லேவியா ஆகியவற்றின் அனுபவங்களைத் தொகுத்துக் கொண்டு சீன நடைமுறையை விமரிசித்தார். லெனின் ஒருமுறை குறிப்பிட்டார்:

> பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், வர்க்கப் போராட்டம் முடிந்து விட்டது என்பதைக் குறிக்கவில்லை.

ஆனால் அதைப் புதிய வடிவங்களில் தொடர்ந்து நடத்துதலாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது பாட்டாளி வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட்டமாகும்; தோல்வியடைந்த ஆனால் அழிந்துவிடாத முதலாளியத்தை — இன்னும் மறைந்துவிடாத முதலாளியத்தை—எதிர்ப்பை இன்னும்கைவிட்டுவிடாமல் மேலும் ஆழப்படுத்தியுள்ள முதலாளியத்தை எதிர்த்து அரசதிகாரத்தைக் கையில் எடுத்துள்ள பாட்டாளி வர்க்கம் நடத்தும் வர்க்கப் போராட்டமாகும். (விடுதலை மற்றும் சமத்துவம் ஆகிய முழக்கங்களை வைத்து மக்களை ஏமாற்றுதல் என்ற பேச்சுரையின் முன்னுரை).

சோசலிச சமூகத்திலும் முதலாளியத்தை எதிர்த்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டம் நடத்துதலை வற்புறுத்திய லெனினியத்தைக் கவனமாகப் பின்பற்றிய மாவோ சீன சமுகத்திலும் இதன் தேவையை உணர்த்தினார்.

ஐரோப்பாவில் நடைபெற்ற முதலாளியப் புரட்சிகள் ஏற்ற இறக்கங்களைக் கொண்டிருந்தன. நிலப் பிரபுத்துவம் தூக்கியெறியப்பட்ட பின்னர், நிலப் பிரபுத்துவமீட்சி பலமுறை நிகழ்ந்தன. அதிருஷ்டம் மாறி மாறி அடித்தது. இத்தகைய பின்னடைவு, சோசலிச சமூகங்களிலும் சாத்தியம் ஆகும். எடுத்துக்காட்டாக யூகோஸ்லேவியா தன் இயல்பை மாற்றிக்கொண்டு, திருத்தல் வாதமாக மாறி விட்டது. தொழிலாளர்—விவசாயிகள் நாடு, பிற் போக்கான தேசியவாத சக்திகளால் ஆளப்படும் நாடாக மாறிவிட்டது... வர்க்கப் போராட்டத்தின் இருப்பை நாம் அங்கீகரிக்க வேண்டும். பிற்போக்கு வர்க்கங்களின் மீட்சிக்குரிய சாத்தியம் உண்டு என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும்(24—9—1962

எட்டாம் மத்தியக்குழுவின் பத்தாவது பிளீனத்தில் ஆற்றிய உரை).

புரட்சிக்குப் பிந்தைய சீனாவில் பிற்போக்கு வர்க்கங்களின் மிச்சசொச்சம் இருக்கின்றது என்றும் அவர்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றும் மாவோ கட்சியினரை எச்சரித்தார் (30—1—1962). இந்தப் போக்கின் பிரதிநிதித்துவம் கட்சிக்குள்ளே உள்ளது என்பதையும் குறிப்பிட்டார். சோசலிசப் புரட்சியை நடத்தியுள்ளோமென்றும் முதலாளியம் எங்குள்ளது என்பதைக் கண்டறியவில்லை. அவர்கள் பொதுவுடைமைக் கட்சிக்குள்ளே—முதலாளியப் பாதைக்கு இட்டுச்செல்லும் சிந்தனையாளர்களாக இருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டார் (ஜனவரி 1965). இதன் சமூக வேர்களையும் மாவோ குறிப்பிட்டார்.

> ஜனநாயகப் புரட்சி முடிந்த பின்னர் தொழிலாளர்களும் வறிய மற்றும் கீழ்நிலை நடுத்தர (lower middle) விவசாயிகளும் அத்தோடு நின்றுவிடாமல் **புரட்சியைத் தொடர்ந்து நடத்தவிரும்பினர்**. அதற்கு மாறாக கட்சி உறுப்பினர்களில் பலர் **முன்னேறிச் செல்ல விரும்பவில்லை;** சிலர் பின்னோக்கியும் திரும்பத் தொடங்கி **புரட்சியை எதிர்த்தனர்**. ஏன்? அவர்கள் உயர் அதிகாரிகளாக மாறி, உயர் அதிகாரிகளின் நலன்களைப் பாதுகாக்க விரும்பினர்
>
> (மேற்கோள், Vanguard, June, 1985)

கட்சி, அரசாங்கம், இராணுவம் ஆகிய துறைகளிலும் பண்பாட்டுத்துறையின் பல பிரிவுகளிலும் ஊடுருவியுள்ள இவர்களை **முதலாளியப் பாதையாளர்கள்** என்றும் **எதிர்ப்புரட்சிகரவாதிகள்** என்றும் மாவோ வரையறை செய்தார். 'நிலைமைகள் சாதகமாகக் கனிந்தவுடனே இவர்கள் அரசியல் அதிகாரத்தைக்கைப்பற்றி பாட்டாளி

**வர்க்க சர்வாதிகாரத்தை முதலாளியவர்க்க சர்வாதிகார மாக மாற்றிவிடுவர்'** என்றும் மாவோ முன்னுணர்ந்து கூறினார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துமாறு அறைகூவல் விடுத்த மாவோ, பிற்போக்கு வர்க்கங் களின் மீது சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தும் பொழுது கட்சியையும் மக்கள்திரளையும் சார்ந்திருக்கவேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தினார் (30—1—1962). பாட்டாளிகள் தம் தலைமையைப் பொதுவுடைமைக் கட்சியின் வழியாகச் செலுத்த முடியும் எனக் குறிப்பிட்ட மாவோ, கட்சித் தலைமையில் உள்ள சிலர் தவறான பாதையைப் பின்பற்றும் பொழுது அவர்களைத்திருத்தும் வழிமுறைகளை பற்றியும் குறிப்பிடுகின்றார். கட்சிக்கும் மக்கள் திரளுக்கும் இடையிலான உறவு முறையில், கட்சியின் தவறுகளை விமரிசிக்கவும் திருத்தவும் ஆன உரிமைகளை மக்கள்திரள் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். தவறு செய்யும் கட்சித் தலைமையினர், விமரிசனம் செய்யும் மக்களைக் கண்டு அஞ்சக்கூடாதென்றும் மக்களை வெளிப்படையாகப் பேச அனுமதிக்கவேண்டுமென்றும் மாவோ விரும்பினார் (ஜனநாயக மத்தியத்துவம் குறித்து, 30—1—62). கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் நடைபெற்றாக வேண்டிய வர்க்கப் போராட்டத்தில் மக்கள் திரளின் முன் முயற்சியைக் கட்டவிழ்த்துவிட்டு மக்களை ஈடுபடுத் தும் இத்தகைய போராட்ட வடிவம், சோசலிசத்தைத் தொகுத்துக் கொள்வதற்கும் முதலாளியப் பாதையை எதிர்ப்பதற்கும் உரியதாகும். இது **மாவோ சிந்தனை யின் பங்களிப்பு.** இந்தப் போக்கு பிரதானப்படுத்தப் படாமல் போனால் முதலாளிய மீட்சி சாத்தியம் என்ப தைக் குறிப்பிட்ட மாவோ, அதுவே நிரந்தரமாகிவிடும் எனக் குறிப்பிடவில்லை. புரட்சியை நேசிக்கும் மக்களால் முதலாளியம் மீண்டும் தூக்கியெறியப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நமது அடுத்த பரம்பரை திருத்தல் வாதத்தில் மூழ்கி இப்போதைய நிலைக்கு எதிர் மறையாகத் திரும்பி னால்-அதாவது அவர்கள் **பெயரளவில் சோசலிசத் தையும் வாய்மையில் முதலாளியத்தையும்** கொண் டிருப்பினும்—அதற்கு அடுத்த பரம்பரையினரான நம் பேரக் குழந்தைகள் அதில் நிறைவுறாமல் புரட்சியில் உறுதியாக எழுந்து நின்று **தம் தந்தை யரைத் தூக்கி எறிவர்.**

(எட்டாம் மத்தியக்குழுவின்
பத்தாம் பிளீனம், 24—9—62).

**நிலைமறுப்பின் நிலைமறுப்பு** என்ற இயங்கியல் கோட் பாட்டின் அடிப்படையில் வரலாற்று நிகழ்வுகளை விளங்கிக்கொண்ட மாவோ முதலாளிய மீட்சியின் தோற்றத்தை மட்டுமின்றி அது அழியும் சாத்தியத்தை யும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மாவோவின் கருத்தே சீனத்தின் ஆளுகை பெற்ற கருத்தாக எப்போதும் இருந்ததில்லை. **டெங். சியோபிங்** காலத்தில் (1978 தொடங்கி) ஏற்பட்டு வரும் பல மாற்றங்களினால் முதலாளிய மீட்சி குறித்த இந்தக் கருத்தும்கூட மாற்றப் பட்டுவிட்டதைக் காண்கிறோம். பெய்ஜிங் நகரில் உள்ள சமூக விஞ்ஞானக் கழகத்தின் மார்க்சிய லெனினிய மாசேதுங் சிந்தனை நிறுவன இயக்குநர் **சுசோவாஷி** அவர்களின் பேட்டியொன்றில் முதலாளிய மீட்சி குறித்த பல கருத்துகள் மாவோவின் கருத்துகளோடு முரண் கொள்கின்றன(Monthly Review,Vol. 38, Sept. 1986). சோசலிச சமூகத்தில் முதலாளிய மீட்சிக்குரிய அபாயம் குறித்த கேள்விக்கு அவர் பதிலளிக்கிறார்.

சோசலிச சமூகத்தில் முதலாளிய மீட்சிக்கான அபாயம் உள்ளதென்பது **தவறு** என நாங்கள் கருதுகிறோம். நாம் நமது கொள்கையைக் கவன மாகப் பரிசீலித்து தனிப்பட்டதொழில் முனைவர்கள் மேலும் முதலாளிமயமாவதை அனுமதிக்கக்

> கூடாது. **சில இலட்சாதிபதிகள் தோன்றினாலும் அவர்களால் முதலாளிய அமைப்பை மீளக்கொண்டு வரமுடியாது.** இதற்கு முன்பு சோவியத் ஒன்றியத்தில் முதலாளியமீட்சி நடந்தது எனச்சொன்னோம். ஆனால் அவ்வாறு சொன்னது **தவறு** என நாங்கள் கருதுகிறோம். அது **''இடதுசாரிக் கருத்தின்'' செல்வாக்காகும்** (பக். 22).

இன்றைய நவீன சீனா,சோசலிச சமூகத்தில் முதலாளிய மீட்சி சாத்தியம் இல்லை எனக் குறிப்பிடுகிறது. மாசேதுங்கின் சிந்தனை 1957க்குப் பின் பெரும்பாலும் தவறானவை என்றும் குறிப்பாக **சோசலிச சமூகத்தில் வர்க்கப் போராட்டமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் தொடர் புரட்சியும்** என்ற அவரது கருத்துகள் முழுமைக்கும் தவறானவை எனக் கருதப்படுகிறது (மேற்படி பேட்டி, பக். 24). லெனின், மாசேதுங் ஆகியோரது கருத்துகள் நவீன சீனத்தில் முற்றாக மறுக்கப்பட்டுள்ளன. இது குறித்துப் பின்னர் காண்போம்.

லெனின், மாவோ ஆகியோரின் சிந்தனைகளையொட்டி சோசலிசத்தில் முதலாளியமீட்சி குறித்த கருத்துக்களைக் கோட்பாட்டு அளவில் தொகுத்தளித்தவரில் முதன்மையாளராக **சார்லஸ் பெத்தலஹீம்** அவர்களைக் குறிப்பிடலாம். சோசலிசப் புரட்சி நடந்து முடிந்த பின் உற்பத்தி சாதனங்களில் தனியுடைமையை ஒழித்தால் முதலாளி வர்க்கம் மறைந்துவிடும் என எண்ணுவது தவறு என்றும் அரசுடைமை என்னும் திரைக்குள் சுரண்டல் உறவுகள் ரசியாவில் பேணப்பட்டு வருகின்றன என்றும் கண்டறிந்து அரசுடைமைப் பொருளாதாரத் துறைகளில் முதலாளிய உறவுகளே பேணப்பட்டன என்றும் இந்நிலையில் கட்சியிலும் ஆட்சியிலும் உள்ள அதிகாரத்துவப் பிரிவினர் **ஒரு புதிய முதலாளிய வர்க்கமாக** உருவெடுக்கின்றனர் என வரையறை செய்

கிறார். **சோவியத் நாட்டில் வர்க்கப் போராட்டங்கள்** என்ற நூலில் பெத்தலஹீம் விரிவுபடுத்திய இந்தக் கருத்துகளை **மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை — புரட்சிகர இயங்கியல் பற்றி ஓர் ஆய்வு** என்ற தன் படைப்பில் ஜார்ஜ்தாம்சன் மேலும் பல விளக்கக் குறிப்புகளுடன் எழுதியுள்ளார். (தமிழ் மொழிபெயர்ப்பு : எஸ். வி. ராஜதுரை மற்றும் இன்குலாப். பக். 172—180; 198—202). சார்லஸ் பெத்தலஹீம் மற்றும் **ஜார்ஜ்தாம்சன்** ஆகிய இருவரும் லெனினிய மாசேதுங் வழியில் முதலாளிய மீட்சிக்குரிய சாத்தியம் பற்றிய கோட்பாட்டை ஒத்துக்கொண்டவர்கள். **பால். எம். சுவீசி**, மாவோயிசத்தின் முதன்மைப் பங்களிப்புகளை ஏற்றுக் கொண்டவர். குறிப்பாக சோசலிச சமூகத்தில் வர்க்கப் போராட்டம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் தொடர் புரட்சி என்ற மாவோவின் கருத்துகளை, 'இருபதாம் நூற்றாண்டின் யதார்த்தத்துக்குப் பொருந்தும்விதத்தில் மார்க்சியத்தை நடத்திச் செல்லும் மிக முதன்மையான பங்களிப்பு' என சுவீசி வரையறை செய்துள்ளார். (Monthly Review, Sept. 1986. p. 27). எனினும் இவர் முதலாளிய மீட்சி குறித்த கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நாடுகள் முதலாளியத்துக்கும் (அல்லது முதலாளியத்துக்கு முந்தைய நிலை) பொதுவுடைமைக்கும் இடைப்பட்ட இடைநிலைச் சமூகங்களாக இல்லாமல், ஒரு புதிய வகைப்பட்ட சமூகமாக (அல்லது உற்பத்தி முறையாக) இருக்கிறது என்றும் குறிப்பிட்டு, இந்த சமூகங்களை **புரட்சிக்குப் பிந்தைய சமூகங்கள்** என்பதே பொருத்தம் என்கிறார். இந்தப் புதிய சமூகம் **வர்க்க சமூகம்** என்றும் இதில் அரசே ஆளுமை பெற்ற அரசியல், பொருளாதார நிறுவனம் என்றும் அரசைக் கட்டுப்படுத்துபவர்களே புதிய ஆளும் வர்க்கம் என்றும் குறிப்பிடுகின்றார். அதாவது ஒரு சோசலிசப் புரட்சி நடந்த நாட்டில் '**முதலாளியமும் அல்லாத சோசலிசமும் அல்லாத ஒரு புதியவகைச்**

**சமூகத்தைக்'** காணமுடியும் என்பதே இவரது கருத்து (Monthly Review Sept. 1986, P. 27). புரட்சிக்குப் பிந்திய சமூகம், (மொழிபெயர்ப்பு. பக். 209). மரபு வழிபட்ட முதலாளியப் பொருளாதார அம்சங்களை அவற்றின் இயல்பிலேயே சீரழிந்த சோசலிச சமூகங் களிலும் காண விரும்பும் போக்கை இவரிடம் நாம் காண்கிறோமெனினும் (புரட்சிக்குப் பிந்திய சமுதாயம், பக். 212—215), சோசலிச நாட்டில் வர்க்கம் பற்றிய வரையறையில் சுவீசி குறிப்பிடும் சில கருத்துகள் முதன்மையாக உள்ளன. (மேற்படி நூல். பக். 114). மரபு வழிப்பட்ட முதலாளியப் பொருளாதார அம்சங்களி லிருந்து புதிய வகைப்பட்ட முதலாளியம் எந்தெந்த வடிவங்களில் மாறுபடுகின்றது என்பதையும் அத்தகைய மாறுபாடு இருப்பினும் முதலாளிய உற்பத்தி முறையின் அடிப்படையான அம்சங்களுடன் எவ்வெவ்வாறு புதிய வகைப்பட்ட முதலாளியம் இணைகின்றன என்பதையும் பின்னர்க் காணலாம். இவை முதலாளிய சமூகமா இல்லையா என்பதில் வேறுபாடு கொண்டிருப்பினும் சுவீசி, **இன்றைய உலகில் சோசலிசத் தளங்கள் இல்லை என்பதில் உடன்பாடு கொள்கிறார்.**

ஏங்கெல்சு தொடங்கி ஜார்ஜ்தாம்சன் ஈறாக ஒரு சோசலிசநாட்டில் முதலாளிய வர்க்கத்தின் மீட்சி குறித்த கோட்பாடுகளைத் தம் வரலாற்று அனுபவங்களோடு சுட்டிக் காட்டியுள்ளனர் எனக் கண்டறிந்தோம். அதே நேரத்தில் டெங், சாவோசி ஆகியோர் தம் திருத்தல் வாதத்தையும் முதலாளியப் பாதையையும் நியாயப் படுத்துவதற்காக சோசலிசத்தில் முதலாளியமீட்சிக்கான சாத்தியமே இல்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்; அல்லது இன்றைய சீனத்தில் அத்தகைய மீட்சி ஏற்பட்டுவிட வில்லை என நிரூபிக்க முயன்று கொண்டிருக்கின்றனர். ஆனால் சோசலிச வரலாறு, லெனினியத்தையும் மாசேதுங் சிந்தனையையும் நிரூபித்துள்ளது.

புதிய முதலாளியத்தைக் கோட்பாட்டு அளவில் முதலில் கண்டுணர்ந்து வரையறை செய்தவர் லெனின் ஆவார். முதலாளிய வர்க்கத்தை சர்வாதிகாரத்தைக் கொண்டு அமுக்கி வைக்கவில்லையெனில் புரட்சி தோல்வியில் முடியும் என்று ஏங்கெல்சு,ஒரு தோல்வியை மட்டுமே முன்னுணர்ந்து கொள்ள முடிந்தது.தோல்விக்கு பின் அங்கு உருவாகும் வெற்றிடத்தை இட்டு நிரப்புவது எது என்பதை ஏங்கெல்சு எடுத்துரைத்திருக்கவியலாது. லெனின் ஒரு புரட்சிக்கு முன்பும் புரட்சிக்குப் பின்பு சில ஆண்டுகளும் வாழும் வாய்ப்பைப் பெற்றதாலும் புரட்சியில் வீழ்ச்சியடைந்த வர்க்கங்களையும் கட்சியின் புதிய வர்க்கத் தன்மையையும் **ஓரளவே** கண்டுணரும் வாய்ப்பைப் பெற்றதாலும் லெனின் காலத்தில் இத்தகைய நிகழ்வுப் போக்கு யதார்த்தமாகாததாலும் முதலாளிய மீட்சி குறித்த தொடக்கப் புரிதலோடும் வரையறையோடும் மட்டுமே இருக்கநேர்ந்தது.எனினும் ரசியாவின் பழைய வர்க்கங்களிலிருந்து ஒரு புதிய முதலாளிய வர்க்கம் தோன்ற இயலும் எனத் தெளிவாக லெனின் குறிப்பிட்டார் (LCW 29 : 189). 'விந்தையாகத் தோன்றக்கூடிய இந்த உண்மை சரக்கு உற்பத்தியிலும் சிறு உற்பத்தியிலும் புதைந்து கிடப்பதாகவும் **இது சாதாரண முதலாளிய ஜனநாயகம் வரை கொண்டு வந்துவிடும்'** எனவும் ஸ்டாலின் குறிப்பிட்டார் (ஸ்டாலின் தொகுப்பு நூல் 11 : 235, 7 : 350). ஒரு சோசலிசப் புரட்சிக்குப் பிந்தைய சமூகத்தின் சோசலிசப் பொருளாதார நிர்மாணத்தில் ஏறத்தாழ இருபதாண்டுகள் (1956—1976) நடைமுறை அனுபவம் கொண்ட மாசேதுங், இடையறாத இருவழிப் போராட்டத்தின் ஊடாக முதலாளியச் சிந்தனையாளர்களால் முன்மொழியப்பட்ட முதலாளியப் பாதையை அரசியல் தளத்தில் வெகுவாக அம்பலப்படுத்தி உள்ளார். மாவோவின் படைப்புகளில் (புரட்சிக்குப் பின்வந்த) சோசலிச உருவாக்கம் குறித்த பொருளாதாரப் பிரச்சினைகள்

நிரம்ப விவாதிக்கப்பட்டிருக்கின்றன. ரசிய அனுபவங்களை விமரிசிக்கும்பொழுது (ரசியப் பொருளாதாரம்—ஒரு விமரிசனம், மாசேதுங்) சீன அனுபவத்தையும் சீன யதார்த்த நிலைகளையும் மட்டுமே பெரிதாக மாவோ மனதில் கொண்டிருந்தார். ரசியாவின் சோசலிச உருவாக்கத்திலிருந்து சீனா எந்தெந்த விதங்களில் வேறுபட வேண்டியுள்ளது என்பதையும் அந்நூலில் மாவோ தொகுத்துக் கொடுத்துள்ளார். இதில் முதலாளிய மீட்சி குறித்த ஆய்வு இல்லையெனினும் சீனாவில் சோசலிச உறவின் வடிவங்கள் குறித்த ஆய்வு காணப்படுகின்றது. ஆனால் முதலாளிய மீட்சி குறித்த பொருளாதார, அரசியல் விளக்கங்களை சீனப் பொது வுடைமைக் கட்சி யூகோஸ்லேவியா குறித்து ரசியப் பொதுவுடைமைக் கட்சிக்கு எழுதிய கடிதத்தில் (மக்கள் தினசரி 26—9—1963, மாபெரும் விவாதம், தமிழ்மொழி பெயர்ப்பு, பக். 342-360; 365-366; 384) காணலாம். சீனாவில் லியோசோஷி தலைமையிலான முதலாளியப் பாதையை எதிர்க்கும் காலத்தில் மாவோவின் தலைமை யிலான சீனப் பொதுவுடைமைக் கட்சி எழுதிய இக் கடிதத்தில் விவசாயத்திலும் தொழில்துறையிலும் முதலாளிய உறவுகள் மீண்டும் கொண்டுவரப்படும் வடிவங்கள் குறித்து விளக்கப்பட்டுள்ளன. இத்தகைய மீட்சி நிலைக்கு மாவோவுக்குப் பிந்தைய சீனமும் பலி யானதையும் வரலாற்றில் காண்கிறோம். முதலாளிய மீட்சி குறித்த இத்தகைய புரிதல்களோடு முதலில் ரசிய அனுபவத்தைக் காண்போம்.

# 3

உலகில் மிகக்குறைவாக இரத்தம் சிந்தி நடத்தப் பட்ட ரசிய சோசலிசப்புரட்சி, அரசியல்—இராணுவ ரீதிகளில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள நான்கு ஆண்டுகள் ஆயின. அதன்பின் அது பொருளாதார நிலைநிறுத்தலுக்குப் போராடியது. இந்தப் பத்தாண்டுக் காலத்தை (1917--1927) **சோசலிசத்துக்குச் செல்வதற் கான இடைக்கட்டம்** எனலாம். இதையும் இரண்டு துணைக் கட்டங்களாகப் பிரிக்கலாம்.

1) கட்டுப்படுத்தப்பட்ட முதலாளியம் மற்றும் போர்க்காலப் பொதுவுடைமை
(நவம்பர் 1917--மார்ச்1921)

2) புதிய பொருளாதாரக் கொள்கைக் கட்டம்
(1921—1927)

முதல் துணைக்கட்டம், உள்நாட்டு யுத்தக் காலமாகும். இக்காலத்தில் ஆலைகள், வங்கிகள், வர்த்தகம் ஆகியவை அரசுடைமையாக்கப்பட்டன. பெருநில வுடைமை பறித்தெடுக்கப்பட்டு, விவசாயிகட்கு நிலங்கள் தரப்பட்டன. தொழிலாளிக் குழுக்கள், ஆலைகளை நிர்வகித்தன. விளைபொருள்கள் அரசின் மூலமே விற்கப்பட்டன. இக்கட்டத்தில் உற்பத்தி குறைந்தது; விலைவாசி அதிகமாயிற்று. சர்வதேசச் சந்தையில் ரூபாயின் மதிப்பு **3 ஆண்டுகளில்** (1918—1920) **120 மடங்கு வீழ்ச்சியடைந்தது.**

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவும், உள் நாட்டுப் போரிலிருந்து கிடைத்த ஓய்வைப் பயன் படுத்திக்கொண்டு சோசலிசத்துக்கான பொருளாதார அடித்தளம் இடவும் **புதிய பொருளாதாரக் கொள்கை**

உருவாக்கப்பட்டது. லெனின் வார்த்தைகளில் சொன்னால் இது **இடைக்காலத்திய கலப்புப் பொருளாதாரம் ஆகும்;** அரசுடைமையாக்கப்பட்ட ஆலைகள் சில, முன்னாள் முதலாளிகட்குக் குத்தகைக்கு விடப்பட்டன (மே 1921). ஆலைகளை நிர்வகிக்கும் தொழிலாளர் குழு கலைக்கப்பட்டு, 'ஆலைகள் லாபத்தில் இயங்குவதற்குரிய வகையில் நடத்தும் திறன் பெற்ற' ஒரு நிர்வாக வாரியம் (Managing Board) நியமிக்கப்பட்டது உள்நாட்டு வணிகம் முதலாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டது; வெளிநாட்டு வணிகத்தை அரசு நடத்தியது. விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் நிறுத்தப்பட்டு, **பண்ட வடிவிலானவரி** வசூலிக்கப்பட்டது. எஞ்சியதை, சுதந்திரமாக சந்தையில் விற்றுக் கொள்ளலாம். இதன்டிப்படையில் விவசாயிகட்கும் தொழிலாளர்கட்கும் இடையில் சுதந்திர சந்தைஉறவுகள் புதுப்பிக்கப்பட்டன. உள்நாட்டில் தொழில்கள் தொடங்க அன்னிய முதலாளிகட்கு இசைவு தரப்பட்டது. அன்னியத் தொழில்நுட்பம் ஊக்குவிக்கப்பட்டது. இந்தக் காலத்தில் (1921—1926) ஆலை உற்பத்தி 5 மடங்காகவும் விவசாய உற்பத்தி 3 மடங்காகவும் உயர்ந்தன. இந்தப் பொருளாதாரம் முதலாளியக் கூறுகளை உள்ளடக்கியது என்றும் **முதலாளிய மீட்சிக் கூறுகள் இதில் உள்ளன** என்றும் ஒப்புக்கொண்ட லெனின் இதைப் **'பின் வாங்கல்'** என்று வர்ணித்தார். **சிறுவீத பண்ட உற்பத்தியிலிருந்து சோசலிசத்துக்குச் செல்லும் இடைக்கட்டம்** (LCW: 31: 349) என வர்ணித்தார். உள்நாட்டிலும் உலகளாவிய முறையிலும் முதலாளியத்தைவிட பலவீனமான நிலையில் உள்ள பொழுது இது **தவிர்க்க இயலாத பின்வாங்கல்** என லெனின் வர்ணித்தார் (31: 515). புரட்சிக்குப் பின் சோசலிசம் கட்டியமைப்பதற்கான தயார் நிலையை உருவாக்க 11 ஆண்டுகள் ஆயின. இந்த இடைக்கட்டத்தில் நாட்டின் நிலைகள் பின் வருமாறு இருந்தன:

1) உற்பத்தி சாதனங்களில் அரசுடைமை, தனியுடைமை, கூட்டுடைமை இருந்தன. தொழில் துறையில் அரசுடைமையும் விவசாயத்துறையில் தனியுடைமையும் பிரதான வடிவங்களாகும்.

2) முதலாளியப் பொருளாதார விதிகள் மீது அரசின் கட்டுப்பாடு மிகவும் குறைவு. மதிப்பு விதி, சந்தைப் பொருளாதாரம், பண்ட உற்பத்தி ஆகியவை முதலாளிய நோக்கிலேயே செயல்பட்டன.

3) சிறு விவசாயிகளின் தனியுடைமையே பிரதான உற்பத்தி வடிவம்.

4) ஆலைகளை நிர்வகிக்கத் தொழிலாளர் குழுக்கள் என்ற சோசலிச நோக்கிலான நிர்வாக முறை பின்னுக்குத் தள்ளப்பட்டு, உற்பத்திப் பெருக்கு நோக்கிலான நிர்வாக வாரியம் நியமிக்கப்பட்டது.

இது **சோசலிசக் கட்டமல்ல.** சோசலிசத்தைக் கட்டுவதற்கான சில பொருளாதார முன்னிபந்தனைகளை உருவாக்குவதற்கான காலம் ஆகும்.

1928 இல் மாபெரும் தொழில்மயமாக்கலைத் தொடர்ந்து சோசலிசப் பொருளாதாரத்தைக் கட்டியமைக்கும் பணிகள் தொடங்கின. ஒரு நாட்டில் சோசலிசத்தின் இறுதி வெற்றி சாத்தியம் என்றும் அதற்கான தேவைகள் ஏற்கனவே ரசியாவில் உருவாகி விட்டன என்றும் கருத்துடைய ஸ்டாலின் தலைமையில் இந்தப் பணி தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதாவது உலகளாவிய ஏகாதிபத்திய வேலைப் பிரிவினையும் வர்க்கங்கள் மற்றும் வர்க்க முரண்பாடுகள் ஆகியவையும் ஏகாதிபத்திய சகாப்தத்தில் ஒரு நாட்டில்

மீட்கப்பட்டு விடலாம் என்ற கருத்தியலோடு இந்தப் பணி தொடங்கப்பட்டது. மேலும் கிராமப்புற முதலாளி கட்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையில் இணக்கம் காணஇயலா பகை முரண்கள் இருக்கின்றன என்ற புரிதலோடும் (ஸ்டாலின் தொகுப்பு நூல் 12:32) இதன் தொடக்கத்தைக் காணவேண்டும்.

ஸ்டாலின் தலைமையிலான போக்கின் இந்தக் கோட்பாட்டு அம்சங்கள் முதன்மையானவை. ரசியா ஒரு சோசலிச நாடாக மலர்வதற்குத் தேவையான மூலதனத்தை உள்நாட்டிலே திரட்டியாக வேண்டும். விவசாயிகள், நகர்ப்பொருள்களுக்கு அதிக விலைகள் கொடுத்தும் தம் பொருள்களைக் குறைவான விலைக்கு விற்றும் மூலதனம் திரட்டப்பட்டது. இந்த மூலதனத் திரட்டல் தொழில்மயத்துக்குரிய மூலதனமாயிற்று. நகரங்களில் ஆலைகளும் தொழிலாளர்களும் பெருமள வில் வளர்ந்துகொண்டு போயினர். தொழிற்சாலைப் பொருள்களின் உற்பத்திபற்றி பல புள்ளி விவரங்கள் உள்ளன. குத்தகைக்கு விடப்பட்ட ஆலைகள் மீண்டும் அரசு மயமாயின. ஆலை நிர்வாகத்தில் 1921 வரை இருந்த தொழிலாளர் குழு மீண்டும் கொணரப்படாமல் புதிய பொருளாதாரக் கொள்கைக் காலத்தில் கொணரப் பட்ட நிர்வாக வாரியம் தொடர்ந்து இருந்தது. இதில் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் கட்சி யால் நியமிக்கப்பட்டவர்களும் இருந்தனர். இந்த நிர்வாக முறை முக்கியமானது. புதிய பொருளாதாரக் கொள்கைக் காலத்தில் இருந்த தனியார் முதலாளியத் தையும் அரசு முதலாளியத்தையும் நிர்வகித்த அதே முறை அரசு முதலாளியத்தின் ஊடே சோசலிச முறைக்குச் செல்லும் கட்டத்திலும் பயன்பட்டு வந்தது என்பது கவனிக்கத்தக்கது.

தொழில்மயமாக்கத்துக்கு வேண்டிய மூலதனத்தைக் குவிமையப்படுத்துவதற்கும் கிராமப்புறங்களில் உள்ள

குலாக்குகளை ஒரு வர்க்கம் என்ற ரீதியில் இல்லாமல் செய்வதற்கும் விவசாயிகளின் தனியுடைமை நிலங்கள், கூட்டுப் பண்ணைகளாகவும் அரசுப் பண்ணைகளாகவும் ஆக்கப்பட்டன. புள்ளி விவரங்களைக் கண்டால் கூட்டுப் பண்ணை முறை உருவாக்கம் மிக விரைந்து நடத்தப் பட்டது என அறிகிறோம். குலாக்குகளைத் தனிமைப் படுத்தி சிறுவிவசாயிகளை இணைத்துக் கொண்டு வறிய விவசாயிகளைச் சார்ந்திருக்கக் கூடிய லெனினிய யுத்த தந்திரப் பாதையைக் கையாள வேண்டிய குறிப்புரைகள் காணப்படினும் (ஸ்டாலின் 11 : 101) சோசலிச உருவாக்கத்தின் தொடக்ககாலமே **தாக்குதல் ரீதியா** னது (offensive) என வரையறுக்கப்பட்டு இந்த மூன்று வர்க்கங்களையும் ஏறத்தாழப் பொதுமைப்படுத்தும் நிலை காணப்பட்டது. கூட்டுடைமை முறை குறித்த ஸ்டாலினின் கண்ணோட்டம் இங்கு தொகுத்துக் காணப்பட வேண்டியதாகும்.

அவை :

1) விவசாயத் தனியுடைமையிலிருந்து விவசாயக் கூட்டுடைமைக்கு இடையில் ஒவ்வொரு வர்க்கத்துக்கும் தேவைப்படும் பல்வேறு கட்டங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வில்லை.

2) சிறு விவசாயிகள், வறிய விவசாயிகள் ஆகியோரின் நிலவுடைமை குறித்த கருத்தியல் உணர்வு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வில்லை. பெருமளவிலான இயந்திரமய மாக்கலின் மூலம் கூட்டுடைமையில் உற்பத்தி யைப் பெருக்கினால் இவர்களைப் பொரு ளாதார ரீதியில் சமரசப்படுத்த இயலும் என்ற பொருளாதாரக் கண்ணோட்டம் இருந்தது.

3) கூட்டுடைமை வெறும் உற்பத்தி அலகுகளே; அவை அதிகார மையங்களாக அமைக்கப்பட வில்லை.

இவை அனைத்திலிருந்தும் சீன நடைமுறையும் கருத்தியலும் வேறுபட்டிருந்தன. இதைத்தொடக்கத்தில் விவசாயிகள் இரண்டு காரணங்களுக்காக எதிர்த்தனர்.

1) தமக்கென்று சொந்தமான நிலம் தம்மையும் உள்ளடக்கிய பலருக்கும் சொந்தமாதல்.

2) தம் நிலஅளவுக்கு ஏற்றவகையில் விளைச்சலில் பங்கில்லாமல் தம் உழைப்பின் அளவுக்கு ஏற்ப பங்கு இருத்தல்.

பொருளியல் காரணத்தை நடுநிலைப்படுத்த, பொருளாதார ஊக்குவிப்புகள், சலுகைகள் தரப்பட்டன; சொந்த உழைப்பை மட்டுமே பயன்படுத்தி சொந்த நுகர்வுக்கு மட்டுமே விளைவிக்கக்கூடிய **சுய ஆதாரப் பண்ணை நிலங்கள்** (Personal Subsidiary Forms) எல்லோருக்கும் கொடுக்கப்பட்டன. சட்ட ரீதியான அங்கீகாரம் (1—3—30) கொடுக்கப்பட்ட இந்தப் பண்ணையில் உள்ள நிலங்கள் தனிநபர் (குடும்ப) உடைமையாகவும் தம் சொந்த அல்லது குடும்ப உழைப்பை மட்டுமே பயன்படுத்தும் தன்மையிலும் அமைந்தன. இந்த தனியுடைமை, பரம்பரையாக அனுபவிக்கப்படும். இவற்றின் விளைபொருள்களை விற்கும் உரிமையும் விவசாயிகட்கு உண்டு. இதன் விளைவாக பத்தாண்டுகளுக்குள் ரசியாவில்வேளாண்மை உற்பத்திப் பொருளில் இந்தப் பண்ணை முறை குறிப்பிடத்தக்கதாகி விட்டது.

அது மட்டுமின்றி ஒரு விவசாயக் குடும்பத்தின் மொத்த வருமானத்தில் கூட்டுடைமை முறை 39.7 சதவீதம் பங்கு வகித்ததெனில் சுய ஆதாரப்பண்ணை

முறை 48.3 சதவீதம் பங்கு வகித்தது என அறிகிறோம் (1940 ஆம் ஆண்டுக் கணக்கு). இத்தகைய பொருளா தாரச் சலுகைகளையும் மீறி கூட்டுடைமையாக்கலுக்கு எதிர்ப்புகள் ஏற்பட்டன. அப்போது நடந்த கருத்துப் போராட்டத்தில் புகாரின் (Bukharin), 'குலாக்குகள் அமைதி வழியாகவே சோசலிசத்தை அடைந்து விடுவர்' என்றும் குறிப்பிட்டார். குலாக்குகள், சிறு விவசாயிகள், வறிய விவசாயிகள் ஆகியோர் கூட்டுடைமை முறையை தத்தம் வர்க்க நிலைகளில் இருந்து எதிர்த்தனர். இந்த மூன்று வர்க்கங்களையும் கையாள வேண்டிய லெனினிய பாதை, சோசலிச உருவாக்கத்துக்கான பகைத்தன்மை யுள்ள தடைகளையும் பகைத் தன்மையற்ற தடைகளை யும் ஓரளவு சுட்டி நின்றது. குலாக்குகளின் பகைமைத் தடையும் சிறிய மற்றும் வறிய விவசாயிகளின் பகையற்ற தடையும் தன்மைரீதியில் வேறுபட்டு இருந்தன. ஆனால் சோசலிச உருவாக்கத்தில் இதை ஒரு தாக்குதல் காலமாக வுணர்ந்திருந்ததாலும் பகைக்கும் பகையற்ற தற்கும் இடையிலான பண்பியல் வேறுபாடுகள் பார்த் தறியப் படாததாலும் கூட்டுடைமைக்கு ஏற்பட்ட எதிர்ப்புகளைக் கையாளும் முறையில் குலாக்குகள், சிறிய மற்றும் வறிய விவசாயிகள் ஆகியோர் மீது ஒருங்கே அளவுக்கு அதிகமான வன்முறை பயன்படுத்தப் பட்டது. உலகிலேயே முதன்முதலில் சோசலிசப் பொருளாதார நிர்மாணப் பணியை ஆற்றிய வரலாற்று பெருமை ஸ்டாலினுக்கு ஏற்பட்டதெனினும் மூன்று வர்க்கங்கள் குறித்த லெனினிய யுத்த தந்திரப் பாதை யிலிருந்து விலகியும் பகைமுரண் சக்தியையும் பகையற்ற முரண் சக்தியையும் பிரித்தறியாமலும் (இது குறித்து மாவோ பின்னாளில் ஸ்டாலினை விமரிசித்துள்ளார்) செயல்பட்ட ஸ்டாலினியத்தின் தவிர்க்கவியலாத விளைவே, இத்தகைய அளவுக்கு அதிகமான வன்முறை யாகும். ஐம்பது லட்சம் மக்கள் கிராமப்புறங்களி லிருந்து அகற்றப்பட்டனர்; பல லட்சம் மக்கள்

சைபீரியா மற்றும் மத்திய ஆசியாவில் உள்ள சித்திர வதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். விவசாயிகள் கூட்டுப்பண்ணைக்கு (இதை Kolkhoz என்பர்) கொடுப்பதைவிட தம் கால்நடைகளை வெட்டிச் சாய்ப்பதே மேல் என எண்ணினர். எனவே 1929இல் இருந்ததைவிட 1933இல் கால்நடைகள் எண்ணிக்கை குறைந்தது. 3·4 கோடியாக இருந்த குதிரைகள் 1·66 கோடி எனக் குறைந்து போயின. ஆடுகள் 14·72 கோடி என்ற எண்ணிக்கையிலிருந்து 5·06 கோடி எனக் குறைந்து போயின. (Rise of the Soviet Union to World Power, M.R. Wadh Wani, p. 181). இவையெல்லாம் அளவுக்கு அதிகமான வன்முறையின் வெளிப்பாடு என்பதில் சந்தேகமிருக்க முடியாது. இத்தகைய வன்முறையை ஸ்டாலின் தன் கட்டுரையொன்றில் (பிராவ்தா, மார்ச், 1930) கடுமையாகக் கண்டித்தார். **தலை சுற்றுகிற வெற்றி** (Dizzy with Success) என்ற தலைப்பிலான அக்கட்டுரையில் கூட்டுடைமையாக்கலில் பயன்படுத்தப்பட்ட அளவுக்கு அதிகமான வன்முறைத் தவறுகள் உணரப்பட்டு, மிகையான உற்சாகம் கொண்ட தோழர்கள் விமரிசிக்கப்பட்டு, விருப்பார்ந்த முறையில் கூட்டுடைமை அமைக்கப்பட வேண்டும் என்றும் ஸ்டாலின் குறிப்பிட்டார் (மேற்படி நூல். பக். 181). இயங்கியலற்ற முறையில் மானிட நேயத்தை உச்சாடனம் செய்யும் உபதேசிகளால் மட்டுமே தான், வரலாற்றில் வன்முறையின் பாத்திரத்தை நிராகரிக்க முடியும். வன்முறையே எதுவுமின்றி சோசலிசப் பொருளாதாரத்தைக் கட்டி அமைத்துவிட முடியாது. எனினும் இந்தக் காலத்தில் நடந்த மிகை வன்முறை குறித்து பால். எம். சுவீசியின் கருத்து கவனிக்கத்தக்கதாகும். **'புதிய அமைப்பு தப்பிப்பிழைக்கச் செலுத்தப்பட வேண்டிய தவிர்க்க முடியாத விலையே ஸ்டாலின் காலத்துக் கோர விளைவுகள்'** எனக் கருதும் சுவீசி இத்தகைய கோர விளைவுகள் உலகளாவிய முறையில் ஏற்படுத்திய நிலைமை குறித்து விரிவாக விளக்கியுள்ளார்.

''ஏறக்குறைய இருபது ஆண்டுகள் நடந்த வன்முறை யோடு கூடிய தொழில் மயமாக்கமும் போர் மும்முர மும் சோவியத் மக்களில் 2 கோடிக்கும் அதிகமான வர்களைப் பலி வாங்கியதோடு சொல்லொண்ணாத் துன்பங்களையும் அளித்தது. எனினும் இம் மாபெரும் தியாகங்கள் வீணாகப் போகவுமில்லை, அவற்றைச் செய்தோர் மட்டுமே நலம் பெற்றோர் ஆகிவிடவுமில்லை...... பாசிசத்தை நொறுக்கியடிப் பதில் தீர்மானகரமான பங்காற்றியது...**அக்டோபர் புரட்சிக்கு எவ்விதத்தும் குறைவு இல்லாத இந்த வரலாற்றுச் சாதனைகளுக்காகவும்** மனிதகுலம் சோவியத்நாட்டுக்கும் அதன் மக்களுக்கும் என்றென் றும் நன்றிக் கடன் பட்டிருக்கிறது. (புரட்சிக்குப் பிந்திய சமுதாயம், பக். 7 மற்றும் 13-14).

ஸ்டாலினின் தொடக்ககால பங்களிப்பை நடுநிலையுடன் கணித்த பால். எம். சுவீசியின் கூற்று, இங்கு கருதத் தக்கது. ஸ்டாலினை, **வன்முறை வெறி மனோபாவம் கொண்ட அரசியல் சித்தப் பிரமையாளனாக** மட்டுமே வருணித்த **குருச்சேவ் முதல் கோர்ப்பச்சேவ்** வரை தம் முதலாளிய மீட்சி நிலைபாட்டை மறைக்கும் கேடயமாக ஸ்டாலினின் மிகை வன்முறையைப் பயன்படுத்திக் கொண்டனர். இது ஒரு இழிவான சந்தர்ப்பவாதமாகும். ஸ்டாலினின் மிகை வன்முறை, பால். எம். சுவீசி கூறுவது போன்று **சோசலிச உள்ளடக்கம்** தாங்கி யுள்ளது. அதாவது **சோசலிச உள்ளடக்கம் மிகை வன்முறை வடிவம் தாங்கியுள்ளது.** இந்த வடிவத்தைத் தாக்குபவர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் காணலாம். மானுட நேயம் கொண்டு இந்த வடிவத் தைத் தாக்குபவர்களின் அறிநெறிப்பார்வை நம்மால் புறக்கணிக்கப்பட இயலாததாகும். எனினும் பலியோ நிவேதனமோ இன்றி சமூகப் புத்துருவாக்கம் இல்லை என்பதையும் மானுட நேயமும் அறநெறியும் அந்தந்தக்

குறிப்பிட்ட காலத்திய வரலாற்றுப் பருண்மையோடு இணைத்துக் காணப்பட வேண்டியவையாகும். இவர்கள் முன் வைக்கும் விமரிசனத்தில் உள்ள நியாயத்தை நம்மால் உணர்ந்து கொள்ளமுடியும். இன்னொரு பிரிவினர், மிகை வன்முறை என்ற வடிவத்தைத் தாக்குவதின் ஊடாக சோசலிச உள்ளடக்கத்தைத் தாக்குவது என்ற இறுதி நோக்குடன் தம் கருத்துகளை முன் வைக்கின்றனர். இவர்களின் மானுட நேயம், **சோசலிச விரோத மானுட நேயம்** மேலை மார்க்சியம் (Western Marxism) என்றழைக்கப்படும் சிந்தனைப் போக்கில் இந்த இரண்டு பிரிவுகளுமே காணப்படுகின்றன. இரண்டாவது பிரிவினர் தம் ஸ்டாலினிய எதிர்ப்பில், வெறும் வடிவத்தை மட்டும் தாக்கலில்லை; வடிவ எதிர்ப்பைக் கேடயமாகக் கொண்டு உள்ளடக்கத்தையே தாக்குகின்றனர். இந்நிலையில் இவர்களது மனோ பாவமும் கோர்ப்பச்சேவ் மனோபாவமும் ஒரே நிலையில் இயங்குவது வரலாற்று வினோதமாக இல்லை. இது குறித்துப் பின்னர்க் காணலாம்.

கூட்டுடைமையாக்கல் விரைந்து நடந்தேறியது. 1—10—30 இல் 25 சதவீத விளை நிலமும் 10—3—31 இல் 37 சதவீதமும் நவம்பர் 31 இல் 90 சதவீத விளை நிலமும் கூட்டுடைமை ஆயின (Rise of the Soviet Union of world Power p. 181). இதன் விளைவாக வர்க்கங்களின் புதிய உருவாக்கம் நடந்தேறியது. ஒரு புள்ளிவிபரத்தைக் காண்போம்.

**மொத்த மக்கள் தொகையில் சதவீதம்**

| | நிலை | 1928 | 1939 |
|---|---|---|---|
| 1) | தொழிலாளர்களும் பணியாளர்களும் | 17·6 | 50·2 |
| 2) | கூட்டுடைமை விவசாயிகளும் கைவினைஞர்களும் | 2·9 | 47·2 |

| | | | |
|---|---|---|---|
| 3) | கூட்டுடைமையாகாத கைவினைஞர்களும் விவசாயிகளும் | 74·9 | 2·6 |
| 4) | குலா கு ள், முதலாளிகள், வணிகர்கள் | 4·6 | — |

—(Socialism and Developmet, K. N. Kabra, PPH. p. 47)

மேற்காட்டிய புள்ளி விவரம் கூட்டுடைமைக்கு மாறிய விவசாயிகளையும் கைவினைஞர்களையும் மட்டும் நமக்குத் தெரிவிக்கவில்லை; பணியாளர்களின் பெருக்கத்தையும் நமக்குத் தெரிவிக்கிறது, பெருமள விலான தொழில் மயமும் கூட்டுடைமையாக்கமும் அதி காரிகளையும் மேற்பார்வையாளர்களையும் அவசியப் படுத்தின. புதியதாகப் பாட்டாளி வர்க்க நிர்வாகி களைப் பயிற்றுவிப்பதில் தாமதம் ஏற்பட்டபொழுது பழைய அதிகாரிகளே நிர்வாகம் செய்தனர் (Lcw 33:428). இவர்களுல் பழைய குலாக்குகளும் சிறிய விவசாயிகளும் அதிகம் இருந்தனர். பணியாளர் குடும்பங்களிலிருந்து படித்தோர் தொகை அதிகமாக இருந்தது. 1939 ஆம் ஆண்டில் உள்ள ஒரு புள்ளி விவரம் காண்போம். தொடர்புடைய மக்கள் பிரிவு 1000 ஆம் எண்ணிக்கையில் எத்தனை பேர் படித்தனர் என்பதைக் காண்போம்.

பின்வரும் சமூக சக்தி 1000 பேர்களில் உயர் கல்வி கற்றோர் பங்கு (1939).

| சமூக சக்தி | ஆண்டு 1939 |
|---|---|
| தொழிலாளர் | 87 |
| கூட்டுடைமை விவசாயிகள் | 18 |
| பணியாளர்கள் | 54·6 |
| உடல் உழைப்பாளிகள் | 45 |
| சிந்தனை உழைப்பாளிகள் | 515 |

பணியாளர்களும் சிந்தனையாளர்களும் மட்டுமே பெரிதும் கட்சி, ஆட்சி, ஆலை, கம்யூன் ஆகியவற்றுக்கு நிர்வாகிகளாக இருந்தனர். தொழில்மயமாக்கம், தொழில்நுட்ப வல்லுநர்களைச் சார்ந்திருந்தது. சாதாரண பணியாளர்கட்கும் இவர்களுக்கும் இடையிலான ஊதியவேறுபாடு துல்லியமாக விளங்குகிறது.

| ஆண்டு | ஆலைத் தொழிலாளி | அலுவலகப் பணியாளர் | தொழில்நுட்ப வல்லுநர் |
|---|---|---|---|
| 1932 | 100 | 150 | 263 |

(K. N. Kabra, p. 59)

ஆலைத்தொழிலாளிகளுக்குள்ளும் பல அடுக்குகள் இருந்தன. 8முதல் 10 அடுக்குகள் வரை இருந்த ஊதிய முறையில் அடிநிலைத் தொழிலாளியைவிட உயர்நிலைத் தொழிலாளி 5.7 மடங்கு ஊதியம் பெற்றார் (மேற்படி நூல், பக். 58)

சோசலிச சமூகம் சமத்துவநிலைகொண்ட சமூகமாக இருக்க முடியாது. இச் சமூகத்தின் உருவாக்கக் காலத்தில் பொருளாதார அரசியல் நிர்வாகக் காரியங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு பெரிய அதிகார வர்க்கத்தை அவசியப்படுத்துகிறது. சோவியத் ரசியாவைப் போன்று பரந்துபட்ட நாட்டில் இதன் தேவை அதிகம். இவர்கள் கையில் குவிந்துள்ள அதிகாரமும் அதிகம் ஆகும். இவர்களில் பலர் அதிகார வர்க்கத்தினராக, தம்மை மக்களை விட மேலாகக் கருதும் பிரிவினராக மாறும் சாத்தியம் இருந்தது என்பதை லெனினும் ஸ்டாலினும் குறிப்பிட்டுள்ளனர். (லெ : 29, 189 : ஸ்டாலின் 11 : 235). **நிர்வாகத்தை அரசியலிலிருந்து என்றைக்கும் பிரிக்கக் கூடாதென லெனின் எச்சரித்தார்** (லெ.32 : 299)எனினும் ஆலை நிர்வாகத்திலும் கம்யூன் நிர்வாகத்திலும் இது பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றில்

உள்ள அதிகாரிகள் மீது **தொழிலாளர் — விவசாயி கட்டுப்பாடு** மிகவும் குறைவு. இவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் அக்கட்டுப்படுத்துதலைக் கீழே இருந்து உருவாக்க வேண்டும் என்றும் அதற்கேற்ப தொழிலாளர்-விவசாயிகள் **பண்பாட்டு** அளவை உயர்த்த வேண்டும் என்றும் ஸ்டாலின் குறிப்பிட்டார் (ஸ்டாலின் 11 : 77; 10 : 330).

ஆனால் ஐந்தாண்டுத் திட்டங்களின் பொருளாதார சாதனைகளில் மூழ்கியிருந்த அவரால் இத்தகைய அபாயத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. மேலும் ஸ்டாலினிடத்தில் குடிகொண்டிருந்த சில கோட்பாட்டு அம்சங்களின் இறுதி எல்லை, **அதிகார வரம்பிற்குள்ளே மட்டுமே** இருந்தது. இக்கட்டத்தில் ரசிய சமூகம் வர்க்கப் பகைமைகளில் இருந்து விடுபட்டும் வர்க்கப் போராட்டத்திலிருந்து விடுபட்டும் உள்ளது என ஸ்டாலின் கொடுத்த வரையறை (மார்ச் 1939) உள் நாட்டில் சலுகையும் அதிகாரத்தையும் பெற்று புதிதாக வளர்ந்த சமூகப் பிரிவினர்க்கு எதிரான போராட்டத்தை தொடங்குவதற்கு உகந்ததாக அமையவில்லை. மேலும் இரண்டாம் உலகப் போருக்கு முன்பும் போரின் பொழுதும் ஏற்பட்ட முதலாளிய முற்றுகை மற்றும் நெருக்கடியின் ஊடாக இந்த அதிகார வர்க்கம் வளர்ச்சி யடைந்து இறுகியது. இந்த அதிகார வர்க்கத்தில், தேர்ந்தெடுக்கப்பட்டோர் பிரதிநிதித்துவம் போரின் பொழுது குறைந்து போயிற்று. நியமனங்களே பெரிதும் பிரதிநிதித்துவம் பெற்றது. அதிகாரத்தில் உறுதியாக ஊன்றிக் கொண்டு மக்களிடமிருந்து விலகி அவர்களுக்கு மேலாக இருந்து உற்பத்திப் பொருள் பகிர்வில் சிறப்புச் சலுகைகளையும் சிறப்பு வசதிகளையும் பெற்று இயங்கு கின்ற ஒரு சமூகப் பிரிவு சோசலிச சமூகத்துக்குள்ளே தோன்றுகிறது. உற்பத்தியில் நேரிடையாக ஈடுபடாமல் உற்பத்தியை திட்டமிட்டும் நிர்வகிக்கும் ஒரு சமூகப்

பிரிவினர் (non productive sphere) ரசியாவில் வளர்ந்து கொண்டு வந்ததைப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சி நிர்வாகிகள், ஆலை நிர்வாகிகள், கம்யூன் நிர்வாகிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு சிறுபான்மைத்திரளே சமூக உற்பத்தியில் கணிசமானதை எடுத்துக்கொண்டது; தவிர்க்க இயலாத படி ஆட்சி அதிகாரத்திலும் இருந்தது. **பால்.எம்.சுவீசி** சொல்லிருப்பதைப் போல இந்த நிகழ்வுப் போக்கு **தற்காலிகமானதும் மாறுங்கட்டத்து நிகழ்வு போக்காககவும் இருந்திருக்குமாயின்** தொழிலாளர் வர்க்கம் அரசியல் அதிகாரத்தைப் பெற்றிருக்கக்கூடும். அதிகார வர்க்கத்தின் மிகைச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான அரசியல்—பண்பாட்டுப் போராட்டங்கள் நடத்தப்படவேண்டிய தேவை அங்குமிங்கும் உணரப்பட்ட பொழுதினும் அவை நடத்தப்படவில்லை. கட்சிக்குள்ளும் நாட்டுக்குள்ளும் எழுந்த எதிர்ப்புகள் சோசலிசத் தாக்குதல் காலத்திலும் உலகப்போர் காலத்திலும் எழுந்தபொழுது அவற்றை அடக்கப்படுவதில் கையாளப்பட்ட நடைமுறை இந்த அதிகார வர்க்கத்தை **ஒடுக்குமுறைச் சாதனமாக** உருமாற்றியது. **சலுகைகள் பெற்ற ஒரு சமூகப் பிரிவு** அரசு ரீதியில் **ஒடுக்குமுறை சாதனமாக உருமாறிய காலத்தில்** அதைக் கட்டுப்படுத்துவதற்கான அரசியல் பண்பாட்டு வர்க்கப் போராட்டங்கள் கீழிருந்து எழாத--எழ இயலாத--சூழலில் சலுகைகள் பெற்ற அதிகார வர்க்கம் **மக்கள் திரளிடமிருந்து விலகி அன்னியப்பட்டு சுரண்டும் வர்க்கமாக** வலுவாக எழுந்து விடுகிற சாத்தியத்தை மறுப்பதற்கில்லை. 1952 ஆம் ஆண்டு மாநாட்டில் இது வெட்டவெளிச்சமாகியது. சோசலிசத்துக்கான அதிகாரத்துவம், சோசலிசத்தை உச்சரித்துவிட்டு **முதலாளிய அதிகாரத்துவமாகியது**. ஒன்றின் உருவாக்கத்திலே அதன் எதிர்மறையும் கருக்கொண்டிருக்கும் என்றும் அந்த எதிர்மறையை எதிர்த்த போராட்டம் இல்லையானால்

அல்லது போராட்டம் தோல்வியடைந்தால் எதிர்மறை, அந்த ஒன்றின் இடத்தைப் பெறும் என்ற இயங்கியல் விதியே ரசியாவில் நிரூபணமாயிற்று,

இவை அனைத்துமே ஸ்டாலின் தலைமையிலான ஆட்சிக்காலத்தில் நடந்தவையாகும், சோசலிச உருவாக்கத்தில் ஸ்டாலினின் பங்களிப்பு குறிப்பிடக்தக்கது. தனியார் முதலாளியத்தைக் கட்டுப்படுத்தி அரசு முதலாளியத்தின் ஊடாக சோசலிசப் பாதைக்குச் சென்றடையும் ஒரு தொலைதூர நோக்கை மட்டுமே லெனின் வகுத்துக் கொடுத்திருந்தார். ஒரு நாட்டில் சோசலிசத்தின் இறுதி வெற்றி, சோசலிசத் தாக்குதல் காலம், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக் கோட்பாடு. சோசலிச நாட்டில் பகைவர்க்கங்களையும் நட்பு வர்க்கங்களையும் கையாள்வதில் வேறுபாடின்மை ஆகிய ஸ்டாலின் நிலைபாடுகளுக்கு ஊடே மிதைவன் முறையுடன் இணைந்த கூட்டுடைமையாக்கமும் ஒரு பாய்ச்சலான வளர்ச்சியுடன் கூடிய தொழில் மயமாக்கமும் நடந்தேறின என்பது உண்மை. சோசலிசத்துக்கான உற்பத்தி நிகழ்வுப் போக்கில் இவை இரண்டுக்கும் வெகுவான மதிப்புகள் உண்டு. லெனினியத்தின் சில அம்சங்களில் இருந்து ஸ்டாலின் விலகியிருப்பினும், இத்தகைய ஆக்கபூர்வமான மதிப்புகளுடன் ஸ்டாலின் இணைத்தும் காணப்பட்டாக வேண்டும். அளவற்ற அதிகாரங்களைத் தம் கையில் குவித்துக் கொண்டிருந்த அதிகார வர்க்கம் சலுகை பெற்றதாகவும் ஒடுக்கு முறைச் சாதனமாகவும் மாறிக் கொண்டிருந்த ஒரு நிகழ்வுப்போக்கை—சோசலிசத்தைத் தலை கீழாகப் புரட்டி எடுக்கும் திறன்கொண்ட எதிர்மறை அம்சத்தை — தடுத்து நிறுத்துவதற்கான ஒரே சாத்தியம், **வர்க்கப் போரட்டத்தை சகலமட்டங்களிலும் விரிவுபடுத்தி தொடர்ந்து நடத்துவதாகும்** 1935 இல் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் **தளர்த்திக் கொள்ளும் சாத்தியத்தை** வரலாற்றுக்கு வழங்கியது. வர்க்கப்

போராட்டங்களின் தேவையை ஸ்டாலின் 1939 இல் மறுத்துரைத்தார். இவை இரண்டும் அதிகார வர்க்கத்தை எதிர்த்து மேலிருந்தோ கீழிருந்தோ போராடுவதற்குரிய முன்முயற்சியைக் கட்டிப் போட்டன. இத்தகைய ஆக்கபூர்வமற்ற கூறுகளுடன் சோசலிச உருவாக்கத்துக்கான ஸ்டாலின் பங்களிப்பைக் காண வேண்டும்.

இந்த சோசலிச உருவாக்கக் காலத்தில் எழுந்த ஆக்கபூர்வமற்ற கூறுகள் அனைத்தும், தம்மைத் தொகுத்துக் கொண்டு ஒரு புதிய கோட்பாட்டு உருவாக்கத்தின் கீழ் குருச்சேவ் காலத்தில் கனிந்து திரண்டன. இந்தப் புதிய கோட்பாடு, மார்க்சியத்தைத் திருத்தி விளக்கியது. சோசலிசத்தைக் கட்டி அமைக்கும் ஸ்டாலினிய முயற்சிகளின் துணைவிளை பொருளான (by product) புதிய முதலாளியவர்க்கத்தை ஆளும் வர்க்கமாக நிறுவுவதும் அதற்கு கேற்ப சோசலிசத்தை அதிகார வர்க்க அரசு முதலாளியமாகக் குறுக்கிக் கொள்வதும் புதிய கோட்பாட்டின் இலக்குகளாக இருந்தன. மரபுவழிப்பட்ட முதலாளியைப் போல இந்தப் புதிய முதலாளியவர்க்கத்துக்கு உற்பத்திசாதன உடைமையில் எவ்விதத் தனியுரிமைப்பங்கும் இல்லை. ஆனால் தமக்குள்ள சிறப்பு நிலைகளைக் கொண்டு உற்பத்தி சாதனங்களைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். உற்பத்தி நிகழ்வுப் போக்கில் இவர்கள் பங்கே தீர்மானகரமானது. உற்பத்திப் பொருள் வினியோகத்தில் இவர்கள் தமக்கென்று ஒரு பெருத்த பங்கை அபகரித்துக் கொள்கின்றனர். இந்த வர்க்கத்தினருக்கென்ற உரிமைகளும் வசதிகளும் இவர்களின் இரத்த வாரிசுக்களுக்கு பரம்பரையாகச் சென்றடைய வேண்டும் என்ற சட்ட பூர்வ வசதி இல்லையெனினும் இத்தகைய குடும்பங்களிலிருந்து வரும் பெரும்பான்மையினரே இவற்றைத் தொடர்ந்து அனுபவிப்பதற்குரிய ஒரு சூழல் இடையறாது நிலவிக் கொண்டிருக்கிறது.

உற்பத்திச் சாதனங்களின் மிகப் பெரும்பான்மை, அரசுடைமையாகவே இருக்கும் பொழுது பண்டப் பரிவர்த்தனை, மதிப்புவிதி, சந்தைப் பொருளாதாரம் என்பன போன்ற முதலாளியப் பொருளாதார விதிகள் மீது குறைந்த அளவே கட்டுப்பாட்டை வைத்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட சிறுபான்மைத்திரள் அரசியல்-நிர்வாக அதிகாரத்தின் துணை கொண்டு உற்பத்தியின் நிகழ்வுப் போக்கையும் உற்பத்திப் பொருள்களையும் தம் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு செயல்படும் பொழுது அது சோசலிச உறவாக அமையாமல் அதிகார வர்க்க அரசு முதலாளிய உறவாகவே உள்ளது. இவர்கள் மரபுவழிப் பட்ட முதலாளிகளைப் போல உற்பத்தி சாதனங்களின் மீது தனியுடைமையை அனுபவிக்கவில்லை. இங்கு மூலதனம் சிதைந்த தன்மையில் இல்லாமல் குவிமையப் பட்டும் (not fragmented but concentrated) உள்ளது. இவையனைத்தும் மரபு வழிப்பட்ட முதலாளியத்தி லிருந்து புதிய முதலாளியவர்க்கத்தை வேறுபடுத்தி நிற்கின்றன. ஆனால் இந்த வேறுபாடுகள், இவர்களை முதலாளிய உறவில் உள்ள வர்க்கத்தினரா இல்லையா என்பதனைக் கேள்விக்கு உள்ளாக்க வில்லை. மேலும் இந்த நிகழ்வுப் போக்கை, முதலாளிய மீட்சி என்று வரையறைப்படுத்துவதை நிறுத்துகிறதா என்பதே இப்போதைய பிரச்சனையாகும்.

ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சி நடந்து முடிந்து சோசலிச உறவுகள் கட்டியமைக்கப்பட்டு அதன்பின் சீர்குலைவு ஏற்பட்ட சமூகங்களில் முதலாளியமும் இல்லாமல் சோசலிசமும் இல்லாமல் ஒரு புதிய வகை சமுதாயம் தோன்றியிருக்கிறது என்பதைக் குறிப்பிடும் **பால். எம். சுவீசி,** மரபு வழிப்பட்ட முதலாளியத்தின் மூன்று தீர்மானகரமான அம்சங்களைக் குறிப்பிடு கின்றார். (புரட்சிக்குப் பிந்திய சமுதாயம், பக். 212).

அவை :

1) உற்பத்தி சாதனங்களின் தனியுடைமை.

2) போட்டியிடும் அலகுகளாகப் பிரிந்துள்ள சமுதாயத்தின் மொத்த மூலதனம்.

3) தொழிலாளிகள், முதலாளிகளிடம் தம் உழைப்புச் சக்தியைப் பண்டமாக விற்றல்.

இவற்றில் முதலிரண்டும் சோவியத் மாதிரிச் சமுதாயங்களில் ஒழிக்கப்பட்டுவிட்டன என்றும் மூன்றாவது அம்சம் சோவியத் அமைப்பில் தங்கியுள்ளதெனினும் தொழிலாளிக்குப் பல உரிமைகள் இருக்கின்றன என்றும் சுவீசி கருதுகின்றார். அதாவது முதலாளிய மீட்சி என்று வரையறைப்படுத்த இயலாது என்பதே சுவீசியின் கருத்தாகும். இதனால் சோசலிசப் புரட்சி ஏற்பட்ட நாடுகளில் இன்னமும் சோசலிசக் கட்டமைப்பு நிலவுகிறது எனவும் சுவீசி ஒத்துக்கொள்ளவில்லை சீனாவில் உற்பத்திச் சாதனங்களின் மீதான அரசுடைமையும் உழைப்புக்கேற்ற வினியோகமும் இருக்கும் வரையில் முதலாளிய மீட்சி ஏற்படுவதற்குரிய சாத்தியத்தை மறுத்துரைத்த சீன அறிஞர் சாவோ ஷிக்குப் பதில் கூறும்பொழுது சுவீசி, சாவோஷியின் கருத்தை மறுக்கிறார். உற்பத்தி சாதனங்களின் அரசுடைமையே சோசலிச உறவாகிவிடாது எனக் கருத்துப்பட ஆளும் வர்க்கங்கள் அனைத்தையும் வரலாற்று ரீதியாகக் காணும்பொழுது அவை அனைத்தும் எல்லாக் காலங்களிலும் தனியுடைமை அடிப்படையில் அமைந்திருக்கவில்லை என்றும் குறிப்பிடுகிறார். மேலும் 'புரட்சிக்குப் பிந்திய சமூகத்தில் ஒரு புதிய அரசு முதலாளியம்/கட்சி முதலாளியம் உருவாக இயலும் என்றும் இவற்றை வெட்டிச் சாய்த்துவிட்டு சோசலிசப் பாதையில் பயணம் செய்ய வேண்டுமெனில் அந்தத் திசை நோக்கிலான

எந்தவொரு போக்கையும், எல்லாப் போக்குகளையும் எதிர்த்து உறுதியான போராட்டம் தேவை என்னும் மாவோ குறிப்பிட்ட கருத்து அவரது புதுமையான கருத்துகளுள் ஒன்று' எனப் பால். எம்.சுவீசி அங்கீகரித் துள்ளமை குறிப்பிடத்தக்கது (Monthly Review. Sept. 1986, p. 27). உற்பத்தி சாதனங்களின் அரசுடைமையே சோசலிச சமூகமாகி விடாது என்பதே சுவீசியின் கருத் தாகும். இதைத் தொடர்ந்து அழுத்தமாகத் தன் கருத்து களை அவர் வைக்கிறார்.

> எல்லோரும் பணக்காரர்களாக ஆவதை உற்சாகப் படுத்துவதே சீனாவின் அதிகாரப்பூர்வமான கொள்கையாகத் தெரிகிறது. கடின உழைப்பு அவ்வாறு ஆதலுக்குரிய ஒரு வழியாக இருக்கலாம். சீனப் பத்திரிகைகளில் வருவதை நம்பினால் இதற் குப் பல வழிகள்-சட்டரீதியாகவும் சட்டவிரோதமாக வும்—இருப்பதைக் காணலாம். இவை அனைத்தும் முதலாளிய சமூகங்களில் பழக்கப்பட்டவையாகும்; இவற்றில் எதுவும் சோசலிசத்தோடு எந்தவொரு சம்பந்தமும் கொண்டுள்ளதாகக் கருதப்படலாகாது. (Monthly Review, Sept. 86, p. 28).

இங்கு நமக்கு முக்கியம், சீனாவில் இன்று சோசலிச உறவுகள் இல்லை என்பது மட்டுமல்ல; **முதலாளிய சமூகத்துக்குப் பழக்கப்பட்ட பலமுறைகள் சீனாவில் உண்டு என்பதை சுவீசி அங்கீகரித்தலாகும்.** எனினும் முதலாளிய மீட்சியைக் கோட்பாட்டு அளவில் மறுத் துரைக்கும் பேரறிஞர் சுவீசியின் கூற்று மிகவும் உன்னிப் பாகக் கருதத்தக்கது ஆகும்.

பால் எம். சுவீசி, முதல் இரண்டு தீர்மானகரமான பண்புகள் ஒழிக்கப்பட்டுவிட்டன என்கிறார். உற்பத்தி சாதனவுடைமையை சட்டவழிப்பட்ட உரிமையோடு மட்டுமே இணைத்து எண்ணுவதாகவுள்ளது. மேலும்

சீனாவிலும் ரசியாவிலும் இன்றுள்ள நடைமுறைகளைக் காணும்பொழுது **சட்டப்படி அரசுடைமையும்** (Dejure Public Ownership) **நடப்பின்படி உண்மையான தனி யுடைமையும்** (Defacto Private Ownership) இருக்கின் றன. சட்ட வழிப்பட்ட உரிமையை மட்டுமே வைத்துக் கொண்டு முதலாளியமா இல்லையா என முடிவுசெய்து விடல் முடியாது. முதலாளிய உற்பத்தி உறவு என்பது சாராம்சத்தில் **கூலி உழைப்பு** அடிப்படையிலான **உற்பத்திப் போக்காகும்.** இந்த உற்பத்திப் போக்கு, உற்பத்தியில் ஈடுபடாத மிகச்சிறிய சலுகை பெற்ற வர்க்கத்தின் கட்டுப்பாட்டில் தொழிலாளர்களின் உபரி மதிப்பைச் சுரண்டி பண்டப்பரிவர்த்தனை மூலம் அதை அவர்கள் துய்ப்பதற்கு ஏற்றதாகும். இந்த உற்பத்திப் போக்கு ரசியாவில் ஏற்பட்டுவிட்டதா இல்லையா என்பதே இப்போதைய கேள்வியாகும். இது சோவியத் அமைப்பிலும் தங்கியுள்ளது என்பதைப் பால் எம். சுவீசி ஒப்புக்கொண்டாலும், (புரட்சிக்குப் பிந்திய சமுதாயம், பக்.213), சோவியத் தொழிலாளர்களுக்கு சட்ட ரீதியான வேலை பாதுகாப்பு உண்டு எனக் குறிப்பிடு கின்றார். ஆனால் இந்த சட்டரீதியான பாதுகாப்பும் நடைமுறையில் நீர்த்துப் போயிருப்பதை ரசிய நிகழ்வு களே குறிப்பிடுகின்றன. இனி மூலதனத்தைக் காண்போம்.

மரபு வழிப்பட்ட முதலாளிய சமூகத்தில் முதலாளி களுக்கு சட்டபூர்வமாகக் கொடுக்கப்பட்ட தனியுடைமை சொத்துரிமையின் அடிப்படையில் முதலாளிய உற்பத்திப் போக்கு நிகழ்கிறது. தனியார் முதலாளி களிடம் மூலதனம் குறைவாகவே உள்ளது. தொழி லாளர்களைக் கூலிக்கு அமர்த்துவதிலும் சந்தையைப் பிடிப்பதிலும் இவர்களுக்கிடையில் போட்டி உள்ளது. இவையெல்லாம் மரபு வழிப்பட்ட முதலாளியத்தின் வடிவங்கள் ஆகும். ஆனால் இதைகூட முதலாளியக்

கூட்டு நிறுவனங்களிடம் (Corporations) சற்று வேறுபாடு அடைந்திருப்பதாக பேராசான் மார்க்சு குறிப்பிட்டுள்ளார். கூட்டு நிறுவனத்தில் உள்ள மூலதனம் என்பது, நேரடியாக சமூக மூலதனம் (நேரடி யாகத் தொடர்பு கொண்ட முதலாளிகளின் மூலதனம்) என்ற வடிவத்தை அடைந்துள்ளது என்றும் இது தனியுடைமை மூலதனத்திலிருந்து மாறுபட்டுள்ளது என்றும் மார்க்சு கருதினார்; மேலும் இந்தக் கூட்டு நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்து வேறு பட்டு சமூக நிறுவனங்கள் என்ற வடிவத்தை எடுத் துள்ளன என்று குறிப்பிட்டு, இது முதலாளிய உற்பத் தியின் வரம்புக்குள்ளே மூலதனத்தின் தனியுடைமை ஒழிப்பு ஆகும் எனவும் கருதினார். (மேற்கோள்: On the Transition to Socialism, Monthly Review, 1972).

கூட்டு நிறுவனத்தில் இயங்கும்பொழுது இந்த மூலதனத்துக்குத் தனியுடைமைக் குணம் இல்லை யெனினும் அதிலிருந்து விலகியபின் இதற்கு அந்தக் குணம் வந்து விடுகிறது என்பதையே பல முதலாளி களின் மூலதனம் என்று குறிப்பிடுகின்றனர். மூலதனத் தின் சிதறுதலிலும் மையப்படுத்தப்படாத தன்மையிலும் முதலாளியத்தைக் காண்பது மட்டுமல்ல, அதன் குவி மையத்திலும் முதலாளிய உறவுகளைக் காணமுடியும். எனவே மூலதனத்தின் அளவு பெரியதா சிறியதா சிதைந்த தன்மையிலா மையப்படுத்திய தன்மையிலா என்பது அல்ல முதன்மை. மூலதனத்துக்கு இடையி லான போட்டியா இணைப்பா என்பதும் அல்ல முதன்மை. மூலதனம் எந்த உறவுகளைப் பேணுகின்றது என்பதே முதன்மை. உற்பத்திச் சாதனங்களின் சமூகவுடைமை, உற்பத்திச் சாதனங்களின் மூலதன இயல்பிலிருந்து அவற்றை விடுவித்து அவற்றின் சமூக இயல்பு செயல்படுவதற்கு முழுச்சுதந்திரம்

அளிப்பதாக இருக்க வேண்டும் என ஏங்கெல்சு குறிப்பிட்டுள்ளார் (கற்பனாவாத சோசலிசமும் விஞ்ஞான சோசலிசமும்). இது உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமை நீடிக்கும் பொழுது சாத்தியம் இல்லை. எனினும் உற்பத்தி சாதனங்களின் சமூகவுடைமையே மூலதன இயல்பிலிருந்து உற்பத்தி சாதனங்களை விடுவித்து விடுமா என்பதே இப்போதைய கேள்வியாகும். **இது தொடர்ந்த வர்க்கப் போராட்டம் இன்றி சாத்தியமே இல்லை.** வர்க்கப் போராட்டத்தைப் புறக்கணித்த எந்தவொரு சோசலிச நாட்டிலும் உற்பத்திச் சாதனங்களின் பெயரளவிலான சமூகவுடைமையே, சோசலிச உறவுகளைக் கொண்டுவந்துவிட இயலாது; அங்கு **கூலி உழைப்பு முறையும் உழைப்புச் சக்தியை ஒரு பண்டமாக மூலதனம் வாங்குதலும் உபரி மதிப்புச் சுரண்டலும் படிப்படியாக வந்தே தீரும்** என்பது அதன் உள்ளார்ந்த விதியாகும். இங்கு மரபு வழிப்பட்ட முதலாளிய அம்சங்கள் பல இன்றியே முதலாளிய அடிப்படை உறவுகள் பேணப்படுவது சாத்தியமாக உள்ளது. ஆகவேதான் இதைப் **புதிய வகைப்பட்ட முதலாளியம்**என்னும் சோசலிசத்திலிருந்து முதலாளியத்துக்கு மீண்டதால் **முதலாளிய மீட்சி** என்றும் கூறப்படுகிறது. மாவோ சரியாகக் கருதியதைப்போல இது **ஒரு புதிய வகைப்பட்ட அரசு/கட்சி முதலாளியம்.**இங்கு அரசே ஓர் அரூபமான (abstract) முதலாளியாக இருக்கிறது. அரசே ஒரு பெரிய கூட்டு நிறுவனமாகவும் நாடு முழுவதும் உள்ள பல நிறுவனங்களை அதிகாரிகளின் மூலம் கட்டுப்படுத்தும் தன்மையிலும் உள்ளது. முதலாளிய உறவுகளைப் பேணிக் காக்கும் இந்தக் கூட்டு நிறுவனத்தை **அரசு அதிகார வர்க்க முதலாளியம்** என்கிறோம்.

இத்தகைய அதிகார வர்க்க முதலாளியத் தன்மையுடன் சந்தைப் பொருளாதாரத்தைப் பரப்பும்

நோக்குடன் பொருளாதார மாற்றங்கள் குருச்சேவ் காலத்தில் மேலிருந்து உணர்வு பூர்வமாகத் திணிக்கப் பட்டன. இங்கு குருச்சேவ்வின் நோக்கம், அதிகார வர்க்க அரசு முதலாளிய அமைப்பு ஒன்றில் புதிய முதலாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக நிறுவுவது தான் என்னும் ஜார்ஜ்தாம்சன் கருத்து ஒப்புக்கொள்ளத் தக்கதாகும்(மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை, பக்-198).

எனவே இதையே அதிகார வர்க்க முதலாளியம் அதிகாரத்தைக் கைப்பற்றி **உறுதிப்படுத்திய** காலம் என்கிறோம். இக்காலத்தில் குருச்சேவ் கொணர்ந்த அம்சங்களின் சாரமாவது:

1) ஆலைகளில் இலாப நோக்கிலான திட்டமிடல்; சமூகத் தேவைக்கான உற்பத்தியாக இல்லாமல், **சந்தைக்கான உற்பத்தியை விரிவாக்குதல்.**

2) பொருளாதார ஊக்குவிப்புகளின் மூலம் தொழிலாளரின் உற்பத்தித் திறனைப் பெருக்குதல். ஆலை நிர்வாகத்தில் நியமன உறுப்பினர்களை அதிகப்படுத்துதல்.

3) சிறுபட்டறை, தொழிலகங்கள் ஆகியவற்றையும் சிறு வணிகத்தையும் **தனியார் துறையிடம் அனுமதித்தல்.**

4) கூட்டுப் பண்ணைகளை இணைத்தல், டிராக்டர்கள் இயந்திரங்கள் ஆகியவற்றை **வாடகைக்கு** அமர்த்திக் கொள்ளும் முறை நீக்கப்பட்டு, அவற்றை கூட்டுப்பண்ணைகளுக்கே **விற்றுவிடுதல்.**

5) கொள்முதல் அளவைக் குறைத்து, விலையை அதிகரித்து விவசாயிகளின் உபரி தானியத்தை

சந்தைக்குக் கொணரச் செய்து, **சந்தைப் பொருளாதாரத்தை விரிவுபடுத்துதல்.**

6) விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட சுய ஆதாரப் பண்ணை நிலம் (Personal Subsidiary Form Lands) அதிகரிக்கப்பட்டதோடு, அதன் மீதான வரி அதிகமாகக் குறைக்கப் பட்டது. இதன் விளைச்சலில் அரசுக்குரிய பங்கு நீக்கப்பட்டது. இதன் மூலமும் **சந்தைப் பொருளாதார விரிவாக்கம் நடந்தது.**

சோசலிச சமூகத்தில் முதலாளியப் பொருளாதார மதிப்புகள் சோசலிச உறவுகளின் **கட்டுப்பாட்டில்** இயங்க வேண்டும். ஆனால் இலாப நோக்கிலான உற்பத்தி, சந்தைப் பொருளாதாரத்தின் விரிவாக்கம் ஆகிய இவற்றோடு சுய ஆதார நில அளவு அதிகரிப்பு மற்றும் சிறுவுடைமை நிறுவனங்களை ஊக்குவித்தல் ஆகியவையும் இணைந்து சோசலிச உறவுகளுக்கு எதிரான ஒரு நிலையை நிறுத்துவதற்குத் துணை புரிந்தன. இது **ரசியாவின் சோசலிசப் பொருளாதார உருவாக்கத்தில் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவு அல்ல** என்பது இங்கு முக்கியமாகக் கருதப்பட வேண்டும். சோசலிசத்தின் பொருளாதாரத் தன்மை களை அவற்றின் அரசியல் அம்சங்களுடன் இணைத்து வளர்த்தெடுக்காததாலும் உருவான எதிர்மறைக் கூறு களின் மீது அரசியல்—பண்பாட்டுப் போராட்டம் தொடுக்கப்படாததாலும் ஏற்பட்ட ஒரு வெற்றிடத்தின் மீது முதலாளியச் சிந்தனையாளர்களின் வெற்றியாகவே இது அமைந்தது. இதுவே சோசலிசத்துக்கு ஏற்பட்ட விபத்து. ஆனால் **இது சோசலிசப் பொருளாதார நெருக்கடியினால் அல்ல** என்பதைப் புள்ளி விவரங்கள் நிருபிக்கின்றன.

சோசலிச உருவாக்க காலத்தொடக்கத்தில் ரசியா வின் ஆலை உற்பத்தி, உலக ஆலை உற்பத்தியில் 4.42 சதவீதமாக இருந்து உலகின் 5வது இடத்தில் ரசியா இருந்தது. ஆனால் பத்தாண்டுகளுக்குள் (1928—1937) இது 14.99 சதவீதமாக உயர்ந்து ரசியா அமெரிக்காவிற்கு அடுத்த நிலையில் உலகின் இரண்டா வது இடத்தைப் பெற்றது. இந்தப் பத்தாண்டுக்குள் இரும்பு மற்றும் எஃகு உற்பத்தி 4 மடங்காகவும் நிலக்கரி உற்பத்தி 3½ மடங்காகவும் மின்உற்பத்தி 7 மடங்காகவும் பெருத்தது. உலகிலேயே அதிகமான டிராக்டர்களையும் ரயில்வே எஞ்சின்களையும் தயாரிக்கும் நாடாக ரசியா மாறியது.

| பொருள்கள் | 1922 | 1940 | 1950 |
|---|---|---|---|
| மின்சாரம் (1000 மில். Kwh) | 0.8 | 48·3 | 91·2 |
| நிலக்கரி (மில். டன்) | 11·3 | 166 | 261 |
| எஃகு ,, ,, | 0·3 | 18.3 | 27·3 |
| சிமெண்ட் ,, ,, | 0·1 | 5·8 | — |

(The U.S.S.R. in fugures for 1981, p. 42 and K. N. Kabra, p. 48)

**வேளாண்மை உற்பத்தி பெருகியது.**

| ஆண்டு | மொத்த மதிப்பு (1000 மில். ரூபிள்) |
|---|---|
| 1940 | 49·3 |
| 1946-50 ஆண்டு சராசரி | 44·4 |
| 1950-55 ஆண்டு சராசரி | 51·9 |

(The U.S.S.R. in figures for, 1981, p. 141)

மக்களின் வாழ்வியல் நிலையும் மேம்பட்டே நின்றது.

| நிலை | 1922 | 1940 |
|---|---|---|
| தொழிலாளர்/பணியாளர் எண்ணிக்கை (மில்லியன்) | 6·2 | 33·9 |
| பொதுக்கல்வி நிறுவனங்கள் (ஆயிரங்கள்) | 89 | 199 |
| சிறப்புக் கல்வி நிறுவனங்கள் | 932 | 3773 |
| உயர் கல்வி நிறுவனங்கள் | 248 | 817 |
| டாக்டர்களின் எண்ணிக்கை (ஆயிரங்கள்) | 21·1 | 155 |

(மேற்படி நூல், பக். 43-44)

இரண்டாம் உலகப் பெரும் போரின் பொழுது ஏற்பட்ட சீரழிவுகளையும் முறியடித்து சோசலிசப் பொருளாதாரம் மேம்பட்டு நின்றது. மூன்றே ஆண்டு களில் போரின் சீரழிவுகளை சோவியத் பொருளா தாரம் சரிக்கட்டி முன்னேறியது. 1950க்குப் பின், போருக்கு முந்தைய கால உற்பத்தி மட்டத்தை எட்டியது. ரசியாவில் ஏற்பட்ட போர்க்காலச் சீரழிவுகள் குறித்த புள்ளி விவரத்தைக் கண்டால் பாசிசத்தை வெற்றிகொள்ள ரசியா கொடுத்த விலை நமக்குப் பிரமிப்பு ஊட்டுகிறது. 1700 நகரங்கள், 70000 கிராமங் கள், 60 லட்சம் கட்டிடங்கள், 84000 பள்ளிகள், 43000 நூலகங்கள், 31000 தொழிற்சாலைகள், 1300 பாலங்கள், 98000 கூட்டுப் பண்ணைகள், 1876 அரசுப் பண்ணைகள் ஆகியவை சீரழிக்கப்பட்டன. இவற்றைச் சரிக்கட்டிய பொருளாதார சாதனைகளைக் கணக்கி லெடுக்கும்பொழுது சோசலிசப் பொருளாதாரம் எவ்வித நெருக்கடியையும் ரசியாவிற்கு அதிகமாக வழங்கிட வில்லை எனவும் அறிகிறோம். ரசியா அதற்குப் பின்னரும் சோசலிசக் கட்டமைப்பில் உறுதியாக நின்றதை, கூட்டுப் பண்ணைகள் பல ஒருங்கிணைக்கப்

பட்டதிலிருந்து அறிந்து கொள்ளமுடியும். **1949**இல் **2,52,000** என்று இருந்த கூட்டுப்பண்ணைகள் இணைக்கப்பட்டு **1953**இல் **93,300** எனக் குறைந்தன. கூட்டுப்பண்ணையின் சராசரி விளை நிலம் 450ஹெக்டா ஏக்கர் என்பதிலிருந்து 1400 ஹெக்டா ஏக்கர் என அதிகப்பட்டது. போர்க்காலத்திலும் அதன் பின்னரும் ஏற்பட்ட விலைவாசிப் பெருக்கம், உடனடியாகக் கட்டுக்குள் கொணரப்பட்டது. உற்பத்தித் துறையிலும் மக்கள் வாழ்வியல் துறையிலும் சோசலிசப் பொருளா தாரம் சாதனைகளையே காட்டி நின்றது.

அரசு முதலாளிய அமைப்பில் ஒரு புதிய முதலாளிய வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக நிறுவும் நோக்கம் கொண்ட குருச்சேவ்வின் சீர்திருத்தங்கள், கூட்டுப் பண்ணை பொருளுக்குரிய சந்தைப் பொருளாதாரத்தை விரிவுபடுத்துதல், குடும்ப நில அளவு அதிகப்படுத்துதல், சிறுவுடைமை நிறுவனங்களை ஊக்குவித்தல், தொழி லாளர்க்கு பொருளாதார ஊக்குவிப்புகள் ஆகியவற்றை கொண்டு வந்தன. இவற்றுக்கு உரிய முதலாளிய உறவுகளின் மதிப்புகள் செயல்பட்டது. மேலும் சீர்திருத்தங்களின் அறிமுகம், சோசலிசப் பொருளா தாரத்துக்கு ஏற்பட்ட நெருக்கடியின் விளைவு அல்ல என்பதையும் உணர்ந்தாக வேண்டும்.

ஒரு சோசலிச சமூகத்தைக்கூடப் பராமரிக்க இயலாமல் முதலாளிய மீட்சி நடைபெற்ற காலத்தில், **இருபது ஆண்டுகளில் பொதுவுடைமைச் சமூகத்தைக் கட்டுவது** குறித்த குருச்சேவின் கருத்துகள் புதிய புரட்டல் வாதத்துக்கு அடிப்படையாக இருந்தன. அதிகார வர்க்க அரசு முதலாளியத்தை உறுதிப்படுத்திய பெருமை குருச்சேவிற்கு உரித்தது என்றால் **அதிகார வர்க்க அரசு ஏகபோக முதலாளியத்தை கட்டியமை**த்த பெருமையை நாம் பிரஸ்னேவிற்குக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

பிரஸ்னேவ், குருச்சேவின் மாபெரும் தொடர்ச்சி· பிரஸ்னேவின் **புதிய பொருளாதார அமைப்பின் (1965)** பாராதூரமான மாற்றங்களைக் காணலாம்.

1) பெருமளவுத் தொழில்களை இணைத்தல் (Combines on a large scale) என்ற அடிப்படையில் பெரிய ஆலைகள் பல இணைக்கப்பட்டன. இத்திட்டம் கொணர்வதற்கு முன் இருந்த 2லட்சம் தொழிற் சாலை நிறுவனங்கள் 1974இல் 48000ஆக இணைக்கப்பட்டன. 1976இல் இவற்றில் 2300 இணைப்பு நிறுவனங்கள் நாட்டின் ஆலை உற்பத்தியில் 24சதவீதத்தை வழங்கின. இது அதிகாரவர்க்க அரசு முதலாளியத்துக்குள் வலுமிக்க **மைய உருவாக்கத்துக்கான** அடிப்படையைக் கொடுத்தது.

2) இந்த இணைப்பு ஆலை நிர்வாகிகட்கும் இயக்குநர் கட்கும் கட்டுப்பாடற்ற உரிமைகள் கொடுக்கப் பட்டன. இலாபத்துக்கு எதையும் உற்பத்தி செய்யும் அதிகாரம், நிறுவனங்களைப் பயன்படுத் தவும் வேறொன்றுக்கு மாற்றவும் அதிகாரம், உற்பத்தி சாதனங்களை வாங்கவும் விற்கவும் அதிகாரம், தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கவும் தண்டிக்கவும் **விரும்பும்பொழுது நீக்கவும் அதிகாரம்** இலாபப் பகிர்வு நிர்ணயிப்பு அதிகாரம் என இவ்வாறு சர்வ அதிகாரங்களும் நிர்வாகக்குழுவுக்குக் கொடுக்கப்பட்டன. பணிக்கு உபரியாக இருக்கும் தொழிலாளர்களைத் **தற்காலிகமாக நீக்கும் உரிமையும்** நீக்கப்பட்ட நாட்களுக்கு தொழிலாளர்க்குரிய ஊதியத்தை ஊதிய நிதியில் சேர்த்துக் கொள்ளும் உரிமையும் அந்த ஊதியத்தை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளும் உரிமையும் ஆலை நிர்வாகக் குழுவுக்கு வழங்கப்பட்டது.

3) இத்தகைய நிர்வாகக் குழுவுடன் ஒப்பந்தம் செய்வதன் மூலமாகவே தொழிலாளர்க்கு வேலை செய்யும் உரிமை கொடுக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் நிர்வாகிகட்குக் கட்டுக்கடங்காத சுதந்திரம் கொடுக்கப் பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட வேலைக்குப் பொருத்தமற்றவர் என நிர்வாகக் குழு கருதும்பட்சத்தில் அத்தொழிலாளியை வேலை நீக்கம் செய்யும் அதிகாரம் உட்பட ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளும் அதிகாரம் வரை சகல நிர்வாக சுதந்திரங்களும் நிர்வாகக் குழுவுக்கு இருந்தன. அதைப் போன்று ஒப்பந்தத்தை எந்நேரத்திலும் முறித்துக் கொண்டு வெளியேறும் முதலாளிய சுதந்திரமும் தொழிலாளிக்கு இருந்தது. இது அரசு முதலாளியத்தின் கீழான கூலி உழைப்பு முறையைத்தவிர வேறில்லை.

4) 1930ஆம் ஆண்டு கூட்டுப் பண்ணைச் சட்டத்தை வெளிப்படையாகவே புறக்கணித்து விட்டு புதிய நிலச்சட்டம் கொண்டுவரப்பட்டது (1965). இலாப நோக்கிலான விளைச்சலே முதன்மைப்படுத்தப் பட்டது. தகுதியும் திறமையும் மிக்க தொண்டர்கள் என்ற திட்டத்தின் கீழ், குறைவான கல்வி அறிவுடைய விவசாயிகள்பலர் ஒதுக்கப்பட்டனர். பண்ணை நிர்வாகிகளுக்கு விவசாயிகளைத் தண்டிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின் கீழ் உற்பத்திக்கு ஒரு குறிப்பிட்ட அளவு (Optimum Level) தீர்மானிக்கப்பட்டது. விவசாயிகள் பண்ணையிலிருந்து வெளியேறிக் கொள்ளவும் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தனர். பண்ணையின் நிர்வாகக் கொடுமைகளிலிருந்து தப்புவிக்க விவசாயிகள் நகர்புறங்களுக்கு பெருந்திரளாகக் குடியேறினர் (ஆண்டுக்கு சராசரி 20 லட்சம் என்ற அளவில்).

5) வணிகத்தில் இடைநிலை முறை அனுமதிக்கப் பட்டது. தனியார் வாணிப சேவை நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்தும் கைவினை ஞர்களிடமிருந்தும் பொருள்கள் வாங்கி விற்கப் பட்டன. இவர்களுக்கு வணிகர்கள் முன்பணம் கொடுத்து, உற்பத்தியைப் பெற்று விற்றனர். இங்கு முதலாளியத் தரகு முறையே பயன்பட்டது. அரசின் ராட்சச வர்த்தகத்தின் அடியில் இந்த முறையும் பயன்படுத்தப்பட்டது.

குருச்சேவ் காலத்தில் ஆக்கம் பெற்ற இந்தக் கூறுகள் பிரஸ்னேவ் காலத்தில் உறுதிபெற்றன. அதிகார வர்க்க அரசு முதலாளியத்தில் ஏகபோகம் உருவாதல், அரசு முதலாளிய நிர்வாகத்தன்மைகள் இறுகுதல், தொழிலாளர்கள் கூலி அடிமையாதல், கூட்டுப் பண்ணைக் குடும்பத்தினர் முதலாளியவிவசாயக் கூலிகளாதல், தனியார் வர்த்தகப் பெருக்கம் என்பன போன்ற அம்சங்களின் வழியே சமூகத்தில் பல அடுக்கு களும் அடுக்குகளுக்கு இடையிலான அரசியல் பொருளா தார பண்பாட்டு வேறுபாடுகளும் பெருத்துக் கொண்டே போயின. அனைத்து மக்களின் அரசு என்ற முழக்கத் தின் கீழ் அதிகார வர்க்க முதலாளிய சர்வாதிகாரமே கையாளப்பட்டது. தொழிலாளர்—விவசாயிகள் ஆகி யோரைச் சுரண்டிய அதிகார வர்க்க முதலாளிய ஆட்சியில் பொருளாதார நெருக்கடிகள் பெருத்தன.

ஆலைப் பொருள் மற்றும் வேளாண்மைப் பொருள் ஆகியவற்றின் ஆண்டு வளர்ச்சி வீதம் குறைந்து கொண்டே போயிற்று.

| ஆண்டு | ஆலைப்பொருள் வளர்ச்சி வீதம் | வேளாண்மைப் பொருள் உற்பத்தி வளர்ச்சி வீதம் |
|---|---|---|
| 1956 | 11 | 13 |
| 1957 | 10 | 3 |

| | | |
|---|---|---|
| 1960 | 10 | 2 |
| 1965 | 9 | 2 |
| 1969 | 7 | 3 |
| 1976 | 5 | — |

(K. N. Kabra. pp. 50-51)

பிரஸ்னேவ் காலத்தில்(1965—1976)100மில்லியன் டன் தானியம் இறக்குமதி செய்யப்பட்டது. உணவு தானிய உற்பத்தி விளைநிலம் பெருகியதைவிட வணிகப் பயிற் உற்பத்தி விளை நிலம் அதிகமானதன் விளைவு இதுவாகும். இது, சந்தைப் பொருளாதார விரிவாக்கத்தை நோக்கமாகக் கொண்டதாகும்.

| பயிர் வகை | 1940 | 1965 | 1970 | 1975 |
|---|---|---|---|---|
| | (மில். ஹெக்டா ஏக்கர்) | | | |
| உணவு தானியம் | 110·7 | 128· | 119·3 | 127·9 |
| வாணிபப் பயிர் | 11·8 | 15·3 | 14·5 | 14·1 |

p. 116.

விவசாயிகள் குறிப்பிட்ட அளவு உற்பத்தி செய்தாக வேண்டும் என்ற நிபந்தனையும் கூட்டுப் பண்ணையிலிருந்து விலகிக் கொள்ளும் சுதந்திரமும் விவசாயிகளை நிலத்தை விட்டு வெளியேற்றின.

| நிலை | 1965 | 1970 | 1975 | 1980 |
|---|---|---|---|---|
| | | (மில்லியன்களில்) | | |
| கூட்டுப்பண்ணைகளுடன் இணைந்த குடும்பங்களின் எண்ணிக்கை | 15·4 | 14·4 | 13·5 | 12·8 |
| கூட்டுப்பண்ணைகளில் உழைத்த நபர்களின் எண்ணிக்கை | 18·6 | 16·7 | 15.2 | 13·3 |

உற்பத்தித் தொழிலில் ஈடுபட்ட சமூக சக்திகளின் சதவீதம் மாறியது.

| ஆண்டு | ஆலைத் தொழில் | வேளாண்மை | ஏனையோர் |
|---|---|---|---|
| | | (சதவீதம்) | |
| 1950 | 22 | 46 | 21 |
| 1960 | 25 | 39 | 23 |
| 1967 | 29 | 30 | 36 |

வேளாண்மையில் ஈடுபட்டோர் குறைந்தனர். **ஏனையோர்** என்போரில் **உற்பத்தித்துறையில் ஈடுபடா தோர்** குறிப்பிடத்தக்க இடம் பெறுகின்றனர். அதாவது அரசு நிர்வாகம், பொருளாதார நிர்வாகம்/திட்டமிடுதல் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் எனக் குறிப்பிடப்படு கின்றனர். இவர்களின் சதவீதம் பெருத்துக் கொண்டே வந்தது.

நிர்வாகிகளின் எண்ணிக்கை (ஆயிரங்களில்)

| ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| 1965 | 1460 |
| 1970 | 1838 |
| 1975 | 2188 |
| 1980 | 2495 |
| 1981 | 2550 |

ஆலை உற்பத்தி/விவசாய உற்பத்தியின் வளர்ச்சி வீதம் குறைந்தது. சந்தைப் பொருளாதாரம் விரிவு படுத்தப்பட்டது. தொழிலாளர்களைவிட ஆலை நிர்வாகி களுக்கும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் சமூக உற்பத்தியில் பெரும்பங்கு கிடைத்தது. கூட்டுப்பண்ணை விவசாயிகள் பண்ணையிலிருந்து வெளியேறுமாறு நிலைமைகள் அமைந்தன. அன்னியக் கடன் தொகை

அதிகமாயிற்று. குருச்சேவ் காலத்தில் **20 பில்லியன்** (Billion) டாலரும் பிரஸ்னேவ் காலத்தில் (1976) **50 பில்லியன் டாலரும்** அன்னியக் கடன்கள் இருந்தன.

இவை ரசியாவின் அதிகார வர்க்க அரசு முதலாளியத்தின் 20 ஆண்டுகால **(1956–1976)** நெருக்கடிகளாகும். புள்ளி விவரங்களைக் காணும்பொழுது ரசியாவின் சோசலிச உருவாக்க—பராமரிப்பு முயற்சிக் காலத்தில் (1928—1956) போர்க் காலத்தைத் தவிர உற்பத்தி வளர்ச்சி வீதத்தில் வளர் நிலையை மட்டுமே காணமுடியும். ஆகவே சோசலிசப் பொருளாதாரம் அரசு முதலாளியப் பொருளாதாரமாக 1956 களில் இழிவடைந்ததற்குக் காரணம், **அக்கால கட்டத்திய பொருளாதார நெருக்கடியினால் அல்ல** என்றும் **அரசியல்—கலாச்சார நெருக்கடிகளினால்** என்றும் அறிய முடிகிறது. ஆனால் 20 ஆண்டு கால அரசு முதலாளியக்காலத்தில் பொருளாதாரத்திலும் நெருக்கடி ஏற்பட்டது. புதிய முதலாளிகட்கு சலுகைகள் வழங்கியும் தொழிலாளி—விவசாயிகள்மீது பொருளாதார ஊக்குவிப்புகளையும் அரசியல்—கலாச்சார ஒடுக்குமுறைகளையும் பயன்படுத்தியும் இந்த நெருக்கடியிலிருந்து மீள நினைத்த முயற்சிகள் தோற்றுப் போயின. அதற்கு மாறாக நெருக்கடிகள் ஆழமாயின. நாட்டின் மொத்த உற்பத்தியின் வளர்ச்சி வீதம் **1976இல் 6 சதவீதம்** என்றும் **1982இல் 2 சதவீதம்** என்றும் தேய்ந்து **1983 முதல் 3 சதவீதம்** என்று தேக்கமடைந்துள்ளது.

அரசு முதலாளியத்தின் ஆழமான நெருக்கடியினால் சூழப்பட்ட ரசியாவை இரட்சித்துக் காப்பாற்றவே **கோர்ப்பசேவ்** அவதரித்திருந்தார். இவரும், குருச்சேவ், பிரஸ்னேவ் ஆகியோரின் தொடர்ச்சியே. ஆனால் **வித்தியாசமான தொடர்ச்சி.** இவர் ரசியாவிற்கான வேறொரு பாதையை முன்வைத்தார். இந்த நெருக்கடிக்கான காரணம் **சுய வளர்ச்சிக்கான அகத்தூண்டுதல்**

இல்லாததே என்றும் இந்த அகத்தூண்டுதலை பணி இணைப்புடன் (Cash nexus) கூடிய தனியுடைமையே கொடுக்க இயலும் என்றும் கருதுகின்றார்(15—1—88). உற்பத்தி சாதனங்களோடு உடைமை ரீதியில் தொடர்பு கொள்ளும் பொழுதுதான் அகத்தூண்டுதலைப் பெற முடியும் என்பது தனியுடைமையின் ஆதாரக் கோட்பாடாகும். கோர்ப்பச்சேவின் அனைத்துக் கருத்துகட்கும் மையம் இதுதான். ராட்சச அளவில் வளர்ந்துவிட்ட அதிகாரவர்க்க அரசு முதலாளியத்தை உடனடியாகச் சுக்குநூறாக உடைத்துவிட்டு பெருமளவிலான தனியார் மயமாதல் என்பது இப்போதைக்கு சாத்தியம் இல்லை என்பதால் படிப்படியாகத் தனியார் மயமாதல் என்ற கொள்கை கையாளப்பட்டு வருகிறது. இதுவும் பல துணைக் கட்டங்களைத் தாண்டி நிறைவேற்றப்படும் என்பது தெளிவாகிறது. இதற்கான நோக்குடன் பல திட்டங்கள் கொணரப்பட்டுள்ளன.

1) நிலத்தில் குத்தகை முறை வேளாண்மை கொண்டு வரப்பட்டுள்ளது. மூன்று/நான்கு ஆண்டுகட்கு மட்டுமே இப்போது விடப்பட்ட குத்தகை, 50 ஆண்டுகள் வரை நீடிக்கப்படலாம். கம்யூன் நிலங்கள், நிர்வாகிகட்கும் விவசாயிகட்கும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அரசுக்குக் கொடுக்கும் குத்தகையைத் தவிர்த்து ஏனையவற்றை சந்தையில் விற்றுக் கொள்ளலாம். இதில் நிலம் தனியுடைமை ஆக்கப்படவில்லையெனினும் (நிலத்தை விற்க / வாங்க அனுமதி இல்லை) கூட்டுடைமை தவிர்க்கப்பட்டு விட்டது. சுதந்திரமான குத்தகை முறையில் நிர்வாக அதிகார வர்க்க ஆணைக்கு இடமில்லை. ஆனால் முன்னாள் நிர்வாக அதிகாரிகள், குத்தகையாளராக மாறத் தடையில்லை. கூட்டுப்பண்ணை முறையின் அரசு அதிகார வர்க்கத்தின் நிர்வாகக் கெடுபிடிகள் அற்றுப் போயினவெனினும், குத்தகையாளர் என்ற பெயரில் முன்னாள் நிர்வாகிகள்

தொடர்ந்து பொருளாதாரப் பயன்களை நுகர்ந்து கொண்டு வருகின்றனர்.

2) ஆலைகளைப் பொறுத்தமட்டில் எல்லாவற்றையும் தேசியமயத்திலிருந்து நீக்குவோம் (Denationalising everything) என்ற முழக்கமே செல்வாக்குப் பெற்றுக் கொண்டு வருகிறது. இது இரண்டு விதங்களில் செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

அ) ஆலைகளில் உள்ள பணியாளர்கள் அனைவரையும் பங்குதாரர்களாக்கிக் கொள்தல்.

ஆ) ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் கூட்டுப் பங்கு நிறுவனங்கள் (joint stock companies) நிறுவ அனுமதியளிக்கப்பட்டு, அவற்றிடம் ஆலைகளை ஒப்படைத்தல். இதற்கென பங்குச் சந்தை முறை (Share Market System) அனுமதிக்கப் பட்டுள்ளது.

3) பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் ரசியாவில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன. 50 சதவீதத்துக்கும் அதிகமாகவே கூட பங்குகள் எடுக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்த பன்னாட்டு நிறுவனங்கள் ரசியா அரசுடன் மட்டுமன்றி கூட்டுப் பங்கு நிறுவனங்களுடனும் இணைந்து தொழில்கள் நடத்தலாம். பால்டிக் குடியரசு நாடுகளிலும் தூர கிழக்கு நாடுகளிலும் ஜப்பானியப்பன்னாட்டு நிறுவனங்களின் மூலதனம் மற்றும் தொழில் நுட்பத் துணையுடன் தனியார் தொழில் மயப்போக்கு தொடங்கப்பட்டுள்ளது.

4) உலக வங்கி போன்ற பன்னாட்டு நிதி நிறுவனங்களில் இணைந்து கொள்ளவும் ரசியா விண்ணப்பித்துள்ளது. அதாவது உலக ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பில் தன்னையும் இணைத்து அங்கீகரிக்க வேண்டுகோள் விடுத்துள்ளது.

உள்நாட்டில் அரசு முதலாளியத்திலிருந்து தனியார் முதலாளியத்தை நோக்கிச் செல்லும் பொருளாதார முறை கையாளப்பட்டு வருகிறது. கம்யூன் கூட்டுடைமையை உடைத்து நிலக்குத்தகை முறை கொண்டுவரப்பட்டுள்ளது. ஆலை அரசுடைமையை உடைத்து, தொழிலாளர்கள் பங்குதாரி முறையையும் கூட்டுப்பங்கு நிறுவன முறையும் மற்றும் அன்னிய மூலதனமும் தனியார் கூட்டுப் பங்கு நிறுவனமும் இணைந்த கூட்டுத் தொழில் முறையையும் அனுமதிக்கும் போக்கு உள்ளது. ரசியாவில் இன்று பெருமுதலாளிகள் இல்லை. எனவே இப்பொழுது கொடுக்கப்பட்டுவரும் பொருளாதார சீர்திருத்தங்களை யார் அனுபவிக்க இயலும்? இதுவரை சலுகை பெற்ற அதிகாரவர்க்கத்தினரே பெரிதும் அனுபவிக்க இயலும் தனியார்பலர் இணைந்து கூட்டுப்பங்கு நிறுவனம் தொடங்குவதற்குத் தேவைப்படும் நிதியை நீண்ட காலக் கடனாக வழங்கும் சலுகையைப் பெரிதும் இந்த வர்க்கமே அனுபவிக்க இயலும். மேலும் முதலில் தேவைப்படும் குறைந்தபட்ச மூலதனமும் இந்த வர்க்கத்திடம்தான் சேமிப்பு என்ற பெயரில் உள்ளது. எனவே தொடக்கத்தில் அதிகார வர்க்கப் பிரிவினரிடமிருந்து தனியார் முதலாளிகள் உருவெடுக்கும் சாத்தியமும் உள்ளது. இதுவரை உற்பத்திப் பொருள் வினியோகத்தில் பெரும்பங்கினை அனுபவித்து வந்த வர்க்கம், இப்போது உற்பத்திச் சாதனங்களின் மீதும் தனியுரிமை வடிவிலான உறவையும் அனுபவிக்கும் நிலையில் உள்ளது. இப்போதும் அரசுடைமையே பெரும்பங்கு வகிக்கின்றது. ஆனால் தனியார் உடைமையே வளரும் போக்கி உள்ளது. 1956 முதல் உறுதிப்படுத்தப்பட்ட அரசு அதிகார வர்க்க முதலாளியம் முப்பதாண்டுகளுக்குப் பிறகு தனியார் முதலாளியமாகத் தம்மை மாற்றிக் கொள்ளும் பாதையைத் தேர்ந்தெடுத்து விட்டது. எனவே முதலாளியத்தின் வடிவ மாற்றம் நடந்தேறியுள்

ளது. ஆகவேதான் குருச்சேவ், பிரஸ்னேவ் ஆகிய அரசு முதலாளிய நாயகர்களிடமிருந்து வடிவத்தில் வேறுபட்டிருப்பினும் உள்ளடக்கத்தில் கோர்ப்பச்சேவ் இருவரின் தொடர்ச்சியாக இருக்கின்றார். இவரையே இந்த பத்தாண்டுகால நாயகன் என்றும் யுகப்புரட்சித் தலைவன் என்றும் சர்வதேச முதலாளியப்பத்திரிகைகள் புகழ்ந்து பூரித்து புளகாங்கிதம் அடைகின்றன. அரசு அதிகாரவர்க்க ஏகபோக முதலாளியத்தின் நிர்வாக—அரசியல் நிறுவனங்களைப் படிப்படியாகக் கலைத்து, அந்த இடங்களில் வளர்ந்து வரும் தனியார் முதலாளி யத்துக்கு உரிய நிர்வாக அரசியல் நிறுவனங்கள் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன. இந்தக் கீழ்மட்ட ஜனநாயகப் பிரசாதங்கள் மக்களுக்கு விநியோகிக்கப் படுவதன் ஊடாகவே, ரசியாவின் குடியரசுத் தலைவ ரான யுகப்புரட்சி நாயகன் கோர்ப்பச்சேவ் தனக்குரிய சர்வாதிகார உரிமையை ஜனநாயக ரீதியிலே பெற்றி ருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 4

இனி சீனாவின் அனுபவத்தைக் காண்போம். 1949 அக்டோபர் முதல் நாளன்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட சீனப் புரட்சி, ரசியப் புரட்சியிலிருந்து பல விதங்களில் வேறுபட்டது. நீண்டகால மக்கள் யுத்தப் பாதையை முன் வைத்து வெற்றி பெற்ற இப் புரட்சிக்கு முன்னரே, சீனப் பொதுவுடைமைக் கட்சிக்கு அரசியல் அதிகாரத்திலும் பொருளாதார நிர்வாகத்தி லும் அனுபவம் இருந்தது. சீ. பொ. க. பரந்துபட்ட கிராமப்புற அடித்தளத்தைக் கொண்டிருந்தது.

கொமிண்டாங் இராணுவத்துடன் நடத்திய போர்களால் சீனாவில் பொருளாதாரம் மிகவும் சீர்குலைந்திருந்தது. 4 சதவீத நிலப்பிரபுக்கள் 50 சதவீத நிலத்தை வைத்திருந்தனர்; இவர்கள் விவசாய உற்பத்தியில் 80சதவீதம் வரை அபகரித்துக்கொண்டனர். ஆலைகள், வணிக நிறுவனங்கள் மூடப்பட்டன. விலைவாசி உயர்ந்திருந்தது. 1948இல் 100 புள்ளிகளாக இருந்த விலைவாசி, புரட்சி முடிந்த 1மாதத்தில் 1949 நவம்பரில் 5376 என உயர்ந்தது. 1949இல் 45லட்சம் தொழிலாளர்களும் 4 கோடி விவசாயிகளும் வேலையின்றி இருந்தனர். சீனா முதலில் தன் தேசியப் பொருளாதாரத்தை புனரமைக்க வேண்டியிருந்தது.

புரட்சிக்குப் பிந்திய சீனா, ரசியாவைப் போன்று சோசலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய இடைக்கால கட்டத்தைக் கடந்து செல்லும் பாதையை மேற்கொண்டது. இது குறித்த கருத்தியப் போராட்டம் ரசியாவை விட சீனாவில் அதிகம் நடந்தது. ஒரு புதிய ஜனநாயகக் காலகட்டத்தில் பொருளாதாரத்தைக் கட்டி அமைப்பது குறித்து கட்சிக்குள் எழுந்த பல தவறான நிலைபாடுகளை மாவோ விமர்சித்தார். புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் முதலாளியத்தை ஒழித்துவிட்டு சோசலிசத்தை மிக விரைவில் கொண்டுவர வேண்டும் எனக் கருதிய போக்கினரைக் கடுமையாக விமர்சித்து 'இது இன்றைய தேசிய நிலைகளுக்குப் பொருத்தமாக இல்லையென்றும் படிப்படியாக மற்றும் நிதானமான (Gradual but steady) வழிகளில் முன்னேறிச் செல்ல வேண்டும்' என மாவோ குறிப்பிட்டார்(Mao Selected Works, Vol.VI, pp.24-25 இனி, MSW).அதே நேரத்தில் இக்காலத்தில் பணக்கார விவசாயிகள் பொருளாதாரத்தையும் தேசிய முதலாளியப் பொருளாதாரத்தையும் ஊக்குவிக்கும் நோக்கில் முதலாளியம் புணரமைக்கப்பட வேண்டும் என்று சிலர் குறிப்பிட்டனர்; சோசலிச மேல் கட்டுமானம், முதலாளியப் பொருளாதாரம் உட்பட அனைத்து வகைப் பொருளா

தார அடித்தளத்துக்கு சேவை செய்ய வேண்டும் (Synthesised Economic Base) என்றும் தோழர் லியோ சோஷியும் அவரது தோழர்களும் குறிப்பிட்டனர் (Three Major Struggles in China's Philosophical Front, 1949 –1964, p. 20). இந்த வலதுசாரிப் போக்கையும் எதிர்த்த மாவோ பின்வரும் வழிகளை முன்வைத்தார்.

அ) நிலச் சீர்திருத்தத்தை முழுமைப்படுத்துதல்.

ஆ) அதிகார வர்க்க மூலதனத்தைக் கைப்பற்றுதல்.

இ) தேசிய முதலாளியம் படிப்படியாக நீக்கப்படு மெனினும் இப்போது அதைப் பாதுகாத்து நிற்றல்.

ஈ) தனிநபர் பொருளாதாரத்தை (Individual Economy) ஒழுங்கமைத்தல்.

1950 ஜூனில் கூடிய சீ. பொ. கா.வின் மூன்றாம் பிளீனம் மாவோவின் வழியை ஏற்றுக்கொண்டது. ஏகாதிபத்தியங்கள் அனுபவித்த சலுகைகள் ரத்தாயின. அதிகார வர்க்க மூலதனம் கொண்ட ஆலைகள் கைப்பற்றப்பட்டன. தேசிய முதலாளிகளின் மூலதனம் பாதுகாக்கப்பட்டது. 1949 — 1952 மூன்றாண்டுக் காலத்தில் தனியுடைமை ஆலைக்ளின் பெருக்கம் 21.4 சதவீதமாக உயர்ந்தது. நிலப்பிரபுத்துவ உறவுமுறை முற்றாகத் துடைத்தெறியப்பட்டது. 30 கோடி விவசாயி களுக்கு நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டது. புரட்சிக்கு முன்பு விவசாயிகளின் நிலத்தையும் சேர்த்து ஒவ்வொரு பிரிவு விவசாயிக்கும் ஒவ்வொரு விதமாக நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| கூலி விவசாயி/வறிய விவசாயி | 0.16 | ஹெ.ஏக். |
| மத்தியதர விவசாயி | 0.2 | ,, |
| பணக்கார விவசாயி | 0.25 | ,, |
| நிலப்பிரபு | 0.14 | ,, |

என்ற அளவில் நிலம் கொடுக்கப்பட்டது. இதன் விளைவாக நிலச்சீர்திருத்தம் ஏற்பட்டது. எனினும் இவர்கள் **தனிநபர் பொருளாதார அமைப்பில்** இருந்த னர். 1952இல் நாட்டின் மொத்த வருமானத்தில் பல்வேறு துறைகளின் பங்கைக் கண்டால் தனியார் பொருளாதாரத்தின் செல்வாக்கை ஊகிக்கலாம்.

| நிலை | சதவீதம் | |
|---|---|---|
| அரசுடைமைப் பொருளாதாரம் | 19·1 | 21.3% |
| கூட்டுடைமைப் பொருளாதாரம் | 1·5 | |
| அரசு முதலாளியம் | 0·7 | |
| தனிநபர் பொருளாதாரம் | 71.8 | 78·7% |
| தனியார் முதலாளியம் | 6·9 | |

(China's Socialist Economy : An Outline History 1949-1984, Beijing Review, Beijing. 1986. p. 110. இனி.சீ.சோ.பொ.)

இக்கட்டத்தில் தனிநபர் பொருளாதாரத்தையும் தனியார் முதலாளியத்தையும் சோசலிசத்தின் வழியில் மாற்றியமைக்க வேண்டிய தேவையைக் கட்சி ஏற்று, சோசலிசக் கூட்டுடைமையை முன் வைத்தது. லியோ முதலாளிய முறையிலான சொத்துடைமையை வலியுறுத் தினார். **நான்கு பெரும் சுதந்திரங்களை** லியோ வற்புறுத்தினார். நிலம் வாங்குதல்—விற்றல், கூலி யாட்களை அமர்த்தல், விருப்பத்துக்கு ஏற்ற பயிர்களை விளைவித்தல், சுதந்திரச் சந்தையில் விற்றல் ஆகிய நான்கு பெரும் சுதந்திரங்களை லியோ வலியுறுத்தி னார். விவசாயத்தில் கூட்டுடைமை என்பது **'கற்பனை யான, தவறான, ஆபத்தான போக்காகும்'** எனவும் எச்சரித்தார். **தனியுடைமையை நீடிக்கச் செய்வோம்** (Sustain the private property) என்பதே இவரது அடிப்படை முழக்கமாகும். ஆனால் வேளாண்மையில் படிப்படியாக கூட்டுறவுமுறை கொண்டு வரப்பட்டது.

1) ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் குழு (Mutual Aid Team).
2) தொடக்க நிலைக் கூட்டுறவு சங்கங்கள்.
3) வளர்ச்சி பெற்ற கூட்டுறவு சங்கங்கள்.

இது படிப்படியாகவும் நிதானமாகவும் வளர்ந்தது.

| நிலை | 1952 | 1953 | 1955 |
|---|---|---|---|
| உதவி செய்யும் குழு | 80,30,000 | — | — |
| தொடக்கநிலைக் கூட்டுறவு | — | 4000 | 6,34,000 |
| வளர்ச்சி பெற்ற கூட்டுறவு | — | 15 | 525 |

இத்தகைய கூட்டுறவு முறையை, நடுத்தர விவசாயிகளும் பணக்கார விவசாயிகளும் எதிர்த்தனர். இதைப் பயன்படுத்தி லியோ கூட்டுறவு முறையைக் கலைக்கும் படி வற்புறுத்தினார். கூட்டுறவு முறையின் தேவையை வற்புறுத்திய மாவோ, கட்சியின் அகவய விருப்பினாலும் கட்டளையிடும் போக்கினாலும் ஏற்படும் நிர்வாகச் சீர்கேடுகளைக் கண்டித்துத் **தலைதெறிக்கும் முன்னேற்றம் தேவையில்லை** (No rash advance) என்று மாவோ நெறிப்படுத்தினார்.

தனிநபர் பொருளாதார அமைப்பில் இருந்த கைவினைஞர்கள் கூட்டுடைமைக்கு வந்தனர். கைவினைப் பொருள் தயாரிப்பாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

| ஆண்டு | எண்ணிக்கை | கைவினைஞர்கள் |
|---|---|---|
| 1953 | 4629 | 2,71,000 |
| 1954 | 11741 | 5,96,000 |
| 1955 | 20928 | 9,76,000 |

(சீ. சோ. பொ. பக். 135)

தனியுடைமை முதலாளிய ஆலைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மீது அரசின் கட்டுப்பாடு அதிகமாகியது. ஆலை நிர்வாகத்தை அரசும் தனியாரும் இணைந்து நடத்தினர். 1956க்குள் நாட்டின் பொருளாதாரத்துறை மிகவும் மாறி, சோசலிசப் பொருளாதார நிர்மாணத் துக்குத் தயாராக நின்றது.

இக்காலத்தில் சோசலிசம் குறித்துத் திட்டமிட வேண்டிய அவசியம் பற்றி மாவோ எடுத்துரைத்தார். இரண்டாண்டுகள் (1956—1957) கட்சிக்குள் கடுமை யான கருத்துப் போராட்டங்கள் நடந்தன. மாபெரும் பத்து உறவுகள் (ஏப்ரல் 1956) என்ற விளக்கவுரையில் ரசியாவின் சோசலிச அனுபவம் மாவோவினால் விமரிசனா பூர்வமாக ஆராயப்பட்டது. மூலதனத்திரட்ட லுக்கு விவசாயிகளை உறிஞ்சிய ரசிய முன்னுதாரணம் புறக்கணிக்கப்பட்டது. விவசாயம், சிறுவீதத்தொழில் (Light industries) கனரகத்தொழில் என்பதை முன் னுரிமை வரிசையாகக் குறிப்பிட்டார்.

1956 ஆம் ஆண்டைப் பொறுத்து உலகப் பொதுவு டைமை இயக்கம் பல நிகழ்ச்சிகளைக் கண்டது. ரசியா வின் பொதுவுடைமைக்கட்சியின் 20 ஆம் காங்கிரசில் குருச்சேவ், ஸ்டாலின் மீதான விமரிசனத்தை முன் வைத்து சோசலிச நாட்டில் முதலாளியப் பொருளாதா ரத்தை அதிகாரபூர்வமாகத் தொடங்கி வைத்தார். அங் கேரி, போலந்து ஆகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கலகங்கள் ஏற்பட்டன. சீனாவிலும் மாணவர் கலகங் களும் தொழிலாளர் வேலை நிறுத்தங்களும் நடை பெற்றன. இத்தகைய சர்வதேச சூழலில் லியோ-டெங் ஆகியோர் முன் வைத்த முதலாளியக் கருத்துகளைக் கட்சி ஏற்றுக் கொண்டது.

இது மாவோயிசத்துக்கு ஒரு சுற்றுப் பின்னடைவே. இதை ஒப்பீட்டு அளவிலானதாகக் கருதிய மாவோ,

நிதானமாகவும் உறுதியாகவும் தன் கருத்துகளை முன்வைத்து எட்டாம் காங்கிரசின் முதல் பீளினக் கூட்டத்தில் தம் நிலைபாட்டை வலியுறுத்தி வெற்றி கண்டார். இடைப்பட்ட காலத்தில் மாவோ முன்வைத்த கருத்துக்களைத் தொகுத்துக் கொள்வோம்.

1) சோசலிச சமூகத்தில் உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலும் சமூக மேலமைப்புக்கும் பொருளியல் அடித்தளத்துக்கும் இடையிலும் உள்ள முரண்பாடு, அடிப்படை முரண்பாடாகும் (Basic Contradiction) அதே நேரத்தில் சீனாவில் **முதலாளியப்பாதைக்கும் சோசலிசப் பாதைக்கும் இடையிலான முரண்பாடே,** எவ்வித ஐயத்துக்கு இடமின்றி பிரதான முரண்பாடாகும் (Primary Contradiction).

2) சோசலிச சமூகத்தின் அடிப்படை விதியாக, எதிர்மறைகளின் ஒற்றுமை என்ற விதியே செயல்படுகிறது.

3) சோசலிச சமூகத்தில் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் நீடித்து நிலவிக் கொண்டிருக்கும். எனினும் முந்தைய கால கொந்தளிப்பு மிக்க வர்க்கப் போராட்டங்கள் பெரும்பாலும் தூக்கி எறியப் பட்டுவிட்டன. இருப்பினும் இப்போதைய வர்க்கப் போராட்டங்கள் நெளிவு சுளிவானவையாகவும் சில சமயங்களில் கடுமையானவையாகவும் இருக்கும். இந்த வர்க்கப் போராட்டத்தில் எது வெற்றி பெறும் சோசலிசமா முதலாளிமா என்பது இன்னும் உண்மையில் தீர்க்கப்பட வில்லை.

4) பாட்டாளிவர்க்கத்துக்கும் தேசிய முதலாளிகளுக்கும் இடையிலான முரண்பாட்டை நாம் சரியாகக் கையாளவில்லையெனில் அல்லது நமது பாதையை

அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையெனில் இருவருக்கும் இடையிலான முரண்பாடு பகை முரண்பாடாகவே மாறும்.

(மாகாண, நகர சபைகள், தன்னாட்சிப் பகுதிகளின் கட்சி செயலர்கள் மாநாட்டுரை, ஜனவரி 1957; மக்களிடையே உள்ள முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது குறித்து, 27—2—1957.)

இந்தக் கருத்துகளின் வெளிச்சத்தில் கூடிய எட்டாம் காங்கிரசின் முதல் பீளினம் மாவோவின் வழிமுறையை மேற்கொண்டது. இதனடிப்படையில் கட்சிக்குள் உருவான வலதுசாரித் தவறுகளைத் திருத்துவதற்கு மாவோவின் தலைமையில் **சீர்செய் இயக்கமும்** (Rectification Movement 1957) **நூறு பூக்கள் மலரட்டும் நூறு கருத்துக்கள் மோதட்டும்**(1957)இயக்கமும் நடத்தப்பட்டன.

1958 ஆம் ஆண்டு கூடிய எட்டாம் காங்கிரசின் இரண்டாம் மாநாட்டின் பொழுது சோசலிச உருவாக்கத்துக்கான **பொதுத் திசைவழி** உருவாக்கப்பட்டது. **மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சல்** (Great Leap Forward), **மக்கள் கம்யூன்** (Peoples' Commune) **உருவாக்கல்** ஆகியவற்றின் மூலம் சோசலிசப் பொருளாதார முறை நிர்மாணிக்கப்பட்டது.

1958 முதல் கம்யூன்கள் அதிகாரப்பூர்வமாகக் கலைக்கப்பட்ட காலமான 1979 வரை (1958—1979) இருபது ஆண்டுகள் கம்யூன்கள் காலமாகவே இருந்தது. வளர்ச்சி பெற்ற கூட்டுறவு சங்கங்கள் பல இணைந்து, கம்யூன்களாயின. எனினும் அவற்றிலிருந்து தன்மை அளவில் இவை மாறுபட்டிருந்தன.

1) கம்யூன் வெறும் உற்பத்தி அலகு (Production unit) மட்டும் அல்ல. அது சீனாவின் சிவப்பு அதிகாரத்தின் அடிப்படை உறுப்பாகும். இது ரசிய சோசலிசப் பாதையிலிருந்து மாறுபட்டதாகும். கம்யூன் தன் அதிகாரப் பரப்பில் உள்ள மக்களின் வர்த்தக, கல்வி, மருத்துவம் மற்றும் இதர தேவைகளைப் பொறுப்பேற்று நடத்துகிறது. கம்யூனுக்கென்று ஒரு குடிமக்கள் படை உண்டு. அது செஞ்சேனையுடன் தொடர்பு கொண்டு பயிற்சி பெறும்.

2) கம்யூன் வெறும் வேளாண்மை உற்பத்தி அலகு மட்டுமல்ல. அது வேளாண்மையைச் சார்ந்து நின்று, வேளாண்மையையும் வட்டாரத் தொழிலையும் இணைக்கக் கூடியதாகும். கம்யூனுக்குத் தேவையான டிராக்டர்கள், இரசாயன உரங்கள், போக்குவரத்து சாதனங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் சொந்தமான தொழிற்சாலைகள் உண்டு.

3) நாடு முழுவதற்குமான திட்டத்தின் தனக்கென்ற ஒரு பகுதியை கம்யூன் நிறைவேற்றும். இதை நிறைவேற்ற கம்யூன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு முடிவு செய்கிறது. இக்குழுவின் உறுப்பினர்களைத் திருப்பி அழைத்துக்கொள்ளும் உரிமையை (right to recall) மக்கள் பெற்றுள்ளனர். கம்யூனின் புரட்சிக் குழு உறுப்பினர்களுக்கோ அலுவலகப் பணியாளர்க்கோ தனிச் சலுகைகள் எதுவுமில்லை. இவர்களிடமிருந்து அதிகாரவர்க்கம் உருவாகாத வகையில் இவர்களுக்கு உடலுழைப்பு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

4) கம்யூனில் உற்பத்திப் படைப்பிரிவு ((Production Brigade) உற்பத்தி அணி(Production Team)என்ற அடுக்குகள் உண்டு. உற்பத்தி அணியே கம்யூனின்

அடிப்படைப் பிரிவு. இது தனக்குச் சொந்தமான நிலத்தில் விளைந்த விளைச்சலில் உற்பத்திச் செலவு, நிர்வாகச் செலவு, அரசு வரி மற்றும் அரசின் கொள்முதல் ஆகியவற்றை ஒதுக்கி வைத்து விட்டு ஏனையவற்றை வளர்ச்சி நிதி, பொது நல நிதி என்று பிரித்து எஞ்சியதை (இது 60 முதல் 65 சதவீத மொத்த விளைச்சல்) தமக்குள் பிரித்துக் கொள்கின்றனர். ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள உழைக்கும் உறுப்பினர்களின் வேலையின் தரம், அளவு கருதி இது பிரிக்கப்படுகிறது. **நிர்வாக ஊழியருக்கும் அவர் நிலத்தில் வேலை செய்த உழைப்பின் தரம், அளவு ஆகியவை கருதியே ஊதியம் உள்ளது.** ஆக சிந்தனை உழைப்பு, உடல் உழைப்பு என்ற வேறுபாடு ஊதியப் பகிர்வில் இல்லை. மேலும் ஆண், பெண் என்ற வேறுபாடு பொருளாதார அளவில் இல்லை. சமூக வேலைப் பிரிவினையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலியல் அடிப்படையில் அல்லாமல் திறமை அடிப்படையில் உழைப்பு ஏற்பட்டுவிடுகிறது. இதன் தொடர் விளைவாக சீனாவின் பாரம்பரியமான **பெண் ணடிமை நிலை மங்கியது.**

5) ரசியாவில் இருந்ததைப் போன்றே கம்யூனில் குடும் பத்துக்கென ஆண்டு நிலம் (Personal Subsidiary Farm) ஒதுக்கப்பட்டது. மொத்த சாகுபடி நிலத்தில் 7 சதவீதத்துக்கும் மேற்படாத வகையில் இது அமைந்தது. இதில் கம்யூன் வேலை நேரம் போக எஞ்சிய நேரத்தில் உழைத்து விளைவித்ததை சொந்தப் பயன் போக உபரியை அரசு விலைக்கு விற்கலாம்.

(China The Quality of Life, Wilfred Burchett with Relvie Alley, pp. 33-51; 64-80. முதலாளியமும் அதன் பிறகும், பக். 179—190)

மாவோ ஒருமுறை கூறியதைப் போல, 'கம்யூன்கள், தொழிற்சாலை, வேளாண்மை, வணிகம், கல்வி, இராணுவம் ஆகிய அனைத்தையும் இணைத்து தலைமையின் பணியை எளிதாக்குகிறது...... ஒரு கம்யூன் எந்த அளவுக்குப் பெரியதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அது சோசலிசத்தன்மையில் வளர்ச்சி பெற்றிருக்கிறது'. மாவோ எதிர்பார்த்ததைப் போல கம்யூன்களின் உருவாக்கம் விரைந்து நடந்தேறியது.

> 1958 செப்டம்பருக்குள் 12, 19, 40,000 விவசாயக் குடும்பங்கள் அதாவது சீனாவின் விவசாயக் குடும்பங்களில் 98 சதவீதம் இணைந்து 26,425 மக்கள் கம்யூன்களை உருவாக்கின.
>
> சராசரி 1 கம்யூனில் 4614 குடும்பங்கள் இருந்தன. எனினும் சில பகுதிகளில் ஒரு கம்யூனில் 20000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருந்தன.
>
> (சீனாவின் சோசலிசப் பொருளாதாரம். பக் 242)

வேளாண்மையில் கூட்டுடைமை சொத்து வடிவம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கை வினைத் தொழிலும் உடைமை உறவு மாறியது. ஏற்கெனவே கூட்டுறவு மயமாகி இருந்த கைவினைஞர் கூட்டுறவு சங்கங்களில் 37.8 சதவீதம் அரசுடைமை ஆலைகளோடு இணைந்தன.35.8 சதவீதம் மக்கள் கம்யூன்களோடு இணைந்தன. இதன்மூலம் கைவினைஞர்கள் அரசுடைமை (அதாவது அனைத்து மக்களுக்கான உடைமை)வடிவின் கீழும் கம்யூன் உடைமை (அதாவது கைவினைஞர் உட்பட கம்யூன் மக்களின் உடைமை) வடிவின் கீழும் கொண்டு வரப்பட்டனர்.

தேசிய முதலாளிகளின் ஆலைகள் ஏற்கெனவே அரசு மற்றும் தனியார் கூட்டுக் கட்டுப்பாட்டில் வந்து விட்டன. மொத்த வருமானத்தில் (1956) 7.3 சத

வீதத்தை மட்டுமே பெற்றிருந்த இந்த ஆலைகள் அரசு முதலாளியத்தின் ஊடாக அரசுடைமையாயின. இது வரைமுதலாளிகள் ஆலைகளின் இலாபத்தில் 25 சத வீதம் பெற்றிருந்தனர். அரசுடைமையானபின் முதலாளிகள் தமது மூலதனத்தில் 5·/. வட்டி மட்டுமே பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. இதுவும் கலாச்சாரப் புரட்சிக் (க.பு.,) காலத்தில் நீக்கப்பட்டது.

மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சலின் கீழ் ஆலை நிர்வாக அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, உள்ளூர் ஆலைகள் பல புதியதாக நிர்மாணிக்கப்பட்டன. ஆலைகள், உள்ளூர் நிர்வாகத்தின் பொறுப்பில் இயங்குமாறு விடப்பட்டன. இக் காலத்தில் துண்டு வேலை ஊதிய முறை (Peice work wage system) யும் ஊக்கத் தொகையும் (Bonus) ஒழிக்கப்பட்டன (சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக். 241). இரும்பு-எஃகு ஆலைகள், நூற்பு-நெசவு ஆலைகள், இரசாயன உர ஆலைகள், சிமெண்டு ஆலைகள் அதிகரித்தன. இவற்றின் உற்பத்தியும் பெருகியது; தொழிலாளர் உற்பத்தித் திறனும் பெருத்தது.

| ஆண்டு | சக்திகரிக்காக எண்ணெய் (10000 டன்) | மின்சாரம் (10 கோடி Kwh) | எஃகு (10000 டன்) | சிமெண்ட் (10000 டன்) | துணி (10 கோடி மீட்.) | உரம் (10000 டன்) |
|---|---|---|---|---|---|---|
| 1958 | 226 | 275 | 800 | 930 | 64·6 | 19·4 |
| 1959 | 373 | 423 | 1387 | 1227 | 75·7 | 26·6 |
| 1960 | 520 | 594 | 1866 | 1565 | 54·5 | 40·5 |
| 1965 | 1131 | 676 | 1233 | 1634 | 62·8 | 172·6 |
| 1966 | 1455 | 825 | 1532 | 2015 | 73·1 | 240·9 |

(சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக். 481-482)

மாபெரும் முன்னேறிய பாய்ச்சலின் காலத்தில் பொதுவாக உற்பத்தி பெருகியதெனினும் 1960—1965 காலத்தில் வேளாண்மையிலும் ஆலையிலும் உற்பத்தியின் பெருக்கம் குறைந்தது. 1959—1960 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் நாட்டின் விளை நிலத்தில் 1 கோடி 33 லட்சம் ஹெக்டா ஏக்கர் பாழ்பட்டுப் போய் (இது மொத்த நிலத்தில் 1/8 பங்கு) பொருளாதாரத்தை சிதைத்தது. இதன் விளைவாக வேளாண்மை விளைச்சலும் ஆலைக்குரிய மூலதனத் திரட்டலும் வெகுவாகக் குறைந்தது. கம்யூன் நடத்திய ஆலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இத்தகைய வாய்ப்பைப் பயன்படுத்தி மாவோவின் சோசலிசப்பாதையின் மீது லியோவும் பெங் டெ ஹிவாவும் (Peng Teh huai—பாதுகாப்பு அமைச்சர்) தாக்குதல் தொடுத்தனர். அதே நேரத்தில் சென்போடோ (Chen Boda) போன்ற தீவிர இடது சாரியினர், கம்யூன்கள் இன்னும் இரண்டு மூன்றாண்டுகளில் கம்யூனிசக் கட்டத்தை அடைந்து விடுமென்றும் அதற்கேற்ப பண்ட உற்பத்தி முறையை ஒழிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினர். (சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக். 245)

தீவிர இடதுசாரிக்கருத்தை மாவோ மறுத்துரைத்தார் (ஜெங்ஜொவ் மாநாடு அக்டோபர் 1958). சீனா சோசலிசக் கட்டத்திலேயே இருக்கிறதென்றும் மக்கள் கம்யூன்கள் கூட்டுடைமை வடிவில் உள்ளன என்றும் குறிப்பிட்டு, சோசலிச சமூகத்தில் பண்ட உற்பத்தியை ஒழிப்பது பொருளாதார விதிகளுக்கு முரணானது என்று வலியுறுத்தினார் (**சீனாவின் சோசலிசப் பொருளாதாரம் பக். 245**). கம்யூன் கூட்டுடைமையை காலவரையின்றி அப்படியே வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருந்தால் உற்பத்தி சக்திகளின் இடையறாத வளர்ச்சியும் மக்களின் அரசியல் அறிவை இடைவிடாது உயர்த்துவதும் தடைபடும்; எனினும் கூட்டுடைமை நிலையிலிருந்து

அனைத்து மக்களுடைமைக்கு எப்பொழுது மாறும் என்பதைப் புறக் காரணிகளே தீர்மானிக்க இயலும் என பீகிங் ரிவ்யு (1958 : எண் 43) குறிப்பிட்டது **(முதலாளியமும் அதன் பிறகும் பக் 195-196)**. கம்யூனில் உள்ள பல்வேறு உற்பத்திக் குழுக்களுக்கு (Production) இடையிலும் ஓர் உற்பத்தி குழுவில் உள்ள பல்வேறு குடும்பங்களுக்கு இடையிலும் ஊதிய வேறுபாடு இருக்கலாகாது என்ற சமநிலைத்தன்மை (egalitarianism) குறித்த கருத்தையும் கட்சி நிராகரித்து (மார்ச் 1959, எட்டாம் காங்கிரசின் ஆறாம் பீளினம்) ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு உழைப்பு அடிப்படையில் ஊதியம் கொடுக்கப்படும் என்றும் பண்ட உற்பத்தியிலும் வினியோகத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவு வளர்ச்சி பெற்றாக வேண்டும் என்றும் கட்சி தீர்மானம் இயற்றியது **(சீனாவின் சோசலிசப் பொருளாதாரம் பக்.246 247)**. மேலும் கம்யூன் உறுப்பினர்களுக்கு தனி வாழ்க்கைச் சாதனங்களும் (வீடு, துணிகள், இருக்கைகள்) வங்கி இருப்பும் இருக்கலாகாது என்றும், அவையும் அனைத்து மக்களுடைமையாக வேண்டும் என்ற மிகையான மத்தியப்படுத்தப்பட்ட (Over Centralisation) நிலையை மேற்கொண்ட தீவிர இடதுசாரிகளைக் கண்டித்து இவை விவசாயிகளின் சொந்தவுடைமைகளாக இருக்கும் என்பதைக் கட்சி உறுதிப்படுத்தியது **(முன்னூல், பக். 247)**.

ஆனால் லியோ தலைமையிலான குழு, மக்களின் பின்தங்கிய அரசியல் உணர்வை ஆதாரமாகக் கொண்டு மாற்றத்தைப் பின்னுக்கு இழுக்க நினைத்தது. பாதுகாப்பு அமைச்சர் பெங். **உற்பத்தியில் பொருளாதார விதிகளை ஆணையில் வைக்க முடியுமே தவிர, அரசியல் எப்படி அந்த இடத்தை நிரப்ப இயலும்?** என வினவி, **கம்யூன் அமைக்கும் போக்கு சிறு முதலாளிய வெறித்தனம் (Petty bourgeoisie fanaticism)** எனச் சாடினார்.

மாவோவுக்கு எழுதப்பட்ட ஒரு கடிதத்தில் முன்வைக் கப்பட்ட இத்தகைய விமரிசனத்துக்கு மாவோ பதிலளித் தார் (ஆகஸ்டு 1959, எட்டாம் காங்கிரசின் எட்டாம் பீளினம்). லியோ, **'அரசியலை ஆணையில் வைத்தல் என்பது ஒரு சோம்பேறியின் கருத்தாகும்'** எனத் தாக் கினார். லியோ, டெங், சுன் யென் பெங், பெங்டெ ஹுவா ஆகியோர் ஆலை நிர்வாக — பொருளாதார அமைப்பில் மாற்று வழிகளை முன் வைத்தனர்.

1961இல் லியோவும் மற்றும் அவரது தோழர்களும் முன் வைத்த இத்தகைய கருத்துகளுக்கு மாவோவும் **சூயென்லாயும்** பதிலளித்தபின்னரும் 1962 இல் லியோ கீழ்க்கண்ட மூன்று அம்சங்களைக் கைவிடுமாறு வலியுறுத்தினார்.

1) சோசலிசத்துக்கான பொது வழி.
2) கம்யூன்கள்.
3) மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சல்.

ஆனால் 1962செப்டம்பரில் கூடிய பத்தாம் பீளினம் மேற்கண்ட மூன்று அம்சங்களையும் தொடர்ந்து கடைப் பிடிக்கும் மாவோயிசத்தை ஏற்றுக்கொண்டது. டெங் முன்மொழிந்த **வேளாண்மையில் உற்பத்திப் பொறுப்பு முறைத் திட்டம்** ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பெரிய வேலைகளை கம்யூனின் உற்பத்திக் குழுக்களுக்கும் சிறிய வேலைகளை தனிநபர்களுக்கும் பண்ணை நில நிர்வாகத்தைக் குடும்பங்களுக்கும் ஒப்பந்தப் பொறுப் பாக விடும் டெங்கின் கருத்துகள் புறக்கணிக்கப்பட்டன. (சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக். 300) இக்கூட்டத்தில் சோசலிசநாட்டில் வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம், முதலாளியமீட்சி என்பன போன்றவற்றின் மீது அழுத்தமாகத் தன் கருத்தை மாவோ வலியுறுத்தி னார் (Mao Tse Tung unrehearsed: Talks and letters 1956- 71, pp. 189 - 190).

லியோவுக்குச் செல்வாக்கு மிக்க சில மாகாணங்களில் உள்ள ஆலைகள் லியோயிசப் பாதையை மேற்கொண்டன. கம்யூனின் தலைமையை பணக்கார விவசாயிகளும் நிலப்பிரபுக்களும் (அதாவது முன்னாள்) கைப்பற்றியிருந்தனர். கட்சிக்கு ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு லியோவின் கட்டுப்பாட்டில் இருந்தது. லியோவின் வழியை அரசின் பண்பாட்டு மற்றும் பிரச்சாரத் துறைகள் ஆதரித்தன. லியோவின் கருத்துக்களைப் பரப்பின. இக்காலத்தில் (1963) மாவோ முன்வைத்த **முதல் பத்துக் குறிப்புகள்** (First Ten Points) என்ற குறிப்புரையில் கம்யூன்கள் சிதைக்கப்பட்டு வருவதையும் கட்சியில் உள்ள முதலாளியப் பாதையாளர்களே இதற்குக் காரணமென்பதையும் குறிப்பிட்டு முதலாளியப் பாதையை எதிர்த்துப் போராடும்படி வேண்டினார். விவசாயிகளுக்கு **சோசலிசக் கல்வி புகட்டும் இயக்கம்** (1964) நடத்தப்பட்டது. ஏறத்தாழ 3,20,000 அறிவாளிகள் கிராமப்புறங்களுக்கு சென்றனர். எனினும் கட்சிக்குள் முதலாளியப் பாதையாளர்கள் எண்ணிக்கை பெருத்தது. இவர்கள் இராணுவத்திலும் ஆட்சியிலும் இடம் பெற்றிருந்தனர். இவர்களை எதிர்த்துக் கட்சிக்குள் நடத்திய போராட்ட வடிவங்கள் இந்தப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க இயலாததால் இதைக் கீழிருந்து அம்பலப்படுத்த பரந்த மக்கள் திரளினரைத் தட்டியெழுப்புவதற்கான ஒரு வடிவம் கையாளப்பட்டது. இதுவே **மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியாகும்** (க. 4) 16—5—1966 அன்று மத்தியக்குழுவின் சுற்றறிக்கையில் இதற்கான அறைகூவல் விடப்பட்டது. கருத்துகளைச் சுதந்திரமாகச் சொல்லவும், கருத்துகளை முழுமையாக வெளியிடவும், விவாதங்களைப் பெருமளவில் நடத்தவும் பெரிய எழுத்துச் சுவரொட்டிகளை எழுதவும் ஆன நான்கு சுதந்திர வழிகளின் மூலம் முதலாளியப் பாதையாளர்களை அம்பலப்படுத்துமாறு கேட்கப்பட்டது. எனினும் கட்சியின் மத்தியத் தலைமையில் உள்ள சிலர்

இதை மறைமுகமாக் எதிர்த்தபொழுது மாவோவின் **பெரிய எழுத்துச் சுவரொட்டி** (Big character Poster, 5—8—1966) வெளியர்யிற்று. **தலைமைப் பீடத்தைத் தகர்த்தெறியுங்கள்** என்ற தலைப்பிலான அச்சுவ ரொட்டி, 'அடிமட்டத்திலிருந்து மத்தியக் குழு வரை யிலான பொறுப்புகளில் உள்ள சில முன்னணித் தோழர் கள் கட்சியின் நிலைபாட்டுக்கு எதிராக இருந்து, பிற்போக்குத்தனமான முதலாளிய நிலைபாட்டை மேற் கொண்டு, கலாச்சாரப்புரட்சி இயக்கத்தை உடைத்து, நொறுக்குவதற்காக முதலாளிய சர்வாதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்' என்பதை மாவோ அம்பலப்படுத்தினார். (Bombard the Head Quarters சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், இணைப்பு எண் III, பக். 552). மாவோவின் இச் சுவரொட்டியை ஒட்டி வெளியிடப்பட்ட 8—8—1966 மத்தியக் குழுவின் அறிக்கையும் அதிகாரப்பூர்வமான கலாச்சாரப்புரட்சி தொடங்கியது.

லெனினின் கடைசிக்கால எழுத்துகளில் ஒரு சோசலிச நாட்டில் பரந்துபட்ட மக்கள் தம் பண்பாட்டு அளவை உயர்த்திக்கொள்ள வேண்டிய தேவை பற்றியும் எதிர் கொள்ளப்பட வேண்டிய ஒரு கலாச்சாரப் புரட்சி யைப் பற்றியும் எழுதியுள்ளார். (LCW 33 : 474). 'பாட்டாளி வர்க்கம் பலவிதங்களில் திறன் பெற்று எல்லாவற்றிலும் தலைமையைப் பயன்படுத்தும் நோக்குடன்' தொடங்கப்பட்ட இக் க. பு. காலத்தில் கட்சி, மக்கள், இராணுவம் ஆகிய மூன்று பிரிவுகளையும் உள்ளடக்கிய புரட்சிக் குழுக்கள் கட்டப்பட்டன; ஆலை, கம்யூன் ஆகியவை தொடங்கி பிரதேச அரசாங்கம் முதல் மாநில அளவு வரை இவை கட்டப் பட்டன. மக்கள் திரள் நாட்டின் நிர்வாகத்தை நேரடி யாக மேற்கொண்ட இச்செயல், சோசலிசப் புரட்சியில் ஏற்பட்ட ஒரு முக்கியமான முன்னேற்றத்தைக் குறிக்

கிறது. (மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை, ஜார்ஜ் தாம்ஸன், (மொ. பெ.), பக். 229). **புரட்சியை இறுகப் பற்றுக; உற்பத்தியை மேம்படுத்துக** என்ற முழக்கத்தின் கீழ் நடத்தப்பட்ட க. பு., உற்பத்திக்கும் புரட்சிக்கும் இடையிலான இயங்கியல் உறவை வெளிப்படுத்திய தோடு சோசலிசப் புரட்சி பொருளாதாரத் துறையில் மட்டுமின்றி அரசியல், சித்தாந்தத் துறைகளிலும் சிரமம்மிக்க போராட்டங்களை நடத்துவதை முன் வைத்தது. இதன்படி க. பு. தொடங்கிய முதல் இரண்டு ஆண்டுகளில் உற்பத்தி சீர்குலைந்திருப்பினும் அதன் பின் முன்னோக்கி வளர்ந்தது.

(1 ஜின் = 0.5 கி.கிராம்)

| ஆண்டு | தானியம் (10 கோடி ஜின்) | பருத்தி (10 லட்சம் ஜின்) | சுத்திகரிக்கப்படாத எண்ணெய் 10000 டன்) | எஃகு (10000 டன்) | இரசாயன உரம் (10000 டன்) |
|---|---|---|---|---|---|
| 1966 | 4280 | 4673·5 | 1455 | 1532 | 240·9 |
| 1967 | 4356·4 | 4707·9 | 1388 | 1029 | 164·1 |
| 1968 | 4181·1 | 4708·6 | 1599 | 904 | 110·9 |
| 1970 | 4799·4 | 4554·0 | 3065 | 1779 | 243·5 |
| 1975 | 5690·3 | 4761·6 | 7706 | 2390 | 524·7 |
| 1976 | 5726·1 | 4110·9 | 8716 | 2046 | 524·4 |

(சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக். 481-482)

தொடக்க காலத்திய இறக்கங்கள், நாடு முழுமைக்கும் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பின் விளைவுகள் ஆகும். ஆனால் 1969 - 70 காலத்தில் சரிசெய்யப்பட்டு க.பு. தொடர்ந்து நடத்தப்பட்டது. ஆலைகளின் நிர்வாகத்தில் மக்கள் திரள் பங்கெடுப்புக்கு வகை செய்யப்பட்டது. 1960 இல் மாவோ உருவாக்கிய திட்டம் 1968 இல் அன்சான் இரும்பு உருக்காலையில் நிறைவேற்றப்பட்டது. **தொழிலாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள், பொறியாளர்கள்** அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு **தொழிலாளர்கள் முன்னணியான சக்தியாக** விளங்கினர். தொழிலாளர்கள் புதிய கண்டு பிடிப்புப் பணிகளில் ஈடுபட ஊக்கம் கொடுக்கப்பட்டனர். உடல் உழைப்புக்கும் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்கும் வேறுபாடு குறைக்கப்பட்டது. கட்சி, மக்கள், இராணுவம் ஆகியோர் அடங்கிய உள்ளூர் புரட்சிகரக் குழுக்களிடம் ஆலை நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. இவை மத்திய அமைச்சகங்களின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருந்தன. அந்தந்தப் பகுதிகளில் உள்ள தொழில் நுட்ப நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் உள்ளூர் புரட்சிகரக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (Cultural Revolution and Industrial organisation in China, Charles Bettelheim. pp. 70—81)

கம்யூன்கள் வெற்றிகரமாக அமைக்கப்பட்டதற்குப் பின்னர் கூட்டுடைமையை உடனடியாக அனைத்து மக்களின் உடைமையாக மாற்ற வேண்டும் என்றும் சோசலிசக் கட்டத்தில் வழங்கப்பட்டுள்ள முதலாளிய உரிமைகளை முற்றாக ஒழித்துவிட வேண்டும் என்றும் தீவிர இடதுசாரிகள் குறிப்பிட்டதையும் அவற்றுக்கான மாவோயிசப் பதில்களையும் கண்டோம். அத்தகைய சக்திகள் க. பு., காலத்தில் தம் கருத்துகளை வேகமாக முன்னெடுத்துச் சென்றன.

1) கூட்டுடைமையின் அளவைப் பெரிதுபடுத்த வேண்டு மென்றும் பல கம்யூன்களை இணைக்க வேண்டும். அல்லது ஒரு கம்யூனுக்குள் இருக்கும் உற்பத்திக் குழுக்களை இணைக்க வேண்டும் என்றும் குறிப் பிட்டனர். தம் செல்வாக்குக்கு உட்பட்ட பகுதி களில் இதைச் செயல்படுத்தினர்.

2) விவசாயக் குடும்பங்களுக்குச் சொந்தப்பயனுக் கெனக் கொடுத்திருந்த துண்டு நிலம், தனியுடை மையின் ஆதாரம் எனக் கருதப்பட்டு, அதைப் பிடுங்க வேண்டும் என் வலியுறுத்தினர். தம் செல் வாக்கு உட்பட்ட பகுதிகளில் (ஜியாங்சி பகுதி) இத்தகைய சொந்தப்பயன் நிலங்கள் மூன்றில் இரு பங்கு பிடுங்கிக் கொள்ளப்பட்டன.

3. கம்யூன்களில் உள்ள உற்பத்திக் குழுக்களில் ஊதியம் இல்லாத உழைப்பில் சில மணி நேரம் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர்.

4) உணவு தானியங்களை மட்டுமே விளைவிக்கும்படி விவசாயிகள் கட்டாயப்படுத்தப்பட்டனர். விளை நிலங்களைப் பெருக்க ஏரிகளும் குளங்களும் மூடப்பட்டன. கனி மரங்கள் வெட்டப்பட்டன. மீன் பிடி நீர் நிலைகள் மூடப்பட்டன. இதன் விளை வாகச் சுற்றுப்புறச் சூழலில் ஒருவித செயற்கை நிலை உருவாக்கப்பட்டது.

5) உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற கோட்பாடு முதலாளியத்தை உயிர்ப்பிக்கும் கோட்பாடாகக் கருதப்பட்டு அதை முற்றாக நிராகரித்து, ஊதிய சமநிலை (equalization) பேண வேண்டும் என வற்புறுத்தப்பட்டது.

(சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக். 360—361; 381—382).

கம்யூன்களின் உருவாக்கம், மாவோ சொன்னதைப் போல படிப்படியாக **ஆனால் நிதானமாக** விவசாயிகளின் மனநிலையை அறிந்து கொண்டு நடத்தப்பட்டதாகும். இதில் **கட்டளையிடும் போக்கை** (Commandism) மாவோ முற்றாக நிராகரித்து விட வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பினும், வரலாற்றில் அதன்படியே நடந்தது எனச் சொல்வதற்கு இல்லை என்று கம்யூன் ஆதரவு அறிஞர்களே குறிப்பிட்டுள்ளனர். கம்யூன் உருவானவுடனே விரைவிலேயே பொதுவுடைமை சமூகத்தை அடைய வேண்டும் என்ற அகலய விருப்புடன் தீவிர இடது சாரிகள் மேற் குறித்த கருத்துகளை 1960 களிலேயே குறிப்பிட்டிருந்தனர். முதலாளியப் பாதையை எதிர்க்கும் போக்கில் உறுதியாக நின்று கம்யூனிச சமூகத்தை உடனடியாகக் கொண்டு வர வேண்டும் என்பதில் அதிக பட்சம் ஆர்வம் கொண்ட இவர்களின் நடைமுறை க.பு., காலத்தில் கட்சி யினால் வெகுவாக விமரிசிக்கப்பட்டு திருத்தியமைக்கப் பட்டது. 1971 மற்றும் 1972 ஆகிய ஆண்டுகளில் நடந்த கட்சியின் தலைமைக் கூட்டங்களில் இவை குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கம்யூனில் உற்பத்திக் குழுக்களின் இணைப்புக்குரிய புறவயத் தேவைகள் வளராத நிலையில் அதை முன்வைத்தல் கூடாது என்று மறுக்கப்பட்டது. விவசாயிகள் குழுக் களின் விருப்பத்துக்கும் உள்ளூர்த் தேவைக்கும் ஏற்ப எந்தப் பொருள்களையும் விளைவித்துக் கொள்ளும் உரிமை தரப்பட்டது; சொந்தப்பயனுக்கென்ற நிலங்கள் வைத்துக் கொள்ளவும் ஊதியமற்ற உழைப்பில் கட்டா யப்படுத்தக் கூடாது என்றும் (விருப்பம் இருப்பின் ஈடுபடலாம்)முடிவு செய்யப்பட்டன. உள்ளூர் நிலைமை களுக்கு ஏற்பவும் தன் சொந்த வெற்றிகரமான அனுபவத்தின் அடிப்படையிலும் உழைப்பு மதிப்பெண் களைக் கணக்கிட்டு ஊதியம் அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது. (சீனாவின் சோசலிசப் பொருளா

தாரம், பக். 383). இத்தகையை முதலாளிய உரிமைகளை முற்றாகத் துடைத்துவிட வேண்டும் என்ற அதிதீவிரப் போக்கிற்கு எதிராக, இவற்றை முழுமையாக்கி நிரந்தரப்படுத்தி விரிவுபடுத்த வேண்டும் என முதலாளியப்பாதையாளர்கள் விரும்பினர். இரண்டு வகைத் தீவிரவாதத்தையும் விமரிசிக்கும் வகையில் 1975 பிப்ரவரியில் மாவோ ஒரு சுற்றறிக்கை விடுத்தார். சோசலிச சமூகத்தில் சரக்கு உற்பத்திமுறை, எட்டு நிலைகளில் ஊதியமுறை, உழைப்புக்கேற்ற ஊதியம் ஆகியவை முதலாளிய உரிமைகளேயெனினும் **'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் அவை கட்டுப்படுத்தப்பட வேண்டும்'** என வலியுறுத்தி மாவோ அறிக்கை விடுத்தார். (மேற்படி நூல், பக்.400). தீவிர வலதுசாரிகளை **முதலாளியப் பாதையாளர், திருத்தல்வாதிகள்** எனச் சரியாக அடையாளமிட்ட மாவோ, தீவிர இடதுசாரியினரை ஒரு பொலிட் பீரோ (1974 ஜுலை)கூட்டத்தில் **நால்வர் கொண்ட ஒரு சிறு குழு** (a small fraction of four) என்று வர்ணித்தார்.

இக் காலத்தில் (1971 முதற்கொண்டு) சீனா வெளி நாடுகளுடன் குறிப்பாக முதலாளிய நாடுகளுடன் அரசு ரீதியிலான தொடர்பு கொண்டது. 1972 பிப்ரவரியில் அமெரிக்காவுடனும் செப்டம்பரில் ஜப்பானுடனும் அரசு ரீதியிலான தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன. தீவிர இடதுசாரிகள் **'கதவை மூடிவைத்து நாட்டைப் பூட்டி வைக்கும்'** (Keeping the door shut and locking the country up) என்ற கொள்கையை முன் வைத்தனர். முதலாளியப் பாதையாளர்கள் **அகலத் திறந்துவிடும் கொள்கையை** (Open Door Policy) முன் வைத்தனர். கட்சி, ஆட்சி ஆகியவற்றின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பில் இருந்த சூயென் லாயின் முன்முயற்சியில் இயந்திரங்களும் தொழில்நுட்ப மேம்பாட்டுக் கருவிகளும் இறக்குமதி ஆயின. இரசாயன

உரத் தொழிற்சாலை, பெட்ரோலியம் இரசாயன ஆலை, நிலக்கரி சுரங்கத்தொழில், இரும்பு எஃகுஆலை போன்றவற்றிற்குத் தேவையானவற்றை இறக்குமதி செய்தனர். 1960இல் சீனா-ரசியா உறவின் சீர்கேட்டிற்குப்பின் ரசியாவின் தொழில் நுட்ப உதவி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திடீரென நிறுத்தப்பட்டது. அதன் பின் **1973**இல் வெளிநாடுகளிலிருந்து-குறிப்பாக முதலாளிய **நாடுகளிலிருந்து இயந்திர இறக்குமதி** செய்யப்பட்டது. இதுவரை கடைப்பிடிக்கப்பட்ட தேசியத் தனிமைக் (National Seclusion) கொள்கை கைவிடப்பட்டு, முதலாளிய நாடுகளுடன் பொருளாதார உறவுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு டெங் தலைமையிலான முதலாளியப் பாதையாளர்கள் **நான்கு நவீனமயமாக்கல் கொள்கையை** (25—2—1975) முன் வைத்தனர். வேளாண்மை, தொழிற்சாலை, இராணுவம், அறிவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் நவீனமயமாக்கல் கொள்கையை முன் வைத்தனர். நவீனமயமாக்கலை தீவிர இடதுசாரிகள் **முற்றாக நிராகரித்து 'ஒருமுறை செயற்கைக்கோள் விண்ணில் பறக்கவிடப்பட்டால் செங்கொடி தரையை நோக்கித் தாழ்ந்துவிடும்'** என விமரிசித்தனர். மாவோ டெங்கின் கொள்கைகளை விமரிசித்து 'சரியான முடிவுகளிலிருந்து திசைதிருப்பும் டெங்கின் வலது விலகல் முயற்சியை முறியடிப்போம்' எனக் கருத்துரைத்தார் (1975). டெங், அன்னிய இறக்குமதியை அதிகப் படுத்துவோம் என்று முழங்கியதற்காகக் களையெடுக்கப் பட்டார் (பீகிங் ரிவ்யு 27—8—76).

சீனாவிலிருந்து 1980க்குப்பின் வெளிவரும் அதிகார பூர்வமான படைப்புகளும் ரசியாவிலிருந்து வெளிவரும் படைப்புகளும் கலாச்சாரப் புரட்சியை **வரலாற்றில் நடைபெற்றிருக்க வேண்டாத கோரமிக்க நிகழ்வாக** வருணித்தன. சீனாவில் உற்பத்திச்சீர்குலைவு ஏற்பட்டு,

பெரும்பான்மை மக்கள் வறிய நிலைக்குத் தள்ளப் பட்டனர் என்றும் கணிக்கப்பட்டது. கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டது என்றும் தொடக்க நிலை, நடுத்தர நிலைப் பள்ளிகள் இரண்டாண்டுகள் மூடப்பட்டன என்றும் எல்லாப் பல்கலைக்கழகங்களும் ஆறு ஆண்டுகள் மாணவர்களைச் சேர்க்கவில்லையென்றும் குறிப்பிடப்படு கின்றன. அறிவியல் ஆய்வுக் கழகங்கள் கலைக்கப்பட்டு அறிவியல் தொழில்நுட்பக் கருவிகள் உடைக்கப்பட்டன என்றும் அறிவியல் அறிஞர்கள் இழிவுபடுத்தப்பட்டனர் என்றும் குறிப்பிடுகின்றன. இன்னும் குறிப்பாக மாவோ வின் அரசியல், **அறிவுப் பிறழ்ச்சி** (Paranoid) கொண்ட தாக இருந்தது என்று கூட வருணிக்கப்பட்டது.

ஆனால் மாவோ இவ்வாறு கருதவில்லை. 1958ஆம் ஆண்டுக்குப் பிந்தைய சோசலிச உருவாக்க காலத்திய கொள்கை நிர்மாணத்திற்காகவும் 1966ஆம் ஆண்டுக்குப் பிந்தைய க. பு., காலத்திய கொள்கை நிர்மாணத்திற் காகவும் முதலாளிய விமரிசகர்களால் கோர அரக்கனாக வருணிக்கப்பட்ட மாவோ இப்படி கருதினார்: (1967 ஆகஸ்டு).

> தற்போதைய மாபெரும் கலாச்சாரப் புரட்சி, வரலாற்றில் **முதன்முதலில்** இப்போதுதான் நடக் கிறது. எதிர்காலத்தில் இதைப் போன்ற பல புரட்சிகள் நடத்த வேண்டியது அவசியமாகும். வெற்றி பெறப்போவது எது? **சோசலிசமா அல்லது முதலாளியமா என்ற கேள்விக்குப் பதில்சொல்ல நீண்டகாலம் தேவைப்படும்.** இந்தப் போராட்டம் வெற்றிகரமாகத் தொடுக்கப்படாவிட்டால், **முதலா ளிய மீட்சி என்பது நிரந்தர சாத்தியமாக நீடித்து நிற்கும்.**

மாவோவின் முன்னுணர்திறன் (foresight) குறித்துப் பின்னர்க் காண்போம். மாவோ இங்கு சொல்வதைப்

போல சீனாவின் **க. பு.,** என்ற பெரும் நிகழ்வுக்கு வரலாற்றில் முன்னுதாரணம் இல்லை. உலக சோசலிச நிகழ்வுப் போக்குகளில் **பாரிஸ் கம்யூன் புரட்சிக்கும்** (1871) ரசியாவின் **சோசலிசப் புரட்சிக்கும் முன்னுதார ணங்கள் இல்லாததைப்போல** இதற்கும் இல்லை.

க.பு., உற்பத்திக்கும் புரட்சிக்கும் இடையிலான இயங்கியல் உறவைத் தெளிவாக முன் வைத்தது. க.பு., குறித்து வெளிவந்த மத்தியக்குழுவின் முதல் ஆணையே (8—8—1966) இதைக் குறிப்பிடுகிறது.

> மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி மக்களின் கருத்தியலைப் புரட்சிகரமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் விளைவாக அனைத்துப் பணிகளிலும் பெரிய, விரைவான, மிகச் சிறந்த, அதிகமான **பொருளாதாரப் பயன் களைக்** கொடுக்கும்.
>
> (சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக்.456)

எந்தவொரு சமூக மாற்றமும் தொடக்க காலத்திய சோதனை முயற்சிகளில் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தே தீரும் என்பதற்கு இணங்க, க. பு. வின் தொடக்க ஆண்டுகளில் ஏற்பட்ட உற்பத்திக் குறைப் புக்குப் பின்னர், உற்பத்தி பெருகியதைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. உற்பத்தியைத் திட்டமிட லிலும் நிர்வகித்ததிலும் மக்கள் திரளுக்கு பங்கிருந்ததை அறிகிறோம். **அடிமட்டத்திலிருந்து** (From Below) என்பது நடைமுறையாயிற்று. மக்கள் தொகையில், உலகிலேயே மிக அதிக எண்ணிக்கையைக் கொண்ட நாட்டில் முதன் முதலாக அடித்தளமக்களை சகல துறைகளிலும் பங்கெடுக்க அனுமதித்து அவர்களது முன் முயற்சியைக் கட்டவிழ்த்து விட்டபொழுது நாட்டில் நிலைத்ததன்மையும் (Stability) ஒற்றுமையும் சீர்குலைகின்றன என்பதைக் காரணங்களாகக் காட்டி,

மக்களின் முன்முயற்சியை மீண்டும் கட்டிப்போட முயன்றபொழுது மாவோ இவ்வாறு குறிப்பிட்டார்.

> நிலைத்த தன்மையும் ஒற்றுமையும் தேவை எனச் சொல்லும் பொழுது வர்க்கப்போராட்டத்தை தள்ளி வைத்துவிட வேண்டும் என்பதாகாது ... **வர்க்கப் போராட்டமே அனைத்துக்கும் கேந்திரக் கண்ணி.**

கட்சியிலும் ஆட்சியிலும் தலைமைப் பீடத்தில் அமர்ந்துள்ள அதிகாரத்துவக் குறுங்குழுவினரையும் முதலாளியப் பாதையாளர்களையும் எதிர்த்த போராட்டமாகத் தொடங்கிய க. பு., வின் முதன்மை நோக்கம், **மக்களுக்கு அரசதிகாரத்தில் பங்களித்தலாகும்.** கம்யூன்கள் கீழ்நிலை அதிகார உறுப்புகள் என்ற விதத்தில் ஏற்கனவே இந்நிலை ஓரளவு இருப்பினும் இந்நிலை விரிவுபடுத்தப்பட்டது. மேலும், சிந்தனை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான முரண்பாட்டில் சிந்தனை உழைப்பின் மேலாதிக்கத்தைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; ஏற்கனவே கம்யூன் நிர்வாகிகள் உடல் உழைப்பு ஆற்ற வேண்டியது அவசியம் என்றும் இதனடிப்படையிலே அவர்களது ஊதியம் நிர்ணயிக்கப்படும் என்றும் கண்டோம். ஆனால் **ஆலை உறவுகள் இவ்வாறு அமையவில்லை.** இதைச் சரிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஊதிய வேறுபாடுகளைக் குறைப்பதற்கு **கீழ்நிலைஊதியம்** (lower level wage) **அதிகரிக்கப்பட்டது.** கிராமத்துக்கும் நகரத்துக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் பெருத்த மாற்றங்களை ஏற்படுத்த இயலவில்லையெனினும் **விவசாயிகளின் சராசரி நுகர்வு** அளவு அதிகரித்துக் கொண்டே வந்தது.

(1952 = 100)

| ஆண்டு | விவசாயிகள் | தொழிலாளர்/ பணியாளர் |
|---|---|---|
| 1966 | 130·9 | 141·3 |
| 1970 | 141·4 | 152·0 |
| 1975 | 150·9 | 187·3 |
| 1976 | 151·4 | 195·7 |

(சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக்.486)

தொழிலாளர் / பணியாளர் சராசரி நுகர்வு அளவு வீதம் விவசாயிகளின் சராசரி நுகர்வு அளவு வீதத்தை விட மிகை அதிகமாக இல்லை. மேலும் டிராக்டர், உரம், பூச்சி கொல்லி போன்ற உழவுக் கருவிகளுக்கும் இடுபொருள்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட விலை குறைந்து கொண்டே வந்ததால் விவசாயிகள் **சீனாவின் சோசலிசக் காலத்தில்** சுரண்டப்பட வில்லை. எடுத்துக் காட்டுகள் காண்போம்.

1) 1959 = 1,16,500 கி.கிராம் கோதுமை = 75 குதிரை மின்னாற்றல் கொண்ட டிராக்டர் ஒன்று

1978 = 53,400 கி.கிராம் கோதுமை = 75 குதிரைமின்னாற்றல் கொண்ட டிராக்டர் ஒன்று

2) 1959 = 1·6 கி.கி. கோதுமை = 1 கி.கி. உரம்

1978 = 0·5 கி.கி. கோதுமை = 1 கி.கி. உரம்

3) 1959 = 35 கி.கி. கோதுமை = 1 கி.கி. பூச்சிக் கொல்லி மருந்து

1978 = .5 கி.கி. கோதுமை = 1 கி.கி. பூச்சிக் கொல்லி மருந்து

முதலாளியப் பாதையாளர்களை எதிர்த்துத் தொடங்கப்பட்ட இந்தப்புரட்சியில் அதிதீவிர இடதுசாரி நிலை வலுத்ததை மாவோவும் சூயென்லாயும் கண்டித்தனர். சோசலிசத்தைத் தொகுத்துக்கொள்ளும் காலகட்டத்தில் இடையூறாக இருந்த முதலாளியச் சிந்தனையைக் களைந்தெறிய முனையும் காலத்தில், உடனடியாகக் கம்யூனிசத்தை நோக்கிச் செல்லக்கூடிய பாதையை முன்வைத்த அதிதீவிர இடதுசாரி நிலை, சீனாவின் அன்றைய புறவய நிலைமையைக் கணக்கில் கொள்ளாமல் தம் அகவய விருப்பத்தை மட்டுமே முன்னிலைப்படுத்தியது. இது க. புரட்சியின் துணை விளை பொருளாகும். இது சீனாவின் புறவய நிலையைக் கருத்தில் கொண்டு கையாளப்பட வேண்டிய 'போர்த் தந்திர நெகிழ்ச்சியின் தேவையை உணர்ந்து கொள்வதில் நம்பிக்கையற்ற விதத்தில் தோல்வியடைந்தது' (Mao's Last Battle. P.12). ஒரு தவறான போக்கை எதிர்த்துத் தொடங்கிய போராட்டத்தில் உபபொருளாகத் தோன்றிய இன்னொரு தவறான போக்கை மாவோ ஆதரிக்கவில்லை. சூயென்லாய் ஒருமுறை சொன்னதைப் போல லியோசோசியின் திருத்தல் வாதமும் லின்பியோவின் திருத்தல் வாதமும் பரஸ்பரம் தமக்கிடையே போராட்டம் நடத்தும்பொழுது, ஒன்றையொன்று மூடிமறைத்துக் கொள்கிறது. ஒரு சோசலிச நாட்டில் தேவைப்படும் க. புரட்சியை சரியான விதத்தில் நடத்துவதற்கும் அதன் சாதகங்களைத் தொகுத்துக் கொண்டு அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்கும் உரிய தடையாக அதிதீவிர இடதுசாரி நிலை அமையும் என்பதே சீனாவின் அனுபவமாக எஞ்சி நின்றது. இதுவே அடுத்த கட்டத்தில் முதலாளியப் பாதையாளர்களின் வெற்றிக்குரிய அடித்தளமாகவும் அமைந்தது.

முதலாளியப் பாதையாளர்கள் போர்த்தந்திர நெகிழ்ச்சியின் தேவையை உணர்ந்திருந்தனர். மாவோ

வின் மறைவிற்குப் (செப்டம்பர் 1976)பின் கட்சியில் செல்வாக்கு குறைந்த மாவோயிச ஆதரவாளரான **ஹுவா குவா பெங்கை** முன்னிலைப்படுத்தினர். க. பு., வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதானது, வர்க்கப் போராட்டம் முடிந்துவிட்டதாகாது என்றும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத் தலைமையின் கீழ் தொடர்ந்து நடைபெறும் புரட்சி முடிந்துவிட்டதாகாது என்றும் ஹுவா அறிவித்தார் (ஆகஸ்டு 1977).

இக்காலத்தில் (டிசம். 1978) கூடிய கட்சியின் 11ஆம் காங்கிரசின் மூன்றாம் பீளினம் எடுத்த முடிவுகள் தொடர்ந்து இன்று வரை நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 1979—1989 வரையிலான சீனத்தின் பொருளாதார மாற்றங்களைக் காண்பதும் அவை எந்த விதத்தில் முதலாளியத் தன்மையைப் பெற்றுள்ளவையாக இருக்கின்றன என்பதைக் காண்பதும் அவசியமாகும். அதற்கு முன் இன்றைய சீனாவின் அதாவது 1980கள் தொடங்கிய ஒரு பத்தாண்டு கால சீனாவின் ஆளும்வர்க்கத்தின் அரசியல்,பொருளாதாரம் பற்றிய கருத்துகளையும் மார்க்சியம், சோசலிசம் என்பன குறித்த கருத்துகளையும் தெரிந்துகொள்வது வசதியாக இருக்கும். 1979 முதற்கொண்டு கருத்தியல் செல்வாக்கில் உள்ள டெங்கின் கருத்துகளுடன், பீகிங் நகரில் உள்ள அதிகாரபூர்வமான மார்க்சிய லெனினிய மாவோயிச சிந்தனை ஆய்வுக் கழகத்தின் இயக்குநர் **சு சாவோ ஷி** (Su shao zhi)யின் கருத்துகளையும் அடுத்தடுத்துக் காணவேண்டும். இங்கு டெங்கின் கருத்துக்களைக் காண்போம் :

அ) மார்க்சியத்தின் பொதுவான உண்மையை சீனாவின் பருண்மையான யதார்த்தத்தோடு இணைத்து சீனாவின் பண்புகளுடன் கூடிய சோசலிசத்தை உருவாக்குவோம்.

ஆ) சோசலிசம் என்றால் என்ன ? மார்க்சியம் என்றால் என்ன ? உற்பத்தி சாதனங்களை வளர்த்தெடுப்பதற்கு மிக அதிகம் முக்கியத்துவம் கொடுப்பதோடு மார்க்சியம் இணைந்துள்ளது. சோசலிசக் கட்டத்தின் அடிப்படைப் பணி உற்பத்தி சக்திகளை வளர்த்தெடுப்பதாகும். முதலாளிய முறையைவிட உற்பத்தி சக்திகளை மிக விரைவாகவும் அதிகமாகவும் வளர்த்துக் காண்பிப்பதில் சோசலிச சமூகத்தின் மேம்பட்ட தன்மை அடங்கியுள்ளது. (30—6—84)

இ) உருவாக்கப்பட்ட செல்வம், முதலாவதாக அரசுக்கும் இரண்டாவதாக மக்களுக்கும் சொந்தமாதல் வேண்டும் என்பது சோசலிசத்துக்கும் முதலாளிய முறைக்கும் இடையிலான வேறுபட்ட அம்சங்களுள் ஒன்றாகும். எனவே புதிய முதலாளி உருவாதல் சாத்தியம் இல்லை. சோசலிசம் என்பது பொதுமையான வளமையாகும் (Common prosperity); சிலர் சுரண்டலாளர்களாக இருந்து பெரும்பான்மையினர் வறுமையோடு இருக்கும் நிலை அல்ல. (மே/ஜூன் 1985)

ஈ) சோசலிசம் இரண்டு பெருந்தேவைகளை நிறைவு செய்தல் வேண்டும்.

அவை :

அ. பொருளாதாரம் சமூகவுடைமையால் ஆதிக்கம் செலுத்தப்படல் வேண்டும். இது அனைத்து மக்கள் உடைமை/கூட்டுடைமை என்ற இரண்டையும் கொண்டதாகும். தனிப்பட்ட பொருளாதாரம் சிறிதளவு வளர்ச்சி பெறுதலை நாம் அனுமதிக்கிறோம்.

ஆ. சமூகத்தில் பணக்காரன் என்றும் ஏழை என்றும் இரண்டு முரண்பட்ட சக்திகள் (polarisation) இருக்கலாகாது என்பதாகும்.

நாம் சோசலிச சமூக வுடைமையைக் கொண்டிருக்கும் வரையிலும் சமூகத்தில் முரண்பட்ட சக்திகள் தோன்றுவதற்கு எதிராகப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் வரையிலும் நாம் சோசலிசத்தைப் பேணிக் கொண்டிருக்கிறோம்.

(28—8—85)

அ) சில பகுதிகளை ஏனைய பகுதிகளை விடவும், சிலரை ஏனைய மக்களைவிடவும் முன்னரே வளமையாக்குவதை அனுமதிப்பதன் நோக்கம், படிப்படியாக எல்லாப் பகுதிகளும் எல்லா மக்களும் வளமையாவதற்கு உரியதைச் செய்வதாகும். நாம் பொதுமையான வளமைக்குப் பணியாற்றுவோம். எனினும் சில வருமான வேறுபாடுகளை அனுமதிப்போம்.

(30—12- 86)

1979 முதல் சீனா பின்பற்றிய பொருளாதார மாற்றங்களைக் காண்பதற்கு முன் அவற்றின் திசைவழி **சோசலிசமா** அன்றி **முதலாளியமா** என்பதைக் காண மேற்குறித்த கருத்துகள் பெரிதும் பயன்படும்.

சோசலிசம் குறித்த மார்க்சின் அளவுகோல்களை மறுத்தும் சோசலிச நாட்டில் முதலாளிய மீட்சியின் சாத்தியப்பாடு குறித்த லெனினின் கருதுகோளை மறுத்தும் 1957 க்குப் பிந்தைய மாசேதுங் சிந்தனையை (குறிப்பாக சோசலிச சமூகத்தில் வர்க்கப் போராட்டம், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் தொடர் புரட்சி ஆகியவை) மறுத்தும் இவை காணப்படுகின்றன. ஆனால் சீனா பின்பற்றுவதற்காக அறிவிக்கப்பட்ட

நான்கு முதன்மைக் கோட்பாடுகளுள் ஒன்று, மார்க்சிய-லெனினிய மாசேதுங் சிந்தனையாகும். இது மா. லெ-மாசேதுங் சிந்தனையைப் பெயரளவில் சொல்லிக் கொண்டு செயலளவில் மறுப்பதாகும். சோசலிச சமூகத்தில் வர்க்கங்கள் இருத்தலையும் அத்தகைய வர்க்கங்கள் தம்முள் பகைமுரண் சக்திகளாக உருவெடுக்கும் சாத்தியத்தையும் மறுப்பதனால் சோசலிசக் காலத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தத்துவ அளவில் இது நிராகரிக்கின்றது. ஆயினும் டெங் சர்வாதிகாரத்தை முற்றாக நிராகரிக்க வில்லை (30—12—86). டெங் வற்புறுத்துவது, முதலாளிய வர்க்க சர்வாதிகாரம் ஆகும்.

சோசலிசம் குறித்த சீனப்புரிதலும் இங்கு முற்றாகத் திரிந்து போயுள்ளது. முதலாளிய முறையைவிட உற்பத்தி சக்திகளை மிக விரைவாகவும் அதிகமாகவும் வளர்த்துக் காட்டுவதே சோசலிசம் என **அழுத்தம்** கொடுப்பதன்மூலம் சோசலிசத்தில் **உற்பத்தி உறவுகளின் சீரமைப்பு** பின்னடைந்து போய் விடுகின்றது. சோசலிச சமூகத்தில் பின்னடைந்த உற்பத்தி சக்திகளுக்கும் முன்னேறிய உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடே பிரதானம் என்றும் எனவே உற்பத்தி சக்திகளை வளர்ப்பதன் மூலமே இதைத் தீர்க்க முடியும் என்றும் குறிப்பிட்ட **லியோவின் கருத்துத் தொடர்ச்சியே** இதுவாகும். உற்பத்தியை அதிகப்படுத்தும் இந்த அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து, **இலாபமே உற்பத்தியின் நோக்கம், முதலில் சிலர் பணக்காரர்களாவோம், கம்யூனிஸ்டைவிட நிபுணரே மேல்** (Expert rather than Red), **சுதந்திரச் சந்தை, பொருளாதார உற்பத்திப் பொறுப்புமுறை,** என்பன போன்றவை தொடர்ந்து வருகின்றன. இவையனைத்துமே 1960களில் மாவோயிசத்தை எதிர்த்த **லியோவிசக் கோட்பாடுகள்** ஆகும். உற்பத்திச் சாதனங்களை அரசுடைமையாக்குவதாலும் உழைப்புக்கு

ஏற்ற ஊதியத்தை வழங்குவதாலும் மட்டுமே ஒரு சமூகத்தை சோசலிச மூலமாக வரையறை செய்ய வேண்டும் என்பதே சீனாவின் இன்றைய கருத்து. இவை சீனாவில் எந்த அளவு நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளன என்பதைப் பின்னர் காண்போம்.

உற்பத்திச் சாதனங்களின் அரசுடைமை இன்றி சோசலிச உறவுகள் சாத்தியமில்லையெனினும் இங்கு அரசின் வர்க்கத் தன்மையையும் உற்பத்தி சாதனங்கள் மூலதன இயல்பிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதை யும் பொறுத்துள்ளது. இத்தகைய நிபந்தனைகளின்றி சோசலிச உறவுகளைக் காண இயலாது. மேலும் **உழைப்புக்கேற்ற ஊதியம்** என்ற கோட்பாட்டில் சம உழைப்புக்கு சம ஊதியம் என்ற **சமத்துவமும்** தனிநபர் களுக்கு இடையிலான சமனற்ற தன்மையின் (unevenness) அடிப்படையில் தனிநபர்களுக்கு இடையில் சமனற்ற ஊதியம் என்பதில் **சமத்துவமின்மையும்** உள்ளது. உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற கோட் பாட்டில் உள்ள சமத்துவமின்மையில் உடல் உழைப்பு/ சிந்தனை ஊழைப்பு, நகரம்/கிராமம் ஆகியவற்றின் அடிப்படையிலான முரண்பாடும் உள்ளது. இந்த சமத் துவ மின்மையைக் குறைக்கும்/கட்டுப்படுத்தும் விதத்தில் சமூகத்தின் புறநிலை வளர்ச்சியோடு இயைந்து செயல் பட வேண்டியுள்ளது. 1975 இல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் இத்தகைய முதலாளிய உரிமை கள் கட்டுப்படுத்தப்பட வேண்டிய தேவையை குறித்து ஒரு நெறிமுறையை மாவோ 'சுட்டிக் காட்டினார் (சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக். 400). இதற்குமாறாக இந்த சமத்துவமின்மையை அதிகரிக்கும் விளைவை ஏற்படுத்தக்கூடிய பொருளாதார ஊக்கத்தை முன்வைப்பது, முதலாளியக் கண்ணோட்டத்தை வளர்க்கும். இதன் அடிப்படையில் தனிநபர்களுக்கு இடையிலான வேறுபாடுகள் முன் வைக்கப்படுகின்றது.

இதிலிருந்து **அதிகத் திறமை அதிக ஊதியம்** என்ற கருத்தும் முதலில் **சிலரையும் சிலபகுதிகளையும் வளமை யாக்குவோம்** என்ற நிலைபாடும் உருவாகின்றன. சோசலிச சமூகத்தில் சிலர் பணக்காரராக மாறும் வாய்ப்பைக் குறிப்பிடும் காரல்மார்க்ஸ்,சம உழைப்புக்கு வழங்கும் சம ஊதியத்தை ஒருவர் எப்படி தன் குடும்பத் தினருடன் பங்கிட்டுக்கொள்கிறார் என்பதைப்பொறுத்து (திருமணம் ஆனவர்/ஆகாதவர்; குழந்தையுள்ளவர்/ இல்லாதவர். இன்னும் இவை போன்றவை) அமை கிறது என்றார் (Gritique of the Gotha programme pp. 16-17). **சொந்த உழைப்பின் மூலம் பணக்காரர் ஆவோம்**, என்ற கருத்தும் கூலியாள்களை அமர்த்து வதால் சுரண்டல் முறையை முற்றாக நீக்க இயலாது என்ற நடைமுறையும் உற்பத்திப் பகிர்வில் உள்ள சமனற்ற தன்மையை அதிகப்படுத்துவதற்குரிய அடித் தளமாகும். **சில வருமான வேறுபாடுகளை அனுமதிப் போம்** என்பதும் (30-12-86 டெங்)சமனற்ற தன்மையை நிரந்தரப்படுத்தும் உணர்வுபூர்வமான முயற்சியும் விருப்பமும் ஆகும்.

மாவோவின் இறுதிக் காலத்திலேயே அன்னியத் தொழில்நுட்பமும் இயந்திர இறக்குமதியும் சீனாவிற் குள் நுழைந்துவிட்டன. எனினும் அன்னிய நாடுகளின் குறிப்பாக ஏகாதிபத்திய நாடுகளின் மூலதன முதலீட்டுக் காக நாட்டை **அகலத் திறத்தலையும்** சோசலிசக் கட்ட மைப்புக்கு ஏகாதிபத்திய நாடுகளின் முதலீடு ஐயத்துக்கு இடமின்றி **சேவை செய்யும்** என்பதை ஒரு கோட் பாடாக்கியும் செயல்பட்டமைக்கு டெங்கிற்கு ஏகாதி பத்திய உலகம் நன்றிக்கடன்பட்டுள்ளது. இத்தகைய தன்மைகள் கொண்ட முதலாளிய மீட்சியை சீனாவின் தனிப் பண்புகள் கொண்ட சோசலிசம் என்பதாக டெங் வரையறுக்கிறார். சீனாவின் இருவழிப் போராட்ட வரலாற்றில் லியோவின் தலைமையிலான முதலாளியப்

பாதையின் வெற்றியையே இது குறிக்கிறது. இங்கு **சீனாவின் தனிப்பண்புகள் என்ற தொடர் நம்மைத் திசை திருப்பப் பயன்படுகிறது.** எந்தவொரு நாட்டிலும் சோசலிசம் அதனதன் **தேசிய வடிவங்களுக்குத்** (national in form socialism in content) தக உருவாக்கப் படவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளும் நேரத்தில் சோசலிசத்தின் பொதுவான, அனைத்தும் தழுவிய உள்ளடக்கம் (Universal Content) நாட்டுக்கு நாடு வேறுபடும் என்பதை ஒப்புக்கொள்ள இயலாது. இக் கண்ணோட்டத்தில் காணும்பொழுதே சீனாவின் சோசலிசப் புரிதல் முற்றாகத் திரிந்தும் **முதலாளிய முறையிலான பொருளாதாரக் கட்டமைப்புக்கு சோச லிசப் பெயர் சூட்டலே** சீனாவின் இன்றைய தனிப் பண்பாகவும் உள்ளது எனலாம்.

டெங்கின் திருத்தல்வாதத் தத்துவப் பின்புலத்தில் கொணரப்பட்ட பொருளாதார மாற்றங்களைக் காண் போம். 22—12—78இல் கூடிய கட்சியின் 11 ஆம் மத்தியக் குழுவின் 3 ஆம் காங்கிரசு.

1) வர்க்கப் போராட்டமே கேந்திரக் கண்ணி என்பதைப் புறக்கணித்து சோசலிச நவீனமய மாக்கலை ஏற்றது;
2) பொருளாதார உற்பத்திப் பொறுப்பு முறை யைக் கொண்டு வந்தது.

இதனடிப்படையில் வேளாண்மைத் துறையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. மக்கள் கம்யூன் முறை, **திறனற்றது** (inefficient) என்றும், **கண்மூடித் தனமானது** (rash ness) என்றும் **மேலிருந்து திணிக்கப் பட்டது** என்றும் அதில் **உற்பத்தி மிகவும் குறைந்து விட்டது** என்றும் டெங்கால் விமர்சனம் செய்யப்பட்டு, புதிய முறை கொணரப்பட்டு, அடுத்தடுத்த ஆண்டு

களில் பல மாற்றங்கள் கொணரப்பட்டன. டெங்கின் விமரிசனங்களின் நம்பகமற்ற தன்மையைப் பின்னால் காண்போம். முதலில் இந்த மாற்றங்களைக் காண்போம்.

1) உற்பத்தியோடு இணைக்கப்பட்ட ஊதியத் துடன் கூடிய ஒப்பந்த அடிப்படையிலான உற்பத்திப் பொறுப்பு முறை (Contracted Responsibility System with remuneration linked to output) கொணரப்பட்டது.

2) குடும்பத்தை அடிப்படை அலகாகக் கொண்டு நிலங்கள் 15ஆண்டுகள் அல்லது 30ஆண்டுகள் வரை குத்தகைக்கு விடப்பட்டன. இதன் குத்தகை உரிமை, பரம்பரை பரம்பரையாகும். திறமையான குடும்பத்தினர்க்குப் படிப்படி யாகக் கூடுதல் நிலம் கொடுக்கப்படும். குத்தகை நிலத்தை நகரிய அரசின் இசை வுடன் வேறொருவருக்கு மாற்றலாம்: ஆனால் விற்கவோ, வாடகைக்கு விடவோ முடியாது. குத்தகை நிலத்தை வெறுமனே வைத்திருந் தால் பறிமுதல் செய்யப்படும். டிராக்டர்கள், உழவுக் கருவிகள், டிரக்குகள் போன்றவை குத்தகையாளர்க்கு சுலப, மற்றும் நீண்டகால தவணையில் விற்கப்பட்டன. இதற்குத் தேவைப்படும் மூலதனத்தை வங்கிகள் கடனா கவும் கொடுத்தன.

3) எதை விளைவிக்க வேண்டும் என்ற உரிமை குத்தகையாளர்க்கு உண்டு. விளைச்சலில் அரசுக்கு நிர்ணயிக்கப்பட்ட பகுதியை சந்தை விலைக்குக் குறைவாக விற்க வேண்டும் என்றும் அதற்கு மேற்பட்ட பகுதியை கூடுதல் விலையில் விற்கலாம் என்றும் இருந்தது.

ஆனால் 1985 இறுதியில் விளைச்சலின் அளவுக்கேற்ப வரிகட்டும் முறை கொணரப் பட்டது.

4) விவசாயிகள் தம் சேமிப்பை நிலத்தில்/கிராமப் புறத் தொழில் முதலீடு செய்யலாம். தனியாக அல்லது கூட்டாக நிறுவனங்களை ஏற்படுத் திக் கொள்ளலாம். சட்டப்பாதுகாப்பு உண்டு.

5) நிலத்தில் கூலிக்கு வேலையாள்கள் அமர்த்தும் முறை உண்டு (1/1983). நில அளவுக்கு ஏற்ப கூலிகளின் எண்ணிக்கை உண்டு. இந்த எண்ணிக்கைக்கும் மேற்பட்டு பயன்படுத் தினால், வரி கட்டிய பிறகு கிடைக்கும் இலா பத்தில் கூலிகட்கு ஊக்கத்தொகை கொடுக்கப் படவேண்டும்.

இது **கூட்டுடைமைக் கலைப்பு முறை** (Decollectivisation) ஆகும். ஐந்தாண்டுகளுக்குள் (1979-1983) கம்யூன்களில் உள்ள குடும்பங்களில் 97.1% எண்ணிக் கையும் மொத்த உற்பத்திக் குழுக்களில் 99.5% எண்ணிக்கையும் குத்தகை முறைக்கு வந்தன (சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக்-442).

கூட்டுடைமைக் கலைப்பு முறைக்குப்பின் நிலம் என்ற உற்பத்திச் சாதனம் விவசாயிகளுக்கு நேரடியான தனியுடைமையாக ஆக்கப்படவில்லையே தவிர, **நீண்ட காலக் குத்தகை உரிமை, பரம்பரை அனுபவ உரிமை, குத்தகை மாற்று உரிமை, முதலீடு செய்ய உரிமை, முதலீட்டுக்குப் பாதுகாப்பு, விளை பொருளைத் தேர்ந் தெடுக்கும் உரிமை, டிராக்டர்கள் போன்ற உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமை உரிமை, சுதந்திரச் சந்தை, வேளாண்மை உபரியை தொழில் முதலீடு செய்யும் உரிமை, கூலியாள்களை வைத்துக் கொள்ளும்**

உரிமை என்று பல விதங்களிலான முதலாளியத் தனியுடைமை உரிமைகளின் மூலமாக செயலளவிலான தனியுடைமை (defacto private ownership) பேணப் பட்டு வருகிறது.

கூட்டுடைமைக் கலைப்பு முறை கைவினைத் தொழிலிலும் கொண்டுவரப்பட்டது. மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யும் விதத்தில் தனியார் தொழிலகங்கள்/வணிக நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டன (1982). இதன் விளைவாக 8 நபர்கள் வரை பணிபுரியக் கூடிய ஒரு நிறுவனத்தில் ஒருவர் தானும் பணிபுரிந்து கொண்டே முதலாளியாக இருக்கலாம். 1978 வரை $1\frac{1}{2}$ லட்சம் கைவினைஞர்களே தனிநபர் பொருளாதார அமைப்பில் (individual Economy) இருந்தனர். கூட்டுடைமைக் கலைப்புக்குப் பின் முதலாளிய முறையிலான கைவினைத் துறையில் 1983இல் 23 லட்சம் என்றும் 1984 இல் 54 லட்சம் கைவினைஞர்கள் என்றும் பெருத்தனர் எனத்தெரிகிறது. பலரைக் கூலிக்கு வைத்து வேலை வாங்கும் இந்த முறையில் சுரண்டல் உறைந்திருக்கவில்லை யென்றும் அப்படியே அது ஓரளவு சுரண்டலாக இருப்பினும் அது முதலாளியத் திசைவழியில் நோக்கி நாட்டை அழைத்து செல்லவில்லை யென்றும் அதிகாரபூர்வமான கருத்து கள் கூறப்படுகின்றன (China Daily 22-4-1984). இந்த 'முதலாளிய மற்ற சுரண்டல்,' சீனாவின் தனிப் பண்புகளுடன் கூடிய சோசலிசமாகவும் சித்திரிக்கப்படு கிறது.

வேளாண்மையிலும் கைவினைத் துறையிலும் 1958 முதல் படிப்படியாகக் கொண்டுவரப்பட்ட கூட்டுடைமை முறை (இன்னும் சொல்லப்போனால் 1953 முதல்) 1979 முதல் விரைவாகக் கலைக்கப்பட்டு, முதலாளிய முறையிலான அம்சங்களுடன் இணைந்த பொருளாதார முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தப்

பொருளாதார உற்பத்திப் பொறுப்பு முறையின் அம்சங்கள், நகர்ப்புற ஆலைத் தொழிலுக்கும் விரிவு படுத்தப்பட்டது. இதன்படி பொருளாதார நிர்வாக முறை பெரிதும் மாற்றப்பட்டது.

I கட்சி, இராணுவம், மக்கள் திரள் ஆகிய பிரிவினரைப் பிரதிநிதித்துவப் படுத்திய புரட்சிகரக் குழுவின் நிர்வாக முறை நீக்கப்பட்டு, ஆலைக்கு ஒரு நிர்வாகி/இயக்குநரைப் பொறுப் பேற்க வைக்கும் தனிநபர் நிர்வாக முறை (personal managerial system) கொண்டுவரப் பட்டது. தொழிலாளர்களின் சங்கம், ஆலையில் உள்ள கட்சித் தோழர்கள் அமைப்பு ஆகிய வற்றின் பிரதிநிதிகளும் ஆலை நிர்வாகியும் அடங்கிய ஒரு குழு இருப்பினும், நிர்வாகியின் முடிவே இறுதியானது. கட்சி அமைப்பு, பொருளாதார நிர்வாகத்தில் நிர்வாகியையே ஆதரிக்க வேண்டும். திட்டமிடல், விற்பனை, பொருள் வழங்குதல், இலாபப்பகிர்வு, வேலை நியமனங்கள், தொழிலாளர்க்குரிய தண்டனை கள் ஆகியவற்றில் இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பு, நிர்வாகிக்கு உண்டு. கட்சி அணி, தொழிலாளரின் கருத்தியல் மற்றும் அரசியல் பணிகளுக்கு மட்டுமே பொறுப்பேற்றுக் கொள்கிறது. இது லியோவின் கம்யுனிஸ்டை விட தொழில் நிபுணரை மேலாக வைத்தல் (Expert rather than Red) என்ற கொள்கையின் விரிவு ஆகும்.

II தொழிலாளர்கள் நிர்வாகியோடு ஒப்பந்தத்தில் ஈடுபட்டு நியமனம் பெறுவர். ஒப்பந்தத்தின் எந்தவோர் அம்சத்தையும் விலக்கிக் கொள்ளும் உரிமை நிர்வாகிக்கு எப்பொழுதும் உண்டு என்பதும் ஒப்பந்தத்தின் ஓரம்சம் ஆகும்.

III ஊதியம் பல விதங்களில் நிர்ணயிக்கப்படுகிறது.

அவை :

அ) ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து முடித்தல் அதற்கென குறிப்பிட்ட ஊதியம்.

ஆ) தொழில்நுட்பத் திறனை ஆண்டுக்கு ஆண்டு மதிப்பீடு செய்து அதனடிப்படையில் ஊதியம் உயர்வு / குறைப்பு. இதனால் 30./· தொழிலாளர்கள், மாறிக்கொண்டிருக்கும் ஊதியத்தில் (floating wage) உள்ளனர்.

இ) ஒரு தொழிலாளி தனக்கென ஒதுக்கப்பட்ட மாதப்பணி நிறைவேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு, போனசு போன்ற ஊக்கத் தொகை கொடுக்கப்படும்.

இவை அனைத்தும் உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற கோட்பாட்டில் உள்ள சமத்துவமின்மையை அதிகப்படுத்துகிறது. இவையே :

**கூடுதல் வேலைக்கு கூடுதல் ஊதியம்**
**குறைந்த வேலைக்கு குறைந்த ஊதியம்**
**வேலை இல்லையெனில் ஊதியம் இல்லை**

என்பனவற்றை முன்வைத்துள்ளன. திறன்மிகு நிர்வாகியின் நிர்வாக சுயராஜ்யத்தில் தொழிலாளிகள் ஒப்பந்தக் கூலிகளாக இழிந்து, தம் உழைப்புச் சக்தியைப் பண்டமாக விற்கிற முறையாகவே தேய்ந்து போய்விடுகிறது.

இத்தகைய தனிநபர் நிர்வாகம் மற்றும் தொழிலாளர் ஒப்பந்தமுறை 1979இல் சோதனை முறையில் முதலில் 6 ஆலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டு 1982 இல் 6000 ஆலைகளில் பயன்படுத்தப்பட்டது. இவை சீனாவின்

ஆலைகளில் **16 சதவீதமெனினும்** சீனாவின் தொழிற் துறை உற்பத்தியில் **60 முதல் 70 சதவீதம் வரை** இந்த ஆலைகள் நிறைவு செய்கின்றன. (சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக். 442) : இந்த எண்ணிக்கை 1984இல் எல்லா ஆலைகளையும் உள்ளடக்கியது.

1984இல் கொணரப்பட்ட இன்னொரு மாற்றம் ஆலை உடைமை முறையில் ஒரு குறிப்பிடத்தகுந்த விளைவை ஏற்படுத்தியது.

> சிறிய அளவிலான அரசுடைமை நிறுவனங்கள், பல தனியார்கள் இணைந்த கூட்டு நிறுவனங்களுக்கு அல்லது தனியார்களுக்குக் **குத்தகைக்கு** (Lease) விடப்பட்டது; அல்லது **ஒப்பந்த அடிப்படையிலும்** அரசிடம் பெற்று நடத்தலாம். (20—10—1984, 12 ஆம் காங்கிரசின் மூன்றாம் பீளினம்).

ஆக சோசலிச சொத்துடைமையின் இன்னொருவடிவாக இருந்த அரசுடைமை ஆலைகளில் :—

1) உற்பத்திக்கு மட்டுமே பொறுப்பேற்றுக் கொள்ளும் தனிநபர் சர்வாதிகார நிர்வாக முறை பேணப்பட்டது.

2) சிறிய ஆலைகள், புதிய முதலாளிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டன.

இதன் மூலமாகவும் **பெயரளவிலான அரசுடைமை செயலளவிலான தனியுடைமையாக்கப்பட்டது.** சோசலிச சமூகத்தில் ஆளும் வர்க்கமாக இருக்க வேண்டிய பாட்டாளிகள், தம் உழைப்பை விற்கும் கூலி அடிமைகளாகிப் போயினர். இன்னும் சரியாகச் சொன்னால், நிர்வாகிகள் உரிமையையும் பெற்ற ஒரு புதிய முதலாளிய அதிகாரத்துவ முறை ஏற்பட்டு விட்டது.

சீனாவின் தனிப்பண்புகளுடன் கூடிய சோசலிசத் துக்குத் துணையாக அமையக்கூடியது என அன்னிய முதலீடு கருதப்படுகிறது. அன்னிய முதலீடு, கூட்டு நிறுவனமாக (சீனமும் ஏதேனும் ஒரு வெளிநாடும் இணைந்த Joint venture) அல்லது முழுமைக்கும் வெளிநாட்டு நிறுவனமாக இருக்கலாம். **சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என அழைக்கப்படும் பகுதி** களில் அனுமதிக்கப்பட்ட இத்தகைய நிறுவனங்களுக் குரிய இலக்கணங்களைக் காணும் பொழுது **மூன்றாவது உலக நாடுகளில் அரைக்குடியேற்ற/சார்பு நாடுகளில் உள்ள அன்னிய முதலீட்டு நிறுவனங்களுக்குரிய எந்தவோர் இலக்கணத்துக்கும் மீறியதாக இல்லை** என்று அறியலாம்.

அவை :-

I ஆலைகள் நிர்மாணிக்கும் இடம் 30 முதல் 50 ஆண்டுகள் வரையில் அன்னிய நிறுவனங் களுக்குத் தரப்படும். காலவரையறை, பின்னர் விரிவுபடுத்தப்படும்.

II ஆலையின் நிர்வாக வாரியத்தில் (Management Board) சீனரே தலைவர் ஆவார். ஏனையோர் அன்னிய நாட்டினராக இருக்கலாம். தொழில் நுட்பமும், மூலதனமாகக் கருதப்படும். அன்னியத் தொழிலாளர்களும் பணிபுரியலாம்.

III சீனத் தொழிலாளர்களை ஊதிய ஒப்பந்த அடிப் படையில் நியமிக்கலாம். ஒப்பந்தத்தை மீறும் தொழிலாளர்க்கு ஊதியக் குறைப்பு முதல் பணி நீக்கம் வரை தண்டனை உண்டு.

IV ஊதியம், நாள் வேலை/ஒரு மணி நேர வேலை/ ஒரு குறிப்பிட்ட வேலை ஆகிய இவற்றின் அடிப் படையில் வழங்கப்படும்.

V இயந்திரங்களுக்கு இறக்குமதித் தீர்வை இல்லை. அன்னிய நாட்டினர் பயன்படுத்தும் அன்றாடப் பொருள்களுக்கும் தீர்வை இல்லை.

VI உற்பத்திப் பொருள்கள், அரை உற்பத்திப் பொருள்கள் (Semi finished products) ஆகிய வற்றுக்கு ஏற்றுமதித் தீர்வையும் இல்லை.

VII லாபத்தில் 15 சதவீதம் வருமான வரியாகும். 50 லட்சம் அமெரிக்கடாலர் இறக்குமதி செய்தாலோ அதியுயர்ந்த தொழில்நுட்பத்தை இறக்குமதி செய்தாலோ வருமானவரிக் குறைப்பு உண்டு. (அதாவது 7 முதல் 10 சதவீதம் மட்டுமே வரியா கும்). இலாபத்தை முழுமையாக இங்கு முதலீடு செய்தால், முழு வரிவிலக்கு அளிக்கப்படும்.

அரசின் நேரடி ஆதரவுடன் இயங்கும் இந்த நிறுவனங் களில் அன்னிய முதலீடும் பெருகுகின்றது; இவற்றில் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களும் பெருத்து வருகின்ற னர். **1983இல் 188** கூட்டு நிறுவனங்களும் **1985இல் 900** கூட்டு நிறுவனங்களும் இருந்தன. அன்னிய முதலீட்டை **1983இல் 14.55** பில்லியன் டாலர் என்றும் **1985இல் 17.2** பில்லியன் டாலர் என்றும் சீனா உள் வாங்கியுள்ளது. சீனாவின் உள்நாட்டுத் தேவைகளுக் கானவையாக இராமல், சர்வதேச சந்தையில் செல்வாக் குள்ள பொருள்களை உற்பத்தி செய்வதாக இந்த ஆலைகள் உள்ளன. **தொழில் நுட்பத்தில் பின்னடைந்த, மூலதனம் அதிகமிராத, மலிவு விலையில் உழைப்புச் சக்தியை விற்கத் தயாராக இருக்கும் தொழிலாளர்கள் பட்டாளம் உடைய ஒரு பின்னடைந்த முதலாளிய நாடு கடைப்பிடிக்கும் வழிகளைச் சீனா கையாளும் பொழுது அதன் முதலாளிய மீட்சி உறுதிப்பட்டு விடுகிறது.** இது 1979இல் தொடங்கி படிப்படியாக உருப்பெற்று, உறுதிப்படுகிறது. ஆனால் இதற்கான கருத்துப்

போராட்டம் சோசலிச உருவாக்கக் காலத்திலிருந்து கடுமையாக நடத்தப்பட்டதைக் காணலாம். இங்கே இன்னொன்றைக் கவனிக்க வேண்டும்.

சீனாவில் **சோசலிசத்தின் பின்னடைவும் புதிய முதலாளியத்தின் எழுச்சியும் சோசலிசப் பொருளாதார உருவாக்கத்தில் ஏற்பட்ட சரிவினாலோ வீழ்ச்சியினாலோ அல்ல என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.** சோசலிச உருவாக்கக் காலத்தில் தனிநபர் முயற்சி குறைந்துபோய் உற்பத்தி இழப்பும் குறைவும் ஏற்பட்டன என்றும் புதிய முதலாளிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். 1958-1978 காலத்தில் சில ஆண்டுகளில் சீனாவின் இயற்கை நிலை காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பினும் மொத்தத்தில் இருபதாண்டுக் காலத்தில் பலவித **நெளிவுசுளிவுகளுடன் கூடிய** உற்பத்திப் பெருக்கம் இருந்தது. மேலும் புதிய முதலாளியக் காலமான (1979—1989) இக்கட்டத்தில், உற்பத்தி மிக அதிகமான வேறுபாட்டுடன் தன்னைச் சிறப்பாக அடையாளப் படுத்திக் கொண்டுள்ளது எனக் குறிப்பிட முடியாது. ஒரு விபரத்தின்படி ஒட்டுமொத்த தேசிய உற்பத்தியின் (Gross National Product) ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம்,

1958—1978 காலத்தில் 8 சதவீதமாகவும்

1979—1988 காலத்தில் 10 சதவீதமாகவும்

இருந்தன என அறிகிறோம். அதே போல் தனிநபர் சராசரி தானிய நுகர்வும்(grain Consumption)பெரிதும் உயர்ந்திடவில்லை. 1957 இல் 306 கிலோ கிராம் என்றும் 1978இல் 300 கிலோ கிராம் என்றும் 1988இல் 345 கிலோ கிராம் என்றும் உயர்ந்தது.

விவசாயிகளுக்குத் தேவையான உரம், மின்சாரம், டீசல் போன்வற்றின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

1982—1989 காலத்தில் மின் கட்டணம் 167 சதவீதம், உரத்தின் விலை 60 சதவீதம் டீசல் விலை 221 சதவீதம் என்றும் உயர்ந்தன (Monthly Review March 1989). அதாவது குறைந்த அளவு ஆலைப் பொருள்களை கூடுதல் மதிப்பில் வாங்கும்படி நிர்புந்திக்கப்படுவதனால் விவசாயிகளின் உபரி வற்றடிக்கப்படுகிறது. ஆனால் சோசலிசக் காலகட்டத்தில் விவசாய இடுபொருள்களின் விலை, ஆலைப் பொருள்களின் விலையோடு ஒப்பு நோக்க குறைந்து கொண்டே வந்துள்ளது என இதற்கு முன் கண்டோம்.

திட்டமிடுதலின் இடத்தில் சந்தைப் பொருளாதார மதிப்புகள் செல்வாக்குப் பெற்றதால் உணவு தானியத்தைவிட பணப்பயிர் உற்பத்திக்கே முதலிடம் தரப்பட்டுள்ளது. 1979—1984 காலத்தில் உணவு தானியத்தின் உற்பத்தி 22½ சதவீதம் அதிகரித்தும் பருத்தி மற்றும் எண்ணெய்வித்துகள் என்பனவற்றின் உற்பத்தி 100 சதவீதம் அதிகரித்தும் உள்ளன. இதனால் விவசாய நாடான சீனா, உணவுப்பொருளை இறக்குமதி செய்யும் நாடாக மாறியுள்ளது. உற்பத்தி, மக்களின் தேவைக்கானதாக இராமல் சந்தைப் பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்டது. இது லியோ 1961இல் அதிகமாக வலியுறுத்திய கருத்தாகும்.

குத்தகை நிலங்கள் கூட்டுப்பண்ணை நிலங்களைவிட அளவில் சிறியவையாக இருப்பதால், குறைந்த அளவே இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நிலம் அதிகமாகக் கொண்டுள்ள சிறப்பு நிலைக் குடும்பங்களே (Specialised Families)இயந்திரங்களைப் பயன்படுத்தும் நிலையுள்ளது. திறமையான சாகுபடியாளர்க்கு அதிக நிலம் கொடுக்கப்படவேண்டும் என்ற முடிவிற்குஇணங்க புரட்சிக்கு முந்தைய பணக்கார விவசாயிகளும் நிலப்பிரபுக்களும் மற்றும் கட்சி அதிகாரிகளும் அதிக நிலம் பெற்றிருந்தனர். மேலும் ஒப்பந்தத்தை சரிவர நிறை

வேற்ற இயலாத குடும்பங்கள் தம் குத்தகை நிலத்தை சிறப்புநிலைக் குடும்பங்களிடம் மாற்றிவிட்டு, **கிராமங்களில் கூலிகளாக** அல்லது கிராமப்புற, நகரத் தொழிலகங்களில் **திறனற்ற தொழிலாளர்களாக** அல்லது நகரங்களில் **உதிரிப் பாட்டாளிகளாக** மாறும் போக்கு பெருத்துள்ளது. 1988 ஆம் ஆண்டுக் கணக்கின்படி, 40 லட்சம் சிறிய தொழிலகங்களில் 12 கோடி விவசாயிகள் பணி புரிகின்றனர். இந்தப் போக்கின் மூலம் கிராமங்களில் சிறப்புநிலைக் குடும்பங்களிடம் நிலம் குவிகின்றது. கூலியாட்களை அமர்த்திக்கொள்ளும் முறை இருப்பதனால், பலரது உழைப்பு சிறப்புக் குடும்பங்களின் செல்வமாக மாறும் முதலாளிய **இரசாயனமாற்றம்** சீனாவில் நடக்கிறது. இதனால்,

> மக்கள் கம்யூன் காலத்தில் கிராமப்புறங்களில் இருந்த ஒரேபடித்தான சமநிலை (குறைந்த அளவு ஊதிய வேறுபாட்டுடன்) தகர்க்கப்பட்டு, **படிநிலைச் சமூக** முறை **தோன்றியுள்ளது.**

கிராமப்புறங்களில் வசதிபடைத்த சிறப்புநிலைக் குடும்பங்கள், சாதாரண விவசாயக் குடும்பங்கள், விவசாயக் கூலிக் குடும்பங்கள், கிராமப்புறத் தொழிலகங்களின் **திறனற்ற தொழிலாளர்கள்** என்ற வர்க்க வேறுபாடுகளும் தோன்றி சிறப்பு நிலைக் குடும்பங்கள் கிராமப்புற ஆளும் வர்க்கமாக மாறியுள்ளன. **சிலரை மட்டும்** முதலில் **பணக்காரர்களாக்குவோம்** என்ற டெங்கின் புதிய சோசலிசப் பொருளாதாரத்தின் தவிர்க்க இயலாத விளைவு இதுவாகும். சிறப்புநிலைக் குடும்பமே டெங்கின் **அரசியல் அதிகாரத்தின் கிராமப்புற அடித்தளம்** (Rural Base) ஆவர். 1985ஆம் ஆண்டுக் கணக்கின் படி 105 கோடி மக்கள் தொகையில் 2½ கோடி கிராமப்புறக் குடும்பங்கள் பணக்கார மேல் நிலையினராக (rural monied elites) இருந்தனர்.

இவர்கள் கிராமக் குடும்பங்களின் 13 சாவீதக் குடும்பங்கள் ஆவர். இவர்களின் சராசரி ஆண்டு வருமானம் 3000–5000 யுவான்களாகும். இது வருமானவரி நீங்கலாக உள்ள வருமானம் ஆகும். அந்த நேரத்தில் அந்தப்பகுதியின் சராசரி வருமானத்தைவிட இது 14 மடங்கு அதிகமாக இருந்தது என அறிகிறோம் (Monthly Review, March, 1989).

கூட்டுடைமை நீக்கத்துக்குப்பின் சீனக் கிராமங்களில் ஏற்பட்ட மோசமான சமூக விளைவு, பெண்ணடிமைத்தனம் ஆகும் எனப் பல அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். கம்யூன் காலத்தில் சமூக உற்பத்தியில் பெண்களும் ஈடுபட்டு ஆண்களுக்கு நிகரான தகுதியைப் பெற்றிருந்தனர். இப்போது குடும்ப உழைப்பில் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டு ஆணாதிக்கத்துக்கு அடித்தளமிடப்பட்டுள்ளது. இன்னொரு விளைவு, கல்லாமை பெருகியது, சிறுவர் உழைப்பு (child labour) தோன்றி, பெருத்துக்கொண்டு வருகிறது. இது குறித்துப் பின்னால் காண்போம்.

நகர்ப்புறங்களில் கொண்டு வந்த மாற்றங்களினால், ஆலைகளில் நிர்வாகிகள் தொழில் நுட்ப வல்லுநர்கள், அறிவியலறிஞர்கள், தொழிலாளர்சுள், சிறு நிறுவன முதலாளிகள், சிறுதொழில் முனைவோர், திறனற்ற தொழிலாளர்கள், உதிரித் தொழிலாளர்கள் என்ற சமூக வேறுபாடுகள் உடைய படிமுறை அமைப்பு உருவெடுத்தது. தொழிலாளர்கள் எவ்வித சுதந்திரமும் அற்று ஒப்பந்தக் கூலிகளாக மாறி, நிரந்தர ஊதியமின்றி மாறிவரும் ஊதியம் பெற்று (floating wage) உள்ளனர். திறனற்ற தொழிலாளர்கள் சிறு நிறுவன முதலாளிகளுக்கு இலாபம் ஈட்டித்தரும் நிலையில் அவர்களால் சுரண்டப்பட்டு உள்ளனர். உதிரித்தொழிலாளர் தொகை பெருத்துக்கொண்டே வருகின்றது. 1985 ஆம் ஆண்டில் சாங்காய் நகரில் மட்டும் 25 லட்சம்

பேர்கள் இப்படி இருந்தனர் என அறிகிறோம். அரசு ஆலைகள் திவாலாகி விடுவதைக் கூட அங்கீகரிக்கும் சட்டம் இயற்றப்பட்டது. (ஆகஸ்டு 1986) சந்தைப் பொருளாதார விதிகளே சீனத்தில் அழுத்தம் பெற்றுள்ளன என்பதற்கு இது ஆதாரமாகும். ஆலைகள் மட்டுமின்றி, தொழிலாளர்களும் உபரியாகும் நிலை உள்ளது. இனி வரும் ஆண்டுகளில் **1 கோடி முதல் 2 கோடி தொழிலாளர்கள் உபரியாவர்** என அரசின் அறிக்கை குறிப்பிடுகிறது. 1987க்குப்பின் தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் நடந்துள்ளதாக அரசின் அதிகாரப் பூர்வமற்ற ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. இவை எல்லாமே டெங்சின் தலைமையிலான சீனம் கடைப் பிடித்த முதலாளியக் கொள்கைகளின் விளைவுகளாகும். இவற்றுள் மோசமான அம்சம், சீனாவில் கல்லாமை (illiteracy) பெருகியதாகும். க.பு., காலத்தில் உயர் கல்வியும் தொழில்கல்வியும் பாதித்தன. எனினும் நடுநிலைக் கல்வியும் தொடக்கக் கல்வியும் பெருத்தன.

| ஆண்டு | மாணவர்கள் | உயர்கல்வி | தொழிற் கல்வி | நடுநிலைக் கல்வி | தொடக்கக் கல்வி |
|---|---|---|---|---|---|
| | (பத்தாயிரத்தில்) | | | | |
| 1966 | 11691·9 | 53·4 | 47 | 1249·8 | 10341·7 |
| 1976 | 20967·5 | 56·5 | 69 | 5836·5 | 15005·5 |

ஆனால் டெங்கின் புதிய முதலாளியக் காலத்திய முதல் 5 ஆண்டுகளில் நடுநிலைக்கல்வியும் தொடக்கக் கல்வியும் குறைந்தன. தொழிற்கல்வி (இடைநிலை)யும் உயர்கல்வியும் பெருத்தன.

| ஆண்டு | மாணவர்கள் | உயர்கல்வி | தொழிற் கல்வி | நடுநிலைக் கல்வி | தொடக்கக் கல்வி |
|---|---|---|---|---|---|
| | (பத்தாயிரத்தில்) | | | | |
| 1978 | 21346·8 | 85·6 | 88·9 | 6548·3 | 14624 |
| 1979 | 20789.8 | 102 | 119·9 | 5905·0 | 14662·9 |
| 1984 | 18557·6 | 139·6 | 132·2 | 4554·2 | 13557·1 |

(சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக். 484)

1979-1984 காலத்தில் தொடக்கக் கல்வியும் நடுநிலைக்கல்வியும் மிகவும் குறைந்தன. **மக்கள் தொகைப் பெருக்கத்தோடு இதை ஒப்பிட்டால் கல்லாமையின் பெருக்கம் மிகை அதிகமாகும்.** இதுவும் கிராமங்களில் அதிகம். 1978 வரை மக்கள் கம்யூன் காலத்தில் **16,20,000 பள்ளிகள்** இருந்தன; 1987இல் கிராமங்களில் **7,44,000 என** இது பாதிக்கும் மேற்பட்டு குறைந்துவிட்டன என்றும் இதனால் 1978ஐ விட 1987 இல் **$2\frac{1}{2}$ கோடி குழந்தைகள் குறைவாகப் படித்துக் கொண்டிருந்தனர்** (Monthily Review, Dec. 1989). என்றும் தெரிகிறது. 1989இன் இறுதியில் சீனாவின் படிப்பறிவற்றோர் தொகையில் 92 சதவீத மக்கள், **கிராமத்தினர்;** 70 சதவீத மக்கள் **பெண்கள்** என்றும் **விவசாயிகளில்** மூன்றில் ஒரு பங்கினர் படிப்பறிவு அற்றோர் என்றும் அறிகிறோம் (பீகிங் ரிவ்யு 18—2—1990). இன்னொரு குறிப்பிடத்தக்க நிகழ்வு, **தொடக்கக் கல்வியில் இடைவிலகல் சதவீதம்** (Drop-outs) அதிகப்பட்டுக்கொண்டே போவதாகவும் (பீகிங் ரிவ்யு 4—3—90). **இது** குடும்பப் பண்ணைகளில்

குழந்தை உழைப்பு ஈடுபடுத்துதலைத் தெரிவிக்கிறது என்பர். இடைநிலையிலும் தொழிற்கல்வி பெருத்துள்ளது. மேலும் உயர்கல்வியின் பெருக்கமும் தொழில் நுட்பக் கல்வியைச் சார்ந்தே உள்ளது. ஒரு புள்ளி விபரம் காண்போம்.

**10000 மக்களில் தொழிற்கல்வி கற்ற பிரிவினர்**

| தொழில் | 1978 | 1980 | 1983 |
|---|---|---|---|
| பொறியியல் | 45·7 | 53·7 | 67·1 |
| வேளாண்மை | 16·5 | 18·9 | 27·5 |
| ஆசிரியர் | 9·4 | 12·7 | 13·5 |

(சீனாவின் சோசலிசப் பொருளாதாரம், பக். 485)

**தொழில் நுட்பத்துக்கே முதலிடம்; அடிப்படைக் கல்விக்கு இறுதி இடம்** என்ற கொள்கையின் விளைவாக ஏற்பட்ட இழிநிலைகள் இவையாகும்.

இவற்றோடு சீனாவில் ஏற்பட்ட பண்பாட்டுச் சீரழிவு குறிப்பிடத்தக்கது. பொருளாதாரத் தாராள மாக்குதலையொட்டி அதன் தொடர்விளைவாக பண்பாட்டுச் சீரழிவுகள் ஏற்பட்டன. **முதலில் பணக்காரர் களாவோம்** என்ற டெங்கின் அறைகூவலை ஏற்று எல்லா வழிகளிலும் பணம் திரட்ட முயன்றதன் விளைவாக நாட்டின் உயர்மட்ட அளவில் **இலஞ்சம், ஊழல், பதுக்கல்,** முறைகேடு போன்றவை சாதாரண நிகழ்வுகளாகிவிட்டன. **கள்ளச்சந்தை, கறுப்புப்பணம்** போன்ற முதலாளியச் சீர்கேடுகள் கட்சி மேல் நிலையினரையும் சீர்கேட்டிற்கு உள்ளாக்கின. அதிக விலையுள்ள பொருள் களை இறக்குமதி செய்தலுக்கும் குறைந்த விலைப் பொருள்களை ஏற்றுமதி செய்தலுக்கும் உரிய உரிமத்தைப் பெற்று பெரும் இலாபம் ஈட்டினர் (பீகிங் ரிவ்யு 22—1—89; 13—8—89). கட்சி மற்றும் ஆட்சியின்

மேல்மட்டக் குடும்பங்களே இவற்றில் நேரடியாகவும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அரசு அதிகாரிகள் பொருள்களைப் பதுக்கி வைத்து விலையைச் செயற்கையாக ஏற்றி பொருள்களுக்கு செயற்கைப் பற்றாக் குறையை உண்டுபண்ணி, கள்ளச் சந்தையில் விற்கின்றனர். இதனால் சமூகக் கொந்தளிப்பு உருவாகிறது. எடுத்துக்காட்டாக இரசாயன உரம் உற்பத்தி அபரிமிதமாகப் பெருகியிருப்பினும் அதற்கு உள்ள சந்தையைப் பயன்படுத்திக்கொண்டு அதிகாரிகள் பதுக்கி, முறைகேடாகப் பணம் குவித்தனர். இதன் விளைவாக உர மூட்டை டிரக்குகளை வழிமறித்து விவசாயிகள் உர மூட்டைகளை அபகரித்துள்ளனர் எனவும் இத்தகைய சட்ட மீறல்கள் மட்டும் 1988 ஆம் ஆண்டில் 1 லட்சம் நிகழ்வுகள் நடந்தன எனவும் இவற்றில் பத்து லட்சக் கணக்கில் விவசாயிகள் ஈடுபட்டனர் எனவும் அறிகிறோம் (Monthly Review Jan. 1990).

இவையனைத்துமே புதிய முதலாளியக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதனால் ஏற்பட்ட விளைவுகளாகும். ஆக கட்சி உயர்அதிகாரிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், நிர்வாகிகள், சிறு நிறுவன முதலாளிகள் ஆலைக் குத்தகைதாரர்கள், கிராமப்புற சிறப்பு விவசாயக் குடும்பத்தினர், கிராமபுறத் தொழிலக முதலாளிகள் ஆகிய இவர்கள் அனைவரும் 1979க்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட முதலாளியப் பொருளாதார முறையினால் உருவான சீனாவின் புதிய ஆளும் வர்க்கத்தினர் ஆவர். இந்தப் புதிய சமூகமும், முதலாளியப் பொருளாதாரத்தின் தேக்கத்தினாலும் முதலாளிய மாற்றங்களுக்கு ஏற்ப அரசியல் மாற்றங்கள் கொணரப் படாததாலும் இன்றைக்குக் கொந்தளிப்புக்கும் மோதல்களுக்கும் உள்ளாகிக்கொண்டு வருகின்றது.

முதலாளிய நெருக்கடிகள் இன்றைய சீனத்தை உலுக்குகின்றன. பொருளாதாரத் தாராளவாத மாற்றங்கள், செயலளவிலான தனியுடைமை (defacto privati-

sation) ஆகியவற்றுக்கு உகந்த விதத்தில் அரசியல் மாற்றங்கள் கொண்டு வரப்படவில்லை. டெங் விரும்பும் அரசியல் மாற்றங்கள் ஒரு குழுவின் சர்வாதிகாரமாக இருக்கின்றன. பல கட்சிமுறை, விவாதித்தல், கலந்தாலோசித்தல் போன்ற முதலாளிய ஜனநாயகமுறைகளை டெங் விரும்பவில்லை. சர்வாதிகாரத்தின் தேவையை இவர் வெளிப்படையாக அறிவித்துள்ளார். பொருளாதாரத்தில் இவர் முன்வைத்த உற்பத்திப் பொறுப்பு முறைக்கு உகந்த தனிநபர் நிர்வாக முறையின் (Personal Managerial System)அரசாங்க வடிவமாகவே டெங் விரும்பும் அரசியல் மாற்றம் உள்ளது. இந்த அரசாங்க வடிவம், கட்சியிலும் ஆட்சியிலும் இருந்து கொண்டு முதலாளியத் தாராளமாக்குதல் பயன்பெற்று வரும் அரசதிகாரம் கொண்ட வசதியான மேல்நிலை வர்க்கத்துக்கு (Power-Monied elites)உகந்த அரசாங்க வடிவம் ஆகும். இவர்களிடமே அரசியல் அதிகாரம் இன்றுள்ளது. அதிகாரவர்க்க முதலாளிகளுக்கும் அதிகாரத்தில் நேரடியாகப் பங்கேற்காத முதலாளிகளுக்கும் இடையில் முரண்பாடு எழத் தொடங்கியதைக் காணலாம். குறிப்பாக பெரும் விவசாயிகளுக்கும் அரசு அதிகாரத்துவமுதலாளிகட்கும் இடையிலான முரண்பாடு கிராமப்புறங்களில் வெடித்திருப்பதையும் இவை சட்ட மீறல்களாக உருவெடுத்திருப்பதையும் இவற்றில் 1988இல் மட்டும் இலட்சக்கணக்கில் விவசாயிகள் கலந்து கொண்டதையும் இவற்றை இராணுவம் அடக்கியதில் பல விவசாயிகள் கொல்லப்பட்டதையும் நாம் இங்கு எடுத்துச் சொல்லலாம். அதிகாரத்துவ முதலாளிகள் எளிதில் பெற்றுக்கொள்ளும் உரிமங்களையும் சலுகைகளையும் தனியார் முதலாளிகள் பெறமுடிவதில்லை. மேலும் இவற்றுக்கு அரசு அதிகாரிகளையே சார்ந்திருப்பதால் இலஞ்சம் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாக மாறியுள்ளது. இவையனைத்தும் தனியார் முதலாளியத்தின் தங்குதடையற்ற வளர்ச்சிக்கு இடை

யூறுகளாக உள்ளன. இவற்றைக் களையவேண்டி இவை சீனாவின் அரசியல் அதிகாரத்தில் தமக்குரிய நேரடியான பங்கைக் கோருகின்றன.

1985 முதல் சீனாவில் மாணவர் போராட்டங்களை நாம் காண்கிறோம். தொடக்கத்தில் பல்கலைக்கழகச் சீர்திருத்தங்களுக்காக மட்டுமே போராடிய மாணவர்கள் பின்னர், இலஞ்ச எதிப்பு, **ஜனநாயகப் பரவலாக்குதல்** போன்ற கோரிக்கைகளுக்கும் குரல் எழுப்பத் தொடங்கினர். குறிப்பான திருப்பம் 1987 ஏப்ரலில் நடைபெற்ற போராட்டத்தில் ஏற்பட்டது. கட்சியின் மேல்மட்டத்தில் உள்ள இலஞ்சப் போக்குகளை எதிர்த்து பதவி இறக்கம் செய்யப்பட்ட சீ. பொ. க.வின் முன்னாள் பொதுச் செயலர் **ஹூ யாவோ பாங்** (Hu Yao Bang) மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் தொடங்கிய இந்தப் போராட்டத்தில் பெய்ஜிங் நகரத் தொழிலாளர்கள் பலர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. **தொழிலாளர்கள் இனி மேலும் அமைதியோடு இருக்கவியலாது** (The workers are no longer silent) என்ற முழக்கத்தின் கீழ் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். புதிய பொருளாதார அதிகாரத்தினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் இதில் இணைந்தனர்.

1989 ஏப்ரல்—ஜூன் மாதங்களில் நடந்த மாணவர் போராட்டம் குறிப்பிடத்தக்கது. 1949 முதல் மக்கள் மீது துப்பாக்கி சூடு சத்தம் கேட்டிராத பெய்ஜிங் நகரில் 3000 பேர்கள் வரை படுகொலை செய்யப்பட்ட கோர நிகழ்வுகளை உள்ளடக்கிய இந்தப் போராட்டத்தில் மாணவர்கள் மக்களின் பரவலான ஆதரவை வெளிப்படையாகவே பெற்றனர். தொழிலாளர்கள், சிறுவணிக/தொழில் நிறுவன உரிமையாளர்கள், உதிரித் தொழிலாளர்கள். பத்திரிகையாளர்கள், ஆகியோரின் ஆதரவைப் பெற்றனர். புதிய பொருளாதார அமைப்பின் கீழ்

சுய ஊட்டச்சத்து பெற்று வளர்ந்து வரும் கட்சி அதிகாரத்துவத்தை எதிர்த்து எல்லோரும் ஓரணியில் திரண்டனர். மாணவர்களை முன்னிலைப்படுத்தி நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகள்

அ) அரசியல் சீர்திருத்தம்; முழு ஜனநாயகம்

ஆ) சுதந்திரமான நீதி முறை

இ) பத்திரிகை சுதந்திரம்

ஈ) கட்சி அதிகாரிகளின் சொத்துக் காணக்கை வெளியிடல்

உ) முதலாளியத் தாராளவாதம் குறித்த எதிர்ப் பிரசாரத்தை மறுமதிப்பீடு செய்தல்.

இவை அனைத்துமே ஒரு குழுவின் சர்வாதிகாரப் **போக்குக்கு** எதிர்ப்பான குரல்களாகும் என்பதில் ஐயமில்லை. இந்த 7 அம்சங்களையும் விரிவாகக் கண்டறிந்த அறிஞர் ஒருவர், **ஒரு நபருக்கு ஒருவாக்கு** என்ற அடிப்படையில் சீன மாணவர்கள் ஜனநாயகத் தேர்தல் முறையாகக் கோரவில்லை யென்றும் பல்வேறு தொழிலில் ஈடுபட்டவர்கள், அறிவாளிகள், மற்றும் சிறப்பு நிபுணர்கள் (Professionals, intellectuals and specialists) ஆகியோரடங்கிய **பன்முகத்தன்மை கொண்ட ஒரு குழு** அமைக்கப்பட்டு அரசாங்க முடிவுகளை எடுக்கவும் நிறைவேற்றவும் அதிகாரம் பெற வேண்டும் என்றும் விரும்புவதாகக் குறிப்பிடுகின்றனர் (Monthly Review, Jan. 1990)அரசியல் தாராளவாதப் போக்கின் குறிப்பிடத்தக்க பிரதிநிதி **லியோ பின்யான் ஒரு நபர் ஒருவாக்கு** என்ற முறையை விரும்பவில்லை எனவும் குறிப்பிடுகின்றார்.

மேற்கு நாடுகளில் பயின்ற மாணவர்களாலும் அரசியல் தாராளவாதப் போக்கினராலும் தலைமை

யேற்று நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் பெய்ஜிங் நகரத் தொழிலாளர்கள் கலந்து கொண்டதை வைத்துக் கொண்டும், சர்வதேசிய கீதம் இசைக்கப்பட்டதை வைத்துக் கொண்டும் அல்லது க. பு. சக்திகள் இதில் ஊடுருவிவிட்டதாக டெங் பிரச்சாரம் செய்ததை வைத்துக் கொண்டும் — அதாவது இவைகளை மட்டும் வைத்துக் கொண்டு இந்தப் போராட்டத்தின் தன்மை யைக் கணிக்க இயலுமா என்பதே இப்போதைய கேள் வியாகும். அல்லது, தம் நீடித்தலுக்கு உரிய அறவியல் நியாயத்தை முற்றிலும் இழந்து போன சீனாவின் அதிகாரத்துவத்தை எதிர்த்த அறவியல் சக்தியாக இந்தப் போராட்டத்தைக் கண்டறிவதா என்பதும் இப்போதைய கேள்வியாகும். எந்தவித ஜனநாயக மும் இல்லாத சோசலிச நாடுகளில் பூர்ஷ்வா ஜனநாயக உரிமைகளைப் பெறுவதுகூட பெரும் சாதனையாகவே பரந்துபட்ட மக்களால் கருதப்படுகின்றதா என்பதும் இப்போதைய கேள்வியாகும்.

இந்தக் கேள்விகள் முதலாளிய மீட்சிக்குள்ளான ரசியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருந்துவதாகவே உள்ளன.

## 5

ரசியா, சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பியநாடு களின் புரட்சிக்குப் பிந்திய அனுபவங்கள் நமக்கு எதைத் தெரிவிக்கின்றன? புரட்சிக்குப்பின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய இந்த நாடுகளில் முதலா ளிய மீட்சி ஏற்பட்டுள்ளதா? 'முதலாளிய மீட்சி இல்லை; வரலாறு பின்னால் திரும்பாது' எனத் திருத்தல்

வாதிகளும் பாராளுமன்றவாத சமரசவாதிகளும் கூறுவதை ஒப்புக்கொண்டு முன்னாள் சோசலிச நாடு களுடனும் முன்னாள் கம்யூனிஸ்டுகளுடனும் சமாதான சுகவாழ்வு மேற்கொள்ளப் போகின்றோமா? 'ஒரு சோசலிச நாட்டில் எந்த முதலாளிய மாற்றங்கள் ஏற்பட்டாலும் அவற்றையும் சோசலிசத்துக்குள்ளே அடைத்துவிடலாம். எல்லா வண்ணங்களிலும் சோச லிசம் மிளிர முடியும். சோசலிசத்துக்கு என தனித்த வண்ணம்/பண்புகள் தேவைபில்லை" என்ற எவ்வித நிறப் பேதமற்ற வர்னணையை ஒப்புக்கொண்டு, சுய ஏமாற்றத்தில் திருப்திப்பட்டுக் கொள்வதா? 'ஒரு சோசலிச நாட்டில் முதலாளிய மீட்சிக்குரிய சாத்தியம் உண்டு என்ற லெனினியத்தைக் கோட்பாட்டு அளவில் ஒப்புக்கொண்டு, நடைமுறை அளவில் அது இன்னமும் எங்கும் நிரூபணம் ஆகவில்லை' என அக மகிழ்வு கொண்டு, சமகால வரலாற்று யதார்த்தத்தைக் கண்டு கொள்ளாமல் இருப்பதா? கோட்டாட்டளவில் மட்டு மின்றி, நடைமுறையிலும் முதலாளிய மீட்சி ஏற்பட் டுள்ளதென்பதை ஒத்துக்கொண்டு அதற்கான காரணங் களைக் கண்டு, அதிலிருந்து படிப்பினைகளை ஏற்றுக் கொள்ளப் போகின்றோமா? புரட்சிக்கு முந்திய சமூகத்தில் வாழும் நமக்கு இவை முக்கியமானவை யாகும்.

யதார்த்தத்தை உணர்வதே அரசியலின் ஆரம்பம் ஆகும். பாரிசு கம்யூன் தோல்வியில் ஒரு படிப்பினை யைப் பெற்ற பேராசான் ஏங்கெல்சு, **பாட்டாளி வர்க்க அரசதிகாரத்தைக் கொண்டு முதலாளி வர்க்க எதிரி களை அமுக்கி வைக்கவில்லையென்றால் மொத்த வெற்றியுமே தோல்வியில் போய்முடியும்** என எச்சரிக்கை செய்திருந்தார் (12—5—1883). பாட்டாளி வர்க்கம் அரசதிகாரத்தைக் கைப்பற்றியபின்னர், **அரசு என்ற அரசியல் நிறுவனத்தை ஒழிக்க வேண்டும்** என்று

கோரிய அராஜகவாத சித்தாந்தத்துக்குப் பதில் கூறும் பொழுது இப்படி விடுத்த எச்சரிக்கையின் பொருத் தத்தை இன்றளவுக்கும் உணர முடிகிறது. இந்த எச்சரிக்கையைக் கவனமாகப் பின்தொடர்ந்த லெனின், புரட்சிக்கு முன்பும் பின்பும் மிகவும் விழிப்போடு இருந்ததை அவரது எழுத்துக்களிலும் நடைமுறையிலும் காண முடியும். சோசலிசப் புரட்சி வெற்றிபெற்ற ஒரு பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் கீழ் வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுவதற்குரிய சூழலற்றுப் போனால் முதலாளிய மீட்சிக்குரிய நம்பிக்கை முதலாளிய மீட்சிக்குரிய முயற்சியாகப் பரிணமித்து, உறுதியாகவும் தவிர்க்கவியலாத வகை யிலும் தொழிலாளர் அதிகாரத்தைத் தூக்கியெறிந்து விடும் எனக்குறிப்பிட்டார்(LCW 27: 337. 28; 254). சிறு முதலாளிய உற்பத்திமுறை, குலாக்குகளின் எழுச்சி, அதிகாரிகளாக உருவெடுத்த கம்யூனிஸ்டுகள், உலக முதலாளிய இராணுவ அபாயம் ஆகிய இவற்றால் முதலாளிய மீட்சிக்குரிய சாத்தியப்பாடுகளை லெனின் கண்டறிந்தார். (LCW: 31: 493-495) லெனின் கூறிய அதே வழியிலேதான் வரலாறு வளர்ந்தாக வேண்டிய அவசியமில்லை. அவர் காலத்தில் இருந்த இராணுவ அபாயம், ஸ்டாலின் காலத்தில் சர்வதேச அளவில் முறியடிக்கப்பட்டது. அதன்பின் சீனா, கொரியா, வியட்நாம், கியூபா போன்ற நாடுகளில் தொடர்ந்து முறியடிக்கப்பட்டது. எனினும் உலக முதலாளிய அபாயம், இராணுவ ரீதியில் இருப்பதைவிட பொருளாதார ரீதியில் ஏற்பட்டுவிட்டது. பொருளாதார உதவி என்ற டிரோஜன் குதிரை சோசலிச நாடுகளுக்குள் ஊடுருவியதை வரலாறு கண்டது. பழைய குலாக்குகள் ஒரு வர்க்கம் என்ற அளவில் மாறுதலுக்கு உள்ளாகி யிருப்பினும் சிறு முதலாளிய உற்பத்திமுறை வெகு வாகக் குறைக்கப்பட்டிருப்பினும், புதிய வகைப்பட்ட முதலாளிகள் தோன்ற முடிந்ததை ரசிய வரலாற்றில்

காண்கிறோம். ஒரு சோசலிசப் பொருளாதாரத்தை நோக்கிச் சென்ற புதிய பொருளாதாரக் கொள்கைக் காலத்தில் லெனின் முன்னுணர்ந்த இந்த எச்சரிக்கை— பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் தொடர்ந்த வர்க்கப் போராட்டம் நடத்துவது குறித்த எச்சரிக்கை— ரசியாவில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டதா என்பதே இங்கு முக்கியமாகும். மனித சமூக வரலாற்றில் சோசலிசப் பொருளாதாரத்தை கட்டியமைக்கக்கூடிய முதல் வாய்ப்பைப் பெற்றிருந்த ஸ்டாலினின் கோட்பாடும் நடைமுறையும் இங்கு முதன்மை பெறுகின்றன. சோசலிசப் பொருளாதார நிர்மாணம் குறித்த லெனினியக் கோட்பாடுகளைப் புரிதலிலும் விளக்குதலிலும் ஏற்பட்ட விலகல்கள், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைத் தளர்த்திக் கொள்தலுக்கு வழிவகுத்ததோடு மட்டுமின்டு, சலுகையும் அதிகாரத்தையும் பெற்று புதியதாக உயர்ந்த சமூகப் பிரிவினர்க்கு எதிரான போராட்டத்தைத் தொடங்குதற்கு உகந்ததாக அமையவில்லை. இத்தகைய சலுகைபெற்ற வர்க்கத்தினரைக் கட்டுப்படுத்தவில்லையெனில் இவர்களது எழுச்சி **'சாதாரண முதலாளிய ஜனநாயகம் வரை செல்லும்'** என ஸ்டாலின் உணர்ந்திருப்பதாக நமக்கு அவரது படைப்புகள் குறிப்பிட்டிருப்பினும், வரலாறு அவ்வாறு அமைந்திருக்கவில்லை. ஸ்டாலின் காலத்தில் இந்த **இரட்டை நிலைகளையும்** காண இயலும். **சோசலிச உற்பத்தி உறவுகளின் உருவாக்கம், பராமரிப்பு முயற்சிக்காலமாகவும் அதிகார வர்க்கம் என்பது ஒரு புதிய வர்க்கமாக உருவெடுக்கும் காலமாகவும் காண** இயலும். கட்சியிலும் ஆட்சியிலும் இந்த வர்க்கத்தின் தோற்றத்தை லெனின் புறக்கணித்திருக்கவில்லை. பால். எம். சுவீசி சொல்லியிருப்பதைப்போல இந்த அதிகார வர்க்கத்தின் உதயம், **தற்காலிகமானதாகவும் மாறுங்காலகட்டத்து நிகழ்வுப் போக்காகவும் இருந்திருக்குமாயின் தொழிலாளர் வர்க்கம் அரசியல்**

**அதிகாரத்தைப் பெற்றிருக்கக்கூடும்.** ஆனால் இது எவ்வித நிபந்தனையுமின்றி நடந்திருக்க முடியுமா? இங்குதான் **அரசியலை எப்பொழுதும் ஆணையில் வைத்திருக்க வேண்டும்** (Politics is at the Command) என்ற மாவோயிசத்தின் தேவையை ஒரு சோசலிச சமூகத்தில் பிரதானமாகக் கொள்ளவேண்டியதை உணர்கிறோம்.

புரட்சிக்குப் பிந்திய காலத்திலும் சீனத்தில் நடைபெற்ற கருத்தியல் போராட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. இவை ; **கட்சிக்குள் நடந்த வர்க்கப் போராட்டங்கள்.** பல்வேறு காலங்களில்நடந்த இந்தப் போராட்டங்களின் அடிப்படையைத் தொகுக்கும்பொழுது புரட்சிக்குப் பிந்திய சமூகத்தின் **பிரதான முரண்பாடு எது** என்பதே முதன்மையாக எழுந்தது. மாவோ ஒன்றைத் தெளிவாக வைத்தார். **முதலாளியப் பாதைக்கும் சோசலிசப் பாதைக்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடு** (Primary Contradiction) எனக் குறிப்பிட்டார். இதை லியோ, டெங் ஆகியோர் மறுத்துரைத்தனர். இந்த இருவழிப் போராட்டத்தை முதலாளியப் பர்தைக்கும் சோசலிசப் பாதைக்கும் இடையிலான போராட்டமாக மாவோ கண்டார். இங்கே இன்னொரு சிக்கல் எழுகிறது. சோச்லிசப் பொருளாதாரக் கட்டுமானத்தில் எழும் எந்தச் சிக்கலையும் இந்த இரண்டு பாதைகளுக்குள் **எதிலாவது ஒன்றில்தான்** அடக்கியாக வேண்டுமா? என்பதே அச்சிக்கல் ஆகும். இப்படி முன் வைத்த விதம் தவறானது என்று மதிப்பிட்டு **சோசலிசப் பாதையா அல்லது அதிகார வர்க்கத்தினர். மேலாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள், நிர்வாகிகள், விஞ்ஞானிகள் ஆகியோரின் பாதையா** என்ற பிரச்சனையை முன்வைத்திருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர் (எஸ்.வி.இராஜதுரை, நிகழ், ஆகஸ்டு,1989, பக். 9). இவ்வாறு முன்வைப்பது கட்சியில் பிடிக்காத

சிலரின்மீது முத்திரை குத்துவதற்குப் பயன்படும் எனவும் கருதுகின்றனர். கட்சிக்குள் நடந்த போராட்டங்களில் எப்பொழுதுமே எல்லோரும் சரியானபடி அடையாளம் காட்டப்பட்டனர் என்றும் நாம் சொல்ல இயலாது; பலர் தவறான முறையில் அடையாளம் காட்டப்பட்டிருக்க லாம்; காட்டப்பட்டனர். இது சோசலிசமா அன்றி முதலாளியமா என முன்வைப்பதனால் மட்டும் அல்ல. இவர்கள் சொல்வதுபோல சோசலிசப்பாதையா அல்லது அதிகார வர்க்கத்தினர் மற்றும் ஏனையோர் பாதையா என்று முன்வைக்கும் முறையிலும்கூட, இவர்கள் சொல்லுகின்ற முத்திரை குத்தும் போக்கை முற்றாக நிராகரித்துவிட இயலாது. சரியான அரசியலை முன் வைக்க இயலாதபொழுது அதிகாரத்துவம் இழிவாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதே இங்கு நாம் அறிந்து கொள்ள வேண்டியதாகும். அதிகாரத்துவத்தை மட்டுமே வைத்துக்கொண்டு அரசியலற்ற முறையில் முத்திரை குத்துவதை யாரும் ஒப்புக் கொள்ளவும் வேண்டிய தில்லை. ஆனால் ஒரு சோசலிச நாட்டில் முதலாளியப் பாதையா அல்லது சோசலிசப் பாதையா என்றே மாவோயிச சிந்தனை முன்வைக்கக் காரணமே, சமூகத்தை உற்பத்தி முறையின் அடிப்படையில் அணுகு வதாகும். சோசலிசப் பாதைக்கும், அதிகாரவர்க்கத்தினர் மற்றும் விஞ்ஞானிகள் போன்றோர் தேவைப்படுகின்ற னர். இவர்களின்றி பொருளாதாரத் திட்டமிடல், நிர்வாகம் ஆகியவை முன்னேறிய நிலையில் இருக்க வியலாது. இவர்களையும் ஏனைய மக்களையும் எந்த உற்பத்தி உறவுகளில் வைக்கப் போகின்றோம் என்பதே அன்றைய கேள்வியாகும். முதலாளிய உற்பத்தி உறவிலா? அன்றி சோசலிச உற்பத்தி உறவிலா? ஆகவேதான் சோசலிசக் கட்டுமானத்தில் எழுந்த பிரச்சனைகளை முதலாளியப் பாதையா? சோசலிசப் பாதையா? என்ற இரண்டு பாதைகளுக்குள் எதிலாவது ஒன்றில் குறுக்கமுடிகிறது. லியோவும் அவரது தோழர்

களும் தொடக்கம் முதல் முதலாளியப் பாதையை முன் வைத்ததைக் காணலாம். மாவோ மாற்றுப்பாதையை முன்வைத்தார். மாவோவின் பாதையையே எல்லாக் காலகட்டத்திலும் சீனப் பொதுவுடைமைக் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை என்பதே உண்மை.

இங்கே இன்னொன்றைக் காணவேண்டும். முதலாளியப் பாதையை எதிர்த்த போராட்ட வடிவம் யாது? பொதுவுடைமைக் கட்சிக்கு உள்ளேயே நடத்துவதா? கட்சிக்கு வெளியில் உள்ள சோசலிச அரசியல் உறவுகளை வளர்க்கும் நிறுவனங்கள் மூலம் நடத்துவதா? (மேற்படி இதழ், பக். 11). மாவோ, கட்சிக் குள்ளும் நடத்தியுள்ளதோடு மட்டுமின்றி, கட்சிக்கு அப்பாற்பட்ட மக்களின் முன்முயற்சியைக் கட்டவிழ்த்து விட்டு கட்சியின் தவறான பாதைக்கு எதிரான போராட்டத்தில் மக்களையும் ஈடுபடுத்தியுள்ளார். சோசலிச அரசியல் உறவுகளை வளர்க்கும் நிறுவனங்களாக, மக்கள்திரள் அமைப்புகளை உருவாக்கும் முன்முயற்சியை மாவோ காலத்தில் காணமுடியும். ஆக வர்க்கப் போராட்டம் என்பது கட்சிக்குள் உள்ள சித்தாந்தவாதிகளுக்கு இடையிலானது மட்டுமல்ல என்பதையும் அதற்கு அப்பாற்பட்ட மக்கள் திரளையும் ஈடுபடுத்துவதன் மூலமாகவும் என்பதையும் மாவோவின் சீனம் தெளிவாக்கியது. இதனால் மக்களே அதிகாரத்தைச் செலுத்துதல் என்ற பிரச்சனை தீர்க்கப்பட்டது என்பது அர்த்தமாகாது. எனினும் மாவோவின் சோசலிச சீனத்தில் இதற்காக எடுக்கப்பட்ட முன்முயற்சிகளை நாம் ஒதுக்கிவிட முடியாது. மாவோவின் இந்த விருப்பம் கம்யூன் அமைப்பிலும் கலாச்சாரப் புரட்சி காலத்தில் கட்டப்பட்ட புரட்சிகரக் குழுக்களிலும் செயல்வடிவில் இருந்தது என்பதைப் புறக்கணிக்க முடியாது. கம்யூன், சீனாவின் அரசியல் அதிகாரத்தின் அடிப்படை அலகும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கருவியுமாகும்.

இது ரசிய நடைமுறையிலிருந்து வேறுபட்டது. ரசிய நடைமுறையில் கம்யூன், வெறும் பொருளாதார உற்பத்தி அலகு மட்டுமே. (முதலாளியமும் அதன் பிறகும், ஜார்ஜ்தாம்ஸன்) க. பு., காலத்திய புரட்சி கரக் குழுக்களில் மூன்றில் ஒரு பிரிவாக உறுப்புநிலை வகித்த மக்கள்திரள் அமைப்புகள், கம்யூன் முதல் பிரதேச நிர்வாகம் வரை நிர்வகித்தன (மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை). ஜார்ஜ்தாம்ஸன் க.பு. வின் முதல் ஆவணத்தில் மக்களின் முன்முயற்சியைக் கட்டவிழ்த்து விடும் நோக்கம் இருந்தது. மாவோவின் சீனம், கட்சிக்குள் மட்டுமல்ல மக்களையும் ஈடுபடுத்தி சமூகத் திலும் தொடர்ந்து வர்க்கப் போராட்டத்தை நடத்தியது. இந்த அளவிற்கு ஸ்டாலின் காலத்திய ரசியா ஈடுபட வில்லை. ரசியாவில் கட்சிக் களையெடுப்புகள் நிரம்ப நடந்தன. ஜனநாயக மத்தியத்துவம் (Democratic Centralism) என்பதில் **மத்தியத்துவத்துக்கே** பிரதான அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது. மாபெரும் தொழில் மயமாக்கல் காலம் (1928—1938) யுத்த தந்திரரீதியி லான சோசலிசத் தாக்குதல் காலமாகக் கருதப்பட்ட தாலும் அதற்கு அடுத்த இரண்டாம் உலகப் போர்க் காலம் பாசிச யுத்த எதிர்ப்புக் காலமாக அமைந்து போனதாலும் இத்தகைய மத்தியத்துவம் பயன்படுத்தப் பட்டது என்று இதற்குரிய காரணம் கூறப்பட்டாலும் வர்க்கப் பகைமைகளிலிருந்தும் வர்க்கப் போராட்டத் திலிருந்தும் ரசிய சமூகம் விடுபட்டுப் போயிற்று (மார்ச் 1939) என்ற ஸ்டாலினிய வரையறை, லெனினிய எச்சரிக்கையை உதறிவிட்டிருந்தது. இவரது மத்தியத்துவ நிலைபாடுகளைப் பயன்படுத்தி வளர்ந்த அதிகார வர்க்கம், இதே மத்தியத்துவத்தினால் ஏற்பட்ட மிகைச்செயல்களைக் காரணம் காட்டி பின்னர் தம்மை ஆளும் வர்க்கமாக மாற்றிக்கொள்ள குருச்சேவ் கும்பல் மூலம் முயன்று வென்றது. இதன்பின், கட்சிக் குள் களையெடுப்பு பெரிதும் தேவையில்லாமலே இந்த

மாற்றம் நடந்தேறியது. ஆனால் சீனத்தில் இது எவ்வளவு எளிதாக நடந்தேறவில்லை.

1978இன் இறுதியில்(டிசம்பரில்)சீனம் முதலாளியப் பாதையைத் தன் அதிகாரபூர்வமான பாதையாக்கியது. இதில் உற்பத்தி சக்திக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடு என அறிவிக்கப்பட்டது. வர்க்கப் போராட்டமே கேந்திரக் கண்ணி (Class struggle is the key link) என்பது இனி மேல் பொருந்தாது என்று முடிவெடுக்கப்பட்டு, கம்யூனின் அரசியல் அதிகாரத்தைப் பிரித்து, கம்யூனைச் சுக்கு நூறாக உடைத்து குத்தகைக்கு விடும் முதலாளிய விவசாய முறை புகுத்தப்பட்டது. மாவோ இறந்தகாலம் (செப். 76) முதல் 1978 இறுதி வரையிலும் அதன் உடனடிப் பின்னரும் கட்சி, ஆட்சி, இராணுவம் ஆகிய மூன்று அதிகாரவர்க்க மையங்களுமே பெருத்த மாற்றத் துக்கு உள்ளாயின என்பது குறிப்பிடத்தக்கது. கட்சியில் மேல்நிலை பெற்ற வலதுசாரிகள், கலாச்சாரப் புரட்சிக் காலத்தில் அதிதீவிர இடதுசாரியினரால் நிகழ்த்தப்பட்ட மிகையான செயல்களையே தமது முன்னேறுதலுக்குரிய படிக்கட்டுகளாக்கிக் கொண்டனர். ரசியாவிலும் சீனா விலும் இருந்த முதலாளியப் பாதையாளர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கும் உறுதிப் படுத்திக் கொள்வதற்கும் இத்தகைய அதிதீவிர இடது சாரித் தவறுகளே காரணங்களாகக் கற்பிக்கப்பட்டன. புருஸ்சுமித் சொன்னதைப் போல போர்த்தந்திர நெகிழ்ச்சியின் தேவையை உணர்ந்து கொள்வதில் இத்தகைய அதிதீவிர இடதுசாரி சக்திகள் நம்பிக்கை யற்ற விதத்தில் தோல்வியடைந்தன. இத்தோல்வியே வலதுசாரிகளின்/முதலாளிப் பாதையாளரின் வெற்றிக் குரிய பாதையைத் திறந்துவிட்டது. முதலாளியப் பாதையாளர் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின், படிப்படியாகத் தம் கடையை விரித்தனர்.

இங்கு இன்னொன்றை அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். சோசலிசப் பொருளாதார நிர்மாணக் காலத்தில் ரசியாவிலும் (1928—1955) சீனாவிலும் (1956—1978) உற்பத்தித் துறையிலும் மக்கள் வாழ்வுத் துறையிலும் ஒரு சில ஏற்றத்தாழ்வுகள் இருப்பினும் சீரான முன்னேற்றம் இருந்தது என்பதைக் காணலாம். உற்பத்தி, மக்கள் அனைவரின் தேவைக்கு என்ற நோக்கம் இருந்தது. எனவே முதலாளியப் பாதையாளர்களால் படிப்படியாக அறிமுகமாகி உறுதிப்பட்ட முதலாளிய மீட்சி, சோசலிசப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவினால் அல்ல என்பதை இரண்டு நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக நிலைகள் தெரிவிக்கின்றன. இந்தப் புரிதலுடன் இந்த நாடுகளின் முதலாளிய மீட்சித் தன்மைகளைக் காண்போம். இந்த நாடுகளின் சோசலிச உருவாக்க அம்சங்களில் ஏற்பட்ட வேறுபாடுகள் இவற்றிலும் பிரதிபலிக்கின்றன.

புதிய ஜனநாயகப் பொருளாதாரக் கட்டத்திலிருந்து சோசலிசத்துக்குத் தாவிச் சென்ற இரண்டு நாடுகளும் ஆலைக்கும் விவசாயத்துக்கும் கொடுக்கும் முதன்மை நிலைகளில் வேறுபட்டிருந்தன. கனரகத் தொழில், லேசுரகத் தொழில், விவசாயம் என்ற வரிசைக்கு ரசியாவும் இதன் தலைகீழ் வரிசைக்கு சீனமும் முதன்மை கொடுத்தன. தொழிலுக்குரிய மூலதனத்தை விவசாயிகளின் உபரியிலிருந்தே திரட்டுவதற்கு ரசியா முன்னுரிமை கொடுத்தது. இதனால் கம்யூன்மயமாக்கல் துரிதப்பட்டது. விவசாயப் பொருள்கட்கும் ஆலைப் பொருள்கட்கும் இடையிலான விலை வேறுபாடு, மிகவும் பெருத்திருந்தது. விவசாயிகள் கசக்கிப்பிழியப்பட்டனர். சீனம் விவசாயிகளின் உபரியை மட்டுமின்றி, உற்பத்திப் பெருக்கத்தையும் உற்பத்தித் திறன் மேம்பாட்டையும் சார்ந்திருக்கத் திட்டமிட்டது மேலும் 1958 கம்யூன் முறை கொணரப்படுவதற்கு முன்னரே, கூட்டுறவு

சங்கங்களின் மூலம் விவசாயிகளிடையே கம்யூன் மனோ பாவத்தை உண்டாக்கியிருந்தது. இந்த வேறுபாடுகள் இருப்பினும் சொத்துடைமையில் 3 வகைகள் இருந்தன.

1) அனைத்து மக்களுக்கும் சொந்தமான ஆலை கள், அரசுப்பண்ணைகள்-அதாவது **அனைத்து மக்களின் உடைமை.**

2) கம்யூன் மக்களுக்குச் சொந்தமான கம்யூன் நிலங்கள் —அதாவது **கூட்டுடைமை.**

3) சுய ஆதாரப் பண்ணைகள் (Personal Subsidiary Farms) — அதாவது **ஓரளவுக்குத் தனி யுடைமை.** இது சட்ட ரீதியிலான தனி யுடைமை அல்ல. இதில் விளைவித்த பொருள்களை சுய நுகர்வுக்கு அல்லது சந்தை விற்பனைக்கு வைத்துக்கொள்ளலாம். சந்தை விற்பனைக்கென்று அமைகின்ற பொழுது ஓரளவிற்குத் தனியுடைமையின் சாரம், இதில் வந்து விடுகின்றது.

இந்த மூன்று வகைகளுமே இரண்டு நாடுகளிலும் இருந்தன. இவற்றில் **3வது வகை,** குறிப்பிட்டுச் சொல்ல இயலாத அளவிற்கு மிகச் சிறுபான்மை யெனினும் **விவசாயிகளின் கருத்தியல் அளவில் இதற்கு ஒரு தனித்த இடம் இருந்தது** என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். முதல் இரண்டுவகை வடிவங்களை யும் இரண்டு நாடுகள் அடைந்த வரலாறு சற்று வேறு பாடு கொண்டது. ரசியாவில் முதலில் ஆலைகள் (1917—1921) அரசுடைமையாயின. பின்னர் புதிய பொருளாதாரக் காலத்தில், முதலாளிகட்குக் குத்தகைக்கு விடப்பட்டன. அதன்பின் சோசலிசப் பொருளாதாரத்தில் அரசுடைமையாயின. சீனாவில்

இரண்டு வகை முதலாளிகள் இருந்தனர்; அதிகார வர்க்க தரகு முதலாளிகள் மற்றும் தேசிய முதலாளிகள். தரகு முதலாளிகளின் ஆலைகள் அரசுடைமையாயின தேசிய முதலாளிகளின் ஆலைகள் அனுமதிக்கப்பட்ட தோடு, வளர்க்கப்பட்டன. பின்னர் அரசின் கட்டுப் பாடுடன் இணைந்து கூட்டு நிர்வாகத்தின்கீழ் வந்தன. சோசலிசக் காலத்தில் அரசுடைமையாயின. எனினும் முதலாளிகளின் மூலதனத்துக்கு 1966 வரை வட்டி கொடுக்கப்பட்டு வந்தது.

முதலில் புரட்சிக்குப்பின் இரண்டு நாடுகளிலுமே நிலச்சீர்திருத்தம் நடந்தது. ரசியாவில் பத்தாண்டு களில் (1917—1928) நிலம் விவசாயிகளின் தனி யுடைமையாகவே இருந்தது. 1928 க்குப்பின் விரை வான கூட்டுடைமையாக்கம் நடந்தேறியது. சீனாவில் நிலச்சீர்திருத்தம் நடந்து தனியுடைமையாக நிலம் இருந்த காலம் (1949—1953) குறைவு. விவசாயி களின் பின்னடைந்த உணர்வு கணக்கிலெடுக்கப்பட்டு கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு, இறுதியில் நிலங் கள் கூட்டுடைமையாயின. ஆக சோசலிச சொத் துடைமை வடிவங்களை அடைவதில் இரண்டு நாடு களுக்குமே ஒரு இறுதி பொதுவான இலக்கு இருந்தது எனினும் வெவ்வேறு பாதைகளில் வந்தன. ஆலை களைப் பொறுத்து அனைத்து மக்களுடைமை; நிலத் தைப் பொறுத்து கூட்டுடைமை என்பதில் ஒற்றுமை இருந்தது. தொழிலாளிக்கும் விவசாயிக்கும் இடை யிலான வேறுபாட்டை இது அடிப்படையாகக் கொண்டிருந்தது.

இரண்டு வகையிலான சோசலிச சொத்துடைமை வடிவங்கள் எப்படி முதலாளிய மீட்சிக்குள்ளாயின? ரசியாவில் கனரக ஆலை உற்பத்தியைப் பங்கிட்டுக் கொள்கின்ற சலுகை பெற்ற ஒரு சமூகப் பிரிவினர் இருந்தனர் எனக் கண்டிருந்தோம். குருச்சேவ் காலத்

தில் சிறுபட்டறை, தொழிலகங்கள், சிறுவணிகம் ஆகிய வற்றைத் தனியார் துறைக்குக் கொடுக்கும் முதலாளிய நோக்கிலான சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. இவற்றை நடத்துவதற்குரிய சேமிப்பை இந்த வர்க்கமே பெற்றிருந்தது. மேலும் உற்பத்தியில் தனியார்துறை வகித்த பங்கைவிட அரசுத்துறையே அதிகம் வகித்தது. அதன் உற்பத்திப் பொருளை இவர்களே அதிகமாக நுகர்ந்தனர். அதே நேரத்தில் தனியார் துண்டு நிலங்களுக்குரிய வரி குறைக்கப்பட்டது; அதன் அளவு அதிகரிக்கப்பட்டது. விளைச்சலில் அரசின் பங்கு நீக்கப்பட்டது. பிரெஸ்னேவ் காலத்தில் இணைப்பு ஆலைகள் உருவான பின் இவற்றின் நிர்வாகிகள், தொழில் நுட்ப வல்லுநர்கள் உற்பத்தியின் கணிசமான பங்கைப் பயன்படுத்திக் கொண்டனர். எனவே வலுமிக்க அரசு முதலாளியம் ரசியாவில் இருந்தது. இக்காலத்தில் (1956—1976) அனைத்து மக்களுக்குமான அரசுடைமை பெயரளவில் இருந்தது என்பது உண்மையே. இது போலவே கூட்டுடைமை என்பதும் இருந்தது. தொழிலாளர்கள் கூலி உழைப்பில் ஈடுபட வேண்டியிருந்ததன் விளைவாகவும் விவசாயிகள் முதலாளிய முறையிலான கூலி விவசாயிகளாக ஆனதன் விளைவாகவும் உற்பத்தி நேரடியாக அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடந்ததனாலும் சோசலிச சொத்துடைமை அதிகார வர்க்கத்துக்கான அரசு முதலாளிய உடைமையாக இழிந்து போயிற்று. இதற்குப் பிற்காலத்தில் கோர்ப்சேவ் சிறு அரசுடைமை ஆலைகளையும் கம்யூன் நிலங்களையும் நீண்ட காலத்துக்குக் குத்தகை விடும் முறையைக் கொணர்ந்தார். பெரிய அரசுடைமை ஆலைகளில் தொழிலாளர்களைப் பங்குதாரர் முறையையும் கூட்டுப் பங்கு நிறுவன முறையையும் கொண்டு வந்தார். இவையோடு மட்டுமின்றி, பன்னாட்டு முதலாளிகளுடன் இணைந்து மூலதனம் இடுமுறையும் அனுமதிக்கப்பட்டது. இது தனியார் முதலாளியக் காலமாகும் (1980—இன்றுவரை).

சீனம் இவ்வளவு சிக்கலான பாதையின் ஊடாக முதலாளிய மீட்சிக்குரிய வடிவத்தைப் பெறவில்லை. சீனாவின் முதன்மை ஆதாரமான கம்யூன் கூட்டுடைமை குத்தகை உடைமையாக்கப்பட்டது. கிராமப்புற பணக்கார விவசாயக் குடும்பத்தினரும் கம்யூன் நிர்வாகிகளும் பயன்பெற்று, சிறப்புநிலைக் குடும்பத்தினர் ஆயினர். கைவினைத் துறையில் கூட்டுடைமை உடைக்கப்பட்டு, சிறு நிறுவனம் வைத்துக்கொள்ளும் உரிமை கொடுக்கப்பட்டது. இது தனியாருக்கே பயன்பட்டது. சிறிய அளவிலான அரசுடைமை ஆலைகள்,குத்தகைக்கு விடப்பட்டன.. பெரிய ஆலைகளில் பங்குதாரர் முறை அறிமுகப்படுத்தப்பட்டு, கட்சி/ஆட்சி நிர்வாகிகளும் தனியார்களும் பயன்பெற்று வருகின்றனர்.

இரண்டு நாடுகளிலும் இன்றைக்குப் பெயரளவில் அரசுடைமை—செயலளவில் தனியுடைமை என்ற நிலையிலிருந்து எல்லா அளவுகளிலும் தனியுடைமை என்ற நிலையை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதைக் காணலாம். எனவே நிலத்தில் தனியுடைமை என்பது கூட்டுடைமையின் மூலம் அனைத்து மக்களுடைமையாவது என்ற நிலை மறுக்கப்பட்டு மீண்டும் தனியுடைமை தோன்றியுள்ளது. ஆலைத்துறையில் தனியுடைமை என்பது நேரடியாக அனைத்து மக்களுடைமையான நிலை மறுக்கப்பட்டு, மீண்டும் தனியுடைமை தோன்றியுள்ளது.மொத்தத்தில் நிலத்திலும் ஆலையிலும் தனியுடைமை நிலை நிறுத்தப்பட்டுள்ளது. அதாவது முதலாளிய முறையிலான உற்பத்திமுறை நிறுவப்பட்டுள்ளது.

இத்தகைய மீட்சிக்குப் பின்னர் உலகில் ஒரே பொருளாதார முறை இருக்கின்றது—முதலாளிய பொருளாதார முறையே அதுவாகும். முதலாளிய மீட்சியடைந்த இந்நாடுகளின் இன்றைய நிலை என்ன?

1) உள்நாட்டில் வர்க்க வேறுபாடுகள் மிகவும் பெருத்துள்ளன.

3) பெருமளவிலான மக்களின் வாழ்க்கைத்தரம் மிக்வும் சரிந்துள்ளது. (எ-டு) போலந்தில் 30 சதம் முதல் 40 சதம் வரை குறைந்துள்ளது.

3) உணவு தானியம் இறக்குமதி செய்யப்படும் நிலை தொடர்ந்து உள்ளது.

4) பெரும்பாலான ஆலைகள் நெருக்கடிக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன. (எ-டு) போலந்தில் 50 சதவீத ஆலைகள் உடனடி நிதி உதவி இல்லையெனில் மூடும் அபாயத்தில் உள்ளன. அரசுடைமை ஆலைகளே திவாலா வாகிப் போவதை சட்ட ரீதியாக ஏற்கும் முறை சீனத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது.

5) தொழிலாளர்கள் மீது கடுமையான சட்டங் களைப் பயன்படுத்துதல் அதிகரித்துள்ளது. ஊதிய வெட்டுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் தொழிலாளர், உபரியாகி வேலை இழக்கும் நிலையில் உள்ளனர். இதனால் தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் பெருத்துள்ளன. குறிப் பாக ரசியாவில் 1989இல் மட்டும் 80 லட்சம் வேலை நாட்கள் இழக்கப்பட்டுள்ளன.

6) சிறு தொழிலகங்கள் மூடப்பட்டுள்ளன (எ-டு) போலந்தில் 60000—70000 என்ற அளவில் மூடப்பட்டுவிட்டன.

7) வேலையின்மை பெருத்துள்ளது. (எ-டு) சீனா வின் ஷாங்காய் நகரில் மட்டும் 25 லட்சம் பேர் வேலையின்றி அலைகின்றனர். போலந்தின் 1.6 கோடி மக்கள் தொகையில் 1 மில்லியன்

மக்கள் வேலையின்றி உள்ளனர். இது 3 மில்லியனாக உயரும் என மதிப்பிடப்படுகிறது.

8) அன்னிய நாடுகளின் கடன் சுமை மிகவும் அதிகமாகப் பெருத்துக் கொண்டு வருகிறது. 1989ஆம் ஆண்டு இறுதிக் கணக்கின்படி ரசியா-50 போலந்து 40, கிழக்குசெர்மனி 22, அங்கேரி20,பல்கேரியா 10பில்லியன் டாலர்கள் கடனாகப் பெற்றுள்ளன எனத் தெரிகிறது.

முதலாளியத் தொழுநோய்க்கு உரிய அனைத்துப் பொருளாதார விளைவு நீக்கமறப் பெற்றிருக்கும் இந்த சமூகங்கள் அதன் அரசியல் விளைவுகளிலிருந்து தப்ப நினைத்தல் மட்டும் சாத்தியமா?

அது சாத்தியமில்லை என்பதையே இன்றைய வரலாறு நிரூபித்துக்கொண்டிருக்கிறது. முதலாளியப் பொருளாதாரத்துக்கு இரண்டு அரசு வடிவங்கள் உண்டு. ஒன்று, **முதலாளிய சர்வாதிகாரம்**; இரண்டாவது, **முதலாளிய ஜனநாயகம்**. இதுவரை முதலாளிய சர்வாதிகாரத்தின் கீழ் இருந்த இந்த நாடுகளில் இப்பொழுது சனநாயகக் கிளர்ச்சி முடிந்து முதலாளியப் பாராளுமன்ற முறை ஏற்பட்டுள்ளன. சில நாடுகளில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன ரசியாவில் ஆட்சியாளர்களே முதலாளிய சீர்திருத்தங்களை **மேலிருந்து அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்**. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட மக்கள் எழுச்சிகளின் பொழுது அந்த நாடுகளுக்கு இராணுவ உதவி அளிக்க மறுத்ததன் விளைவாக மக்கள் எழுச்சிகளை ரசியா ஆதரித்துள்ளது. எழுச்சிகளின் பின்னர் ஏற்பட்ட முதலாளிய ஜனநாயக அரசுகளுடன் ரசியா நல்லுறவு கொண்டுள்ளது, **கீழிருந்து** கிளம்பிய மாணவர் கலகத்தை டெங்கின் சீனம் **கோரமாகச் சிதைத்த** பொழுது ரசியா அதுபற்றி எதுவும் பேச

வில்லை. மனித நேயத்தை உலகில் பரப்ப அவதார மெடுத்துள்ள அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் சீனத்தை செல்லமாகக் கண்டித்துள்ளன. சீனமோ எந்த முன்னாள் சோசலிச நாடோ தன் முதலாளிய சர்வாதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள மனித உயிர் களைப் பலிவாங்கிக் கொண்டிருக்கும் போக்கை நாம் எந்தவிதச் சொற்களாலும் கண்டிக்கத் தயங்கக்கூடாது. எனினும் முன்னாள் சோசலிச நாடுகளில் ஏற்படும் எழுச்சிகள் குறித்து நாம் பருண்மையாக அணுக வேண்டியுள்ளது. இந்த நாடுகளை ஆளுகின்ற சக்தி கள் நீடித்தலுக்குரிய அறவியல் நியாயத்தை முற்றிலும் இழந்து போய்விட்டன என்பது மிகவும் உண்மை. அதற் காகவே இந்த அதிகாரத்துவத்தை எதிர்த்த எல்லா சக்திகளையும் வரவேற்பதா என்பதே கேள்வியாகும். அண்மையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடை பெற்ற மக்கள் எழுச்சிகளின் பின்னால் ஆதிக்கம் செலுத் தும் சக்தியாக முதலாளியம் இருந்ததை அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர் (Karrim Essack, Frontier, 23—6—1990, p. 11).

சென்ற ஆண்டு மே, ஜூன் மாதங்களில் சீனாவில் நடந்த மாணவர் போராட்டத்தில் தொழிலாளர், மக்கள் ஆகிய தரப்பினர் கலந்து கொண்டிருப்பினும் போராட் டத்தின் தலைமையும் ஆதிக்கம் செலுத்தும் சக்தியும் அதன் கோரிக்கைகளும் முதலாளிய ஜனநாயகத்துக்கு உட்பட்டே இருந்தன. மேற்குலக தாராளவாத சிந்தனை யின் எல்லைக்குட்பட்டு இயங்கிய இந்தப் போராட்டம் கட்சியின் தலைமையிலான சர்வாதிகாரப் போக்குக்கு எதிராகக் கருத்துகளை முன்வைத்து பன்முகத் தன்மை கொண்ட ஒரு குழுவைப் பரிந்துரைப்பதாக இருந்தது. எந்தவித ஜனநாயகமும் இல்லாதபொழுது முதலாளிய ஜனநாயக உரிமையைக் கோருதலை வரவேற்பதா இல் லையா? என்பதே இப்போதைய கேள்வியாகும். இதை

அந்தக் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டமைப்புக்குள் வைத்துக் காண வேண்டும். நிலவுடைமை ஆட்சிக் காலத்தில் எழுச்சி பெற்ற முதலாளிகளின் ஜனநாயகக் குரலை—நிலவுடைமை அரசதிகாரம் முறியடிக்கும்பொழுது எழும்பும் ஜனநாயகக்குரலை உயர்த்திப் பிடிப்பது சாதனையாகவும் சரியானதாகவும் இருக்கவியலும். புரட்சி வெற்றி பெற்று சோசலிசப் பொருளாதாரம் கட்டியமைக்கப்பட்டு அதன்பின் முதலாளியப் பாதையாளர்களால் முதலாளிய மீட்சிநிலை பொருளாதாரத்தில் கொணரப்பட்டு முதலாளிய சர்வாதிகாரம் மூலம் அது நிலை நாட்டப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது முதலாளிய மீட்சியின் பொருளாதாரப் பாதை குறித்து எவ்வித விமரிசனமும் இன்றி முதலாளிய ஜனநாயகக் குரலை எழுப்புவது சாதனையாகக் கருதப்பட முடியுமா? பொருளாதார ரீதியில் கொண்டுவரப்பட்ட முதலாளிய அரசியல் ரீதியில் பரப்பி உறுதிப்படுத்தக் கூடிய முதலாளிய மீட்சியின் இரண்டாவது கட்டமாகக் கருதப்பட வேண்டுமா? நிலவுடைமைக் காலத்தில் எழுப்பப்பட்ட முதலாளிய ஜனநாயகக் குரலுக்குரிய முற்போக்குத் தன்மையை இதனுடன் இணைப்பது சரியாக இருக்குமா? சரியாக இராது.

இது சோசலிசத்தின் பின்னடைவையும் வீழ்ச்சியையும் அங்கீகரிக்கும் செயலாம். இது முதலாளிய மீட்சிக்குரிய சமூகத்தை ஜனநாயக ரீதியில் ஆள்வதற்குரிய வடிவத்தைக் கோருதலாகும். எனவே முன்னாள் சோசலிச நாடுகளில் ஏற்படும் போராட்டங்கள் அனைத்தையும் எவ்வித விமரிசனமின்றிப் பார்ப்பதும் அவற்றின் கோரிக்கைகளை வரலாற்றுக் கட்டமைப்பில் காண மறுப்பதும் அரசியல் நியாயமாகாது. முதலாளிய மீட்சி அடைந்த நாடுகளில் முதலாளிய சர்வாதிகாரத்தை உடைத்தெறிந்து முதலாளிய ஜனநாயகத்தைப் பெற்ற பின்னரே—அல்லது அதன் ஊடாகவே—மீண்டும் ஒரு

சோசலிச சமூகத்துக்கான போராட்டங்களை நடத்த முடியும் என்பதை நாம் முன் நிபந்தனையாக வைக்க வேண்டுமா என்பதை இன்னமும் நமக்கு வரலாறு தெளிவுபடுத்தவில்லை. ஆனால் இதுவரை நடந்த சோசலிசப் புரட்சிகள் இராணுவ சர்வாதிகாரத்தை வீழ்த்தி நடந்த புரட்சிகளாகவே இருந்தன என்பதையே வரலாறு நமக்குத் தெரிவிக்கின்றன. எனவே முன்னாள் சோசலிச நாடுகளில் முதலாளிய ஜனநாயகத்தை வலியுறுத்தி நடைபெறும் போராட்டங்கள், முதலாளிய மீட்சியை முழுமைப்படுத்தும் பங்கை புறநிலையில் ஆற்றுகின்றன. அது மட்டுமல்ல சோசலிச வீழ்ச்சி குறித்த கருத்தியலை உலகளாவிய முறையில் பரப்பு கின்றன. சர்வதேச முதலாளிய வெகுசன ஊடகங்கள் இதனால்தான் இவற்றுக்கு அதிகபட்ச மரியாதையைக் கொடுக்கின்றன. எனவே முதலாளிய மீட்சி பெற் றுள்ள முன்னாள் சோசலிச நாடுகளின் முதலாளிய சர்வாதிகாரத்தை எதிர்த்த போராட்டங்களைப் பருண் மையாகவும் வரலாற்றுக் கட்டமைப்புக்கு உகந்த விதத் திலும் காண வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த ஆட்சியாளர்களின் முதலாளிய மீட்சிக்குரிய முதலா ளியப் பாதையை விமரிசனத்துக்கு உட்படுத்தும்/எதிர்க் கும் போக்கிலான போராட்டங்களை வரவேற்க முடியும். அத்தகைய நோக்கிலான போராட்டங்கள் சாத்தியம் என்பதை இன்றைக்கு ரசியாவில் சில தொழிலாளர் அங்கங்கள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. மாவோ ஒரு முறை சொன்னதைப் போல 'மக்கள் எதிர்ப் புரட்சி யில் நிறைவு கொள்ளாமல் உறுதியாகப் புரட்சியில் எழுந்து நின்று எதிர்ப்புரட்சியை தூக்கி எறிவர்' (24-9-1962) இது நமது நம்பிக்கையில்லை. மனித குலத்தின் விடுதலைக்கான தத்துவம் என்ற விதத்தில் கம்யூனிசக் கோட்பாடுகள் வெற்றி பெறும் என்பது விஞ்ஞானம்; வெறும் நம்பிக்கையல்ல. ஆனால் அதற் குப் அடிப்படை வேண்டுமல்லவா? சீனத்தின் கிராமங்

களை அண்மையில் ஆய்வு செய்த அறிஞரின் படப்பிடிப்பு :

கடந்த பத்தாண்டு காலமாக மாவோவின் பெயரை இருட்டடிப்பு செய்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் கட்சிக் குழுக்களின் அலுவலகங்களிலிருந்து மாவோவின் படத்தை அப்புறப்படுத்தும்படி கட்டளையிடப்பட்டது. சென்ற ஆண்டில் பெய்ஜிங் பல்கலைக் கழகத்தில் மாவோவின் சிலையை உடைக்கக் கட்டளையிட்டனர். தீன்ஆன்மென் சதுக்கத்தைத் தவிர வேறு எங்கும் மாவோ காணப்படவில்லை. இதற்கிடையில் பெய்ஜிங்கில் லியோவின் சிலை அமைக்கப்பட்டது.

இவையெல்லாம் இருப்பினும் மாவோவின் படங்களும் உருவச்சிலைகளும் இலட்சக்கணக்கான விவசாயிகளின் — தொழிலாளர்களின் வீடுகளிலும் கட்சிக் குழுக்களின் அலுவலகங்களிலும் காணப்படுகின்றன. பலர் இவ்வாறு கூறுவதைக் கேட்கிறேன். ''அந்தக் கிழவர் சரியானவர்''. ஆம்! இறுதி அத்தியாயம் இன்றும் எழுதப்படவில்லை எனத் தோன்றுகிறது (Monthly Review; March 89).

வில்லியம்ஹின்டன் கூறுவது போல இறுதி அத்தியாயம் இன்னும் எழுதப்படவில்லை. அந்த அத்தியாயத்தை நிச்சயம் மனித குலத்தின் விடுதலைக்குரிய தத்துவமே எழுத இயலும். அது கம்யூனிசத்தைத் தவிர வேறு எதுவுமில்லை.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 13 | 5 | jenceine | genuine |
| 23 | 22 | ரூபாயின் | ரூபிளின் |
| 46 | 5 | Form | Farm |
| 56 | 2 | பணி | பண |
| 60 | 16 | கருத்தியப் | கருத்தியல் |
| 75 | 4 | சுவரொட்டி | சுவரொட்டியில் |
| 79 | 10 | அகலய | அகவய |
| 92 | 10 | Gritique | Critique |
| 105 | 1 | சாவீதக் | சதவீதக் |
| 106 | 4 | சீனத்திம் | சீனத்தில் |
| 112 | 9 | காணக்கை | கணக்கை |
| 117 | 29 | என்ற | என்றே |
| 126 | 12 | $\frac{1}{2}$ | , |
| 128 | 10 | விளைவு | விளைவுகளைப் |
| 130 | 15 | முதலாளிய | முதலாளியத்தை |

/

நமது அடுத்த பரம்பரை
திருத்தல் வாதத்தில் மூழ்கி...
பெயரளவில் சோசலிசத்தையும்
உண்மையில் முதலாளியத்தையும்
கொண்டிருப்பினும்—அதற்கு
அடுத்தப் பரம்பரையினரான
நம் பேரக்குழந்தைகள்
அதில் நிறைவுறாமல் புரட்சியில்
உறுதியாக எழுந்து நின்று
தம் தந்தையரைத்
தூக்கி எறிவர்.

— மாசேதுங்